Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (14.08.2012) பக்கங்கள் 20 ஓசை - 317




















# தமிழகத்தில் மட்டும் மாநாடுகள் பலன் இல்லை என்கிறார் பஸ்வான்



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தமிழகத்தில் மட்டும் மாநாடுகள் நடத்துவதனால் எவ்வித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை எனவும் மாறாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இந்திய மத்திய அரசு செயற்படும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தியாவிலுள்ள மாநிலங்கள் அனைத்திலும் டெசோ மாநாட்டை நடாத்தி, இந்திய மக்களுக்கு உண்மையான நிலைமையைப் புரிய வைக்கவேண்டுமென லோக்ஜன சக்தி கட்சியின் தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாட்டில் (டெசோ) கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஈழத்தமிழர் என்றால், விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள் என்றே இந்தியாவின வட மாநிலங்களில் உள்ளவர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## இறக்குமதி வரி அதிகரிப்பு

நேற்று நள்ளிரவு முதல் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கிழங்கு ஒரு கிலோவிற்கான இறக்குமதி வரி 10 ரூபாயிலிருந்து 30 ரூபா வரையும் பெரிய வெங்காயம் 25 ரூபாயிலிருந்து 50 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனிதாபிமான உதவிக்கு ஐ.நா.விடம் நிதி இல்லை

இலங்கையிலுள்ள ஐ.நா. நிறுவனங்கள் வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான உதவியை தொடர்வதற்கான போதிய நிதியை பெற முடியாமல் திண்டாடுவதாக ஐக்கிய நாடுகள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மனிதாபிமான பணிகளை முன்னெடுக்க 147 மில்லியன் (டொலர்) நிதியை கொழும்பிலுள்ள ஐ.நா. பணிமனை கேட்டிருந்தது. எனினும் கோரிய உதவியில் 18.4 சதவீதம் மட்டுமே கிடைத்துள்ளது. முன்னர் இலங்கைக்கு உதவி வழங்கியவர்கள் இப்போது இலங்கைக்கு

19 ஆம் பக்கம் பார்க்க


## உயர்தர பரீட்சை வினாத்தாளில் நேற்றைய தினமும் குளறுபடிகள்

தற்போது உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்கள் மேலும் மேலும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர். இதன்படி நேற்றைய தினம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையின் பௌதீக விஞ்ஞானம் பகுதி 2 வினாப்பத்திரத்திலும் திருத்தங்கள் செய்யப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றஞ் சாட்டியுள்ளார். கடந்த வாரம் உயர்தரப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டது முதல் நேற்று வரை

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறுதொழில் முயற்சியாளர்கள் இலகு கடன் பெறுவதற்கு ஏற்பாடு

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாகத் தெரிவு செய்யப்பட்ட சிறுதொழில முயற்சியாளர்கள், தமது தொழிலை விருத்தி செய்யும் வகையில் வங்கிகள், மற்றும் நிதிநிறுவனங்களூடாக இலகு கடன்களைப் பெற்றுக்கொள்ளவதற்கு வசதிகள் எற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலகு கடன்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான செயற்றிட்டக் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## நண்டுக்கறி உண்டவர் மரணம் குடும்பத்தினருக்கு தொடர் சிகிச்சை

நண்டுக்கறி சாப்பிட்டவர்கள் குடும்பத்தினருடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் நேற்று மாலை மரணமடைந்துள்ளார். உபரப்புலம் இளவாலையைச் சேர்ந்த இக் குடும்பத்தினர் கடந்த ஒன்பதாம் திகதி தமது வீட்டில் நண்டுக் கறி சமைத்துச் சாப்பிட்டனர். பின்னர் இவர்கள் அனைவருக்கும் மயக்க நிலை ஏற்படத்தொடங்கியதைத் தொடர்ந்து அனைவரும் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். நேற்று மாலை இக்குடும்பத்தைச் சேர்ந்த சபாரட்ணம் பூமணி (வயது-46) என்பவர் மரணமானார்.

## நீதிமன்றில் ஆஜராகுமாறு அமைச்சர் றிசாட்டிற்கு உத்தரவு

மன்னார் நீதவான் ஏ.ஜூட்சனை அச்சுறுத்திய வழக்குத் தொடர்பாக நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையொன்றில், அமைச்சர் றிசாத் பதியுதீனை வரும் 27 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு பாணந்துறை நீதவான் திசாநாயக்கவினால் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின்போது அமைச்சர் றிசாத் பதியுதீனினால் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மன்னார் நீதவான் ஏ.ஜூடசன் நீதவான் திசாநாயக்க முன்னிலையில் தோன்றி சாட்சியமளித்தார். தன்னை அமைச்சர் றிசாத் பதியுதீன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தியதாகவும், அவரது குரல் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும், இதற்கு முன்பும் அவர் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் என்பதால் அவரது குரலை நன்கு அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாகவும் நீதவான் ஜூட்சன் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இரண்டாம் முறையாக அமைசர் தன்னை அச்சுறுத்தியபோது, அவர் பேசியதை அந்த நேரம் தனது அருகில் இருந்த சட்டத்தரணிகள் சிலர் கேட்கும்படி செய்ததாகவும் குறிப்பிட்டார். இந்த வழக்கை விசாரணை செய்த சி.ஐ.டி.யினர் சாட்சியமளிக்கையில் அமைசசர் றிசாத் பதியுதீன், அவரது சகோதரர், மன்னார் நீதவான் ஜூட்சன் ஆகியோரின் வாக்கு மூலங்களைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரின் கேள்விக்கு என்ன பதில் கேட்ட தூதுவரின் பதவி பறிபோனது




தமிழர் விவகாரத்தில் அடுத்து என்ன என்ற தமிழர்களின் கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கேட்டதால், தன்னை பதவியில் இருந்து அரசாங்கம் மீள அழைத்துள்ளதாக மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் கல்யாணந்த கொடஹே தெரிவித்தார்.

இது குறித்து பி.பி.சி.குக் கருத்துத் தெரிவித்த தூதுவர் கொடஹே ஜே.ஆரின் அனைத்துக் கட்சிக் கூட்டம், திம்பு பேச்சுவார்த்தை, பிரேமதாஸ - புலிகள் பேச்சுவார்த்தை, சந்திரிகா மற்றும் ரணில் விக்கிரம சிங்கவின் அமைதி முயற்சிகள ஆகியவற்றைத் தொடர்ந்து, தற்போதைய அரசாங்கம் அனைத்துக் கட்சிக் குழு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றைக் காண்பித்தது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் நாடாளுமன்றதில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் அடுத்தது என்ன என்று தமிழ

19 ஆம் பக்கம் பார்க்க



# சிதைந்து போன தேசத்தினைக் கட்டியெழுப்ப அணி திரள்வோம்



(யாழ்ப்பாணம்)

முப்பது வருடகால யுத்தத்தினால் அழிந்து போன எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டுமென வலி.கிழக்கு பிரதேச எதிர்க் கட்சித்தலைவரும், ஈ.பி.டி.பியின் வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச அமைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச மக்கள் சபைக்கூட்டம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் அலுவலகத்தில் நடைபெற்றவேளை தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் கடந்த முப்பது வருடகால யுத்தத்தினால் அழிந்து போன எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய முடியும். எதிர்காலத்தில் எமது மக்களுக்கு வளமான வாழ்க்கையினை அமைக்க முடியும். கிராமப்புறங்களில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும் என்பதுதான், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும், நாடாளுமன்ற உறுப்பினர்களினதும், எமது கட்சியினதும் எதிர்பார்ப்பாகும்.

சில பொது அமைப்புக்களின் குறைபாடுகள் தொடர்பாக மக்கள் சபை உறுப்பினர்களாகிய நீங்கள் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளீர்கள். அக்குறைபாடுகள் தொடர்பாக அதனைச்சார்ந்த அதிகாரிகளின் கவனத்திற்கும், அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒருசில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயநல அரசியலுக்காக பொது அமைப்புக்களில் இருந்துகொண்டு அந்தக் கிராமங்களில் வாழ்கின்ற பாமரப்பட்ட மக்களுடைய வாழ்க்கையினை மேம்படுத்தவிடாது, அம்மக்களைக் குழப்பத்திற்கு உள்ளாக்குவதனை கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

வடக்கின் வசந்தம் ஊடாக மின்சாரம் அற்ற பிரதேசங்களான அச்செழு பூலசிட்டி, கொலனி, போயிட்டி, ஊரெழு கிழக்கு, ஆனந்தகானம், இருபாலை தெற்கு, ஆகிய கிராமங்களுக்கு மின்சாரத்தினைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம், மேலும் மின்சாரம் அற்ற சில கிராமங்களுக்கு மிக விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.


## பெயர் மாற்றம்

கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கைச் சேர்ந்த கணபதி திலகவதி ஆகிய நான் எனது பெயரினை 07.08.2012 ஆம் திகதியிலிருந்து அரியநாயகம் சகுந்தலாதேவி என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

அரியநாயகம் சகுந்தலாதேவி
உடுவில் கிழக்கு.
(C/1691)


## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்






வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்ததானம் வழங்குவதைக் காணலாம். (104)

## கேள்வி அறிவித்தல்

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான**
**புறநெகும உள்ளூர் பிரதேச கிராமிய சிறுநகர அபிவிருத்திக்கான**
**ஆரம்பம் (கடன் இல:4728LK)**

## வேலணை பிரதேசசபை

**வேலணை துறையூர் மீன் சந்தை நிர்மாணித்தல்**
**ஒப்பந்த இல: PN/NP/J/VLPS/W/04**

01. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு, உலக வங்கியிடமிருந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான புறநெகும உள்ளூர், பிரதேச் கிராமிய சிறுநகர அபிவிருத்திக்கான ஆரம்பம், கடனைப் பெற்றுள்ளதுடன், இக்கடனின் ஒரு பகுதி வேலணை துறையூர் மீன் சந்தை நிர்மாணித்தல் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள

02. தலைவர், உள்ளூர் ஆட்சி மன்ற பெறுகைக்குழு, வேலணை பிரதேச சபை, வட மாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வேலணை பிரதேசசபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: - 021-321 2741) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 05.09.2012 வரை காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், வேலணை பிரதேசசபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 14.08.2012ஆம் திகதியிலிருந்து 05.09.2012 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் சேவை நாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாதகட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், வேலணை பிரதேசசபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 05.09.2012 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்வி தாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 77 (ஏழுபத்து ஏழு-21.11.2012) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.)Min | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| PN/NP/J/VLPS/W/04 | வேலணை துறையூர் மீன்சந்தை நிர்மாணித்தல் | Rs. 8.750 | 5 மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் | Rs. 90.000.00 | 19.12.2012 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வேலணை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 28.08.2012 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் ஆட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**
**10.08.2012**

(C/1707)

# சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை வடமராட்சியில் 218பேருக்கு எதிராக வழக்கு

## மதுவரித்திணைக்கள அதிகாரி

(வடமராட்சி)

வடமராட்சி பகுதியில் இவ் வருடத்தில் 6 மாதகாலப்பகுதியில் சட்ட விரோத மதுபானம் மற்றும் புகைப் பொருள் நடவடிக்கையால் பலர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தியதாக வடமராட்சி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.அசோகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் ஜனவரி முதல் யூலை வரையான காலப்பகுதியில் மதுவரித் திணைக்களத்தின் சட்டதிட்டங்களை மீறி சட்டவிரோத மதுபான வகைகள் மற்றும் புகைப் பொருள் விற்பனை செய்தவர்களை கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் 218பேர்களுக்குஎதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வடமராட்சிப் பகுதி ஒரு சில வர்த்தகநிலையங்கள் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைப்பொருள்களை விற்பனை செய்து வருவதையடுத்து மதுவரித்திணைக்கள உத்தியோகத்தரின் திடீர் சோதனையிலும் பல வர்த்தகர்கள் பிடிக்கப்பட்டனர்.

21வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு விற்பனை செய்யும் வர்த்தகநிலையங்களுக்கு எதிராகவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளளோம். கடந்த யூலை மாத இறுதிப் பகுதியில் ஒருவாரத்திற்குள் வயது குறைந்தவர்களுக்கு சிகரட் விற்பனை செய்தவர்களில் மாத்திரம் 86 வர்த்தகர்களை கையும் மெய்யுமாக கைது செய்து நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளோம். மேலும் எமது பிரதேசத்திலுள்ள இளம் வயதினரின் சிகரட்பாவனையை கட்டுப்படுத்தி ஆரோக்கியமுள்ள ஓர் சிறந்த சமூகமாக உருவாக்கவும் வயது குறைந்தவர்களுக்கான சிகரட் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பான சரியான தகவலகளை தந்துதவுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# பேருந்து தரிப்பிடம் எப்போது புனரமைப்பு?

(வடமராட்சி)

வடமராட்சி மாலுசந்தி பேருந்துத்தரிப்பிடம் மிக நீண்ட காலமாக திருத்தப்படாமல் இன்றோ நாளையோ விழும் நிலையில் மிக ஆபத்தாக காட்சி அளிக்கிறது. அதிக பயணிகள் ஒன்று கூடும் இந்தத் தரிப்பிடத்தை புனரமைக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. வெயில், மழை காலங்களில் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் பிரயாணத்துக்கு பயணிகள் காவல் நிற்கின்றனர்.

குழந்தைகளுடன் செல்லும் பெற்றோர் நிழலைத்தேடி அருகில் உள்ள வர்த்தக நிலையங்கள் மர நிழல்களில் ஒதுங்குவதை அவதானிக்க முடிகிறது. எனவே உரியவர்கள் பேருந்து தரிப்பிடத்தை வெகுவிரைவில் புனரமைப்பு செய்து வரும் மழை காலத்திலாவது பயணிகள் நிம்மதியாக போக்குவரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் மென பிரயாணிகள் எதிர்பார்க்கின்றனர். (150)

## வரகு சாட்டி வீதி புனரமைப்பு

(ஆனைக்கோட்டை)

வலிதென்மேற்கு பிரதேச சபையினால் ஜே/144 நவாலி வடக்கு வரகு சாட்டி வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. புனரமைப்புக்கான ஆரம்ப வேலையின் முதலாவது அடிக்கல்லை வலி தென் மேற்கு பிரதேச சபை தவிசாளர் நாட்டி வைத்தார்.

இவருடன் உபதவிசாளர் க.சிவகுமாரன், கௌரிகாந்தன், ஈ.பி.டி.பி உறுப்பினர் எஸ்.ஜே.செல்வராசா, க.நடராஜா, மானிப்பாய் தொகுதி ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஜோன்சன் அன்ரன் ஜீவா மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். (104)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் மாம்பழத்திருவிழாவான இன்று மாலை 6.45 மணிக்கு திருமதி.தாரணி ராஜ்குமாரின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் எஸ்.கமலதாஸ், கடம் ஆர்.சிவராமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் இன்று குறிஞ்சிக்குமரன் என்னும் விடயம் பற்றி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் தெல்லிப்பளை பன்னாலை ஸ்ரீ கணேசா அறநெறிப்பாடசாலை, நீர்வேலி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்துறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடத்திவரும் "தெய்வீக பேருரைகளும் கலை நிகழ்வுகளும" தினமும் 6.30 - 8.00 மணி வரை நடைபெறுவதில் இன்று "காதலென்றதுவும் ஓர் கள்ளியின் தோற்றமாம்" என்ற தலைப்பில் மொழியும் வள்ளல் பராரதீஸ் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

நல்லூர் மகோற்சவ காலத்தை முன்னிட்டு SOND நிறுவன அனுசரணையுடன் சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரை 18ஆம் திகதி வரை இடம் பெற்வுள்ளது. நல்லூர் வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்திலே சின்மயாமிஷனின் ஆன்மிக அருளுரை நடைபெறவுள்ளது. ஆனமிக அருளுரையினை சின்மயா மிஷன் வடமாகாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மசாரி ஜாக்ரத சைதன்யா வழங்கவுள்ளார்.

சைவ மகாசபை நடாத்தும் இசைப் பேருரை தொடரில் நல்லை ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா வழங்கும் கந்தபுராண சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. அதே போல் மனோண்மணி அம்மன் ஆலயத்திலும் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (42)

# நல்லூர் முருகனுக்கு இன்று ஒரு முகத்திருவிழா



## உள்ளம் உருகுதையா!

நல்லை நகர் நல்லூரான் - உன்னை
நாடிவந்தோர்க்கு நலம் தாருமையா
உள்ளமது உன் பெயரே கூற - வேலா
எனது உள்ளமது உருகுதையா தானாய்

-எஸ்.வி.பிரசாத்-

## மாங்கனியின் மீது என்ன மோகம்?

ராகம்: சக்ரவாகம் தாளம்: ஆதி

பல்லவி

மாங்கனியின் மீதிலென்ன மோகம் - நீல
மயிலேறிப் பறந்ததென்ன வேகம்!
(மாங்கனி)

அநுபல்லவி

ஓங்குபுகழ் நல்லைநகர் முருகா - இந்த
ஒரு பழந்தான் நீயுவக்கும் பொருளா!
(மாங்கனி)

சரணம்

நாங்கள் நல்லைக் கோயில் வலம்வந்தோம் - உன்னை
நாளும் பொழுதும் வணங்குகின்றோம்
தாங்கி எமை ஆண்டுகொள்ள வேண்டும் - உன்
தாள் பிடித்தோம் வாழ்வுதர வேண்டும்
(மாங்கனி)

வண்ணவண்ண வாகனங்கள் மீது - நீ
வரும் அழகைச் சொல்லவார்த்தை ஏது!
கண்குளிரும் காதுகளும் குளிரும் - முரு
கா, குமரா கந்தவடி வேலா!
(மாங்கனி)

-சோ.பத்மநாதன்-

(இன்று மாம்பழத் திருவிழா)




# மல்லாவியில் சனி,ஞாயிறுதினங்களில் "பஸ்" வந்தால்தான் பயணம்

(சுன்னாகம்)

மல்லாவி, துணுக்காய் பிரதேசங்களில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் ஏனைய இடங்களுக்கு பயணங்களை மேற்கொள்வதற்கு பல மணித்தியாலங்கள் பஸ்சிற்காக காத்திருக்கும் நிலை காணப்படுகின்றது.

பஸ் வந்தால் மட்டுமே பயணம் செய்யலாம் இல்லா விட்டால் பயணிகள் வீடு திரும்பும் நிலை காணப்படுகின்றது. மற்றும் இப்பிரதேசத்தில் இருந்து வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய வெளிமாவட்டங்களுக்கு தனியார் பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன.

இவை பயணிகள் குறைந்தளவு உள்ளபோது தமது பயணத்தை தவிர்த்துக் கொள்வதும், அல்லது நேரம் பிந்தி செல்வதும் வழக்கம் இத னால் பொதுமக்கள், நோயாளர் கள், அரச ஊழியர்கள் என பலரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாக சனி, ஞாயிறு தினங்களில் இந்நிலைமை மிகவும் மேசமாக காணப்படுகின்றமை அவதானிக்க முடிகின்றது.

மணித்தியாலத்திற்கு ஒரு தடவையேனும் துணுக்காய், மல்லாவி, பாண்டியன் குளம் போன்ற இடங்களில் இருந்து மாங்குளம் வரையான சேவையினை தனியார் பஸ் சங்கங்கள் நடாத்துவதன் மூலம் மக்களின் இத்தகைய சிரமங்களை தவிர்த்து கொள்ள முடியும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (148)

# மின் கட்டணம் செலுத்துவோர் வரணி அஞ்சலகத்தில் அதிகரிப்பு

(வரணி)

வரணி பிரதேசத்தில் வங்கிகள் இல்லாததால் மின் பாவனையாளர் தமது மின் கட்டணத்தை வரணி உப அஞ்சலகத்திலே செலுத்திவருகின்றனர். தற்போது இப்பிரதேசத்தில் பல இடங்களில் மின்விநியோகம் புதிதாக வழங்கப்பட்டுள்ளது. வடவரணி, வரணி, நாவற்காடு, குடமியன், இயற்றாலை, மாசேரி உட்பட்ட பல கிராமமக்கள் இந்த அஞ்சலகத்திலேயே மின் பாவனை கட்டணத்தைச் செலுத்தி வருகின்றனர்.

இப்பகுதி மக்களுக்கான வங்கிச் சேவைகள் கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, நெல்லியடி போன்ற இடங்களிலேதான் நடைமுறைப் படுத்தப்படுகின்றது வரணிப்பகுதியில் சமுர்த்தி வங்கி ஒன்று மட்டும் இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (150)

**எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம். - பொன்மொழி**


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU



இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com


## சிதறவைக்கப் போகும் செய்தி!

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சறுக்குமரமாக அமைந்துவிட்டது என்ற அரசியல் விமர்சனக் கட்டுரையாளரின் கருத்தை தேர்தல் முடிவு இன்னும் தெரியாத நிலையிலேயே ஒப்புக்கொண்டுவிடலாம் என்றுதான் படுகிறது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் சாகச முடிவை எடுத்து, அவர்களது உணர்ச்சிகரக் கோஷங்களில் ஒன்றான 'வடக்கு கிழக்கு இணைந்த தாயக' கோட்பாட்டைக் கைவிட நேரிட்டதும், அதை இனிச் சொல்ல வெளிக்கிட்டால் தமிழ்மக்கள் சிரிக்கத் தொடங்கி விடுவார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதும் முதல் சறுக்கல்.

அங்கு குறிப்பிடும்படியான ஆசனங்களைப் பெறுவர் என எதிர்பார்க்கக் கூடிய கட்சிகளாக நான்கு தரப்புகள் போட்டியிடுகின்றன. கூட்டமைப்புக்கு கிழக்கில் ஆட்சியைக் கைப்பற்றி அந்த மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் நோக்கம் கிஞ்சித்தேனும் இருந்திருந்தால், மு.கா வுடனோ அல்லது ஐ.ம.சு.மு வுடனோ அல்லது அவர்கள் தேசியக் கொடி அசைக்கக் கைசேர்த்த ஐ.தே.க வுடனோ கூட்டமைத்து நின்றிருக்க வேண்டும். அதற்கான முயற்சியை முழுமனத்தோடு செய்யாமல், வென்றபிறகு கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைப்போம் என்று நழுவியதும், அதன்மூலம் கிழக்கில் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவது தங்கள் நோக்கமல்ல என்று காட்டிக்கொண்டுவிட்டதும் அடுத்த சறுக்கல்.

வடக்கு கிழக்கில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி வைத்திருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஆண்டிகள் மடம் கட்டிக் குடியிருப்பது போல அவைகளை நடத்தி வரும் முறைகளைப் பார்த்தாலே, கிழக்கு மாகாண சபையைப் பொறுப்பெடுக்க அவர்கள் அச்சப்படவே செய்வார்கள் என்பது குழந்தைக்கும் புரிந்துவிடும். ஆட்சிப் பொறுப்பை ஏற்பது, மக்கள் தேவைகளைத் தீர்ப்பது என்பதெல்லாம் எவ்வளவு சிரமமானது எவ்வளவு உழைப்பையும் அர்ப்பணத்தையும் வேண்டிநிற்பது என்பதை அவர்கள் அறிவார்கள். அதை ஒதுக்கிவிட்டு, எல்லாவற்றுக்குமே எதிர்ப்பாக வசனம் பேசிக்கொண்டிருப்பதே அவர்களது தேர்தல் பிரசாரங்களுக்கு வசதி. சிங்கள அரசாங்கம் எதையும் செய்யவிடாது எதையும் தராது என்று வாய்பாடாகச் சொல்லிவிட்டு எதிர்ப்பரசியல் செய்துகொண்டிருப்பதே அவர்களுக்கு இலகுவானதும் இலாபமானதும் ஆகும்.

கிழக்குத் தேர்தலால் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட மூன்றாவது சறுக்கல், அவர்களுக்குள் உடைவு ஏற்படுவதற்கான விரிசல் பெரிதாக விழுந்துவிட்டிருப்பது ஆகும். கூட்டமைப்பின் அடுத்த தலைமைப் பொறுப்புக்கு சவாலாக இருந்த சுரேஷ் பிரேமச்சந்திரனை ஓரங்கட்டுவதில் இந்தத் தேர்தலை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது தமிழரசுக் கட்சி. தேர்தலின் பின் சுரேஷ் தலையிடி தீர்ந்துவிடும் என்று தமிழரசுக் கட்சியினர் வெளிப்படையாகவே இப்போது கூறிவருகிறார்கள்.

சுரேஷ்தான் பிரச்சினை. சுரேஷைத் தனிப்படுத்திவிட்டால் செல்வம், வினோ, ஆனந்தன் போன்ற ஏனைய எம்.பிக்களைத் தமிழரசுக் கட்சிக்குள் இழுத்துக்கொள்வதில் எந்தப் பிரச்சினையுமில்லை என்றார் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர். இந்தக் கூட்டமைப்புக்குச் சவால் விட்டு சுரேஷ் எங்கு சென்றாலும், எந்தக் கூட்டைச் சேர்த்தாலும் அந்தப் பருப்பு தமிழ்த் தேசியத் தண்ணீரில் அவியாது என்பதால், சுரேஷ் எல்லா இழிவுபடுத்தல்களையும் பொறுத்தபடி கூட்டமைப்பில் தொங்கியாக வேண்டும்.

ஆனால் தமிழ்மக்கள், ஒட்டுமொத்தமாகவே இவர்கள் அனைவரினதும் சவடால்களைப் புரிந்துகொண்டு வருகிறார்கள் என்பதுதான் இவர்களை மேலும் சிதறவைக்கப் போகும் செய்தி.

\- ஆசிரியர்

# அறநெறிபிறழாத சமுதாயத்தை கட்டி எழுப்புவதே நோக்கம்

## இந்துசமய கலாசார திணைக்கள பிரதிப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார திணைக்களம், இந்து சமயத்திற்கும் இந்துக்களிற்கும், மூன்று கட்டங்களில் பணியாற்றி வருகின்றது. இந்து சமயப்பணி, அற நெறிப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணி, இந்து சமய ஆராய்ச்சிப் பணி ஆகிய பணிகளின் மூலம் நாட்டில் ஒழுக்கம் மிக்க, அறநெறி பிறழாத சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது எமது திணைகளத்தின் நோக்கமாகும். என இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். அண்மையில் யாழ்.இந்துக்கல்லூரியில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் கலந்துகொண்டு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்து சமய வளர்ச்சிக்காக எமது திணைக்களம் நாட்டிலுள்ள பின்தங்கிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு சமயரீதியாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, புண்ணிய கிராம எழுச்சித்திட்டத்தை மேற்கொண்டுவருகின்றது. இத்திட்டத்தின் கீழ் வழிபாடற்று இருக்கும் ஆலயங்களை புனருத்தாரணம் செய்து, அங்கு பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கும், சமயச் சொற்பொழிவுகளை நடத்துவதற்கும் கலாசார உத்தியோகத்தர் மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக வருடா வருடம் இலவசமாகப் பாடநூல்கள், சீருடை, பண்ணிசை வகுப்புக்குரிய உபகரணங்கள் என்பனவற்றை வழங்கி வருகிறோம். நாடு முழுவதும் 5000 திற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் பதிவில் இருந்த பொழுதும் 2000 திற்கு உட்பட்ட ஆலயங்களில தான் அறநெறிப்பாட சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த அறநெறிப் பாடசாலையில் கடமைபுரியும் ஆசிரியர்கள் சேவை நோக்கம் கருதி வெறும் 2000 ரூபா கொடுப்பனவுடன் தான் சேவையாற்றி வருகின்றனர். அதுவும் ஆசிரியர்களுக்குரிய வருடாந்த செலவாக வழங்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது கட்டமாக இந்து சமய ஆராய்ச்சிப்பணியை எமது திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வகையில் பொன் பூலோகசிங்கத்தினால் இந்து சமய கலைக் களஞ்சியம் தொகுக்கப்பட்டு, எமது திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது,

இதுவரை 11 தொகுதி கலைக்களஞ்சியம் வெளியீடு செய்யப்பட்டுள்ளது, இவ் வருடம் எமது திணைக்களம் தனது வெள்ளி விழாவையும் கொண்டாடவுள்ளது என்றார். (0[illegible])

# ஆயுர்வேத வைத்தியசாலை நயினாதீவில் புனரமைப்பு

உள்ள ஆயுர்வேத வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகள் தற்போது நடை பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது. வேலணைப் பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வரும் இவ்வைத்தியசாலை போதியளவு வசதிகள் இன்றி இயங்கி வருவதை நயினாதீவு விகாராதிபதி நவதகல் பதும கீர்த்தி திஸ்ஸநாயக்க தேரோ, பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சுட்டிக்காட்டியதை அடுத்து அமைச்சர் சுதேச வைத்தியததுறை அமைச்சருடன் தொடர்பு கொண்டதின் பேரில் சுமார் 75 இலட்சம் ரூபாவை கட்டடப் புனரமைப்புக்கு அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இப்புனரமைப்பு வேலைகள் தற்போது துரித கதியில் நடைபெற்று வருவதாக பிரதேச சபை உறுப்பினர் சி.ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார். (175)

# தறித்த பனை மரங்கள் திருட்டு

(வரணி)

வரணி தம்பான் குருக்கள் வாழ்ந்த பிரதேசத்தில் அரச அனுமதி பெற்று தறித்து ஏற்றுவதற்காக போடப்பட்ட சுமார் பதினைந்து பனை மரங்கள் கடந்த வியாழன் இரவு திருடர்களால் திருடப்பட்டுள்ளது.

பனை மரத்தை விலை கொடுத்து வாங்கியவர் மறுநாள் வெள்ளிக்கிழமை மரம் ஏற்றச் சென்றபோது மரங்கள் களவு போயிருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

திருட்டுப்போன மரங்களின் விலை கூலியுடன் சுமார் இரண்டு இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது,

பனை மரங்கள் அரச சட்ட நடைமுறை அனுமதியுடனே தறிக்கப்பட்டுள்ளது. மரத்தை பறிகொடுத்தவர் மீசாலை வாசி எனத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# கசிப்பு மீட்பில் பொலிஸார்

(வவுனியா)

வவுனியா அலைகல்லுப் பகுதியில் 11250 மில்லிலீற்றர் கசிப்பு வவுனியாப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்த சட்டவிரோத மதுபான ஒழிப்பு நடவடிக்கையின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் மீது பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்திருப் பதாகவும் தெரியவருகின்றது. நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டது. மேலும் முல்லைத்தீவு சிலாவத்தைப்பகுதியில் இலேகியம் வைத்திருந்த ஒருவர் கடந்த 7ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்த இலேகியமும் கைப் பற்றப்பட்டுள்ளதாகவும் முல்லைத் தீவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் 25000 ரூபா பெறுமதியான கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடா வைத்திருந்த ஒருவரும் முல்லைத்தீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. (பா)

# வட வரணியில் விசமிகளின் நாசவேலை

(வரணி)

வடவரணி வாழைத்தோட்டப் பகுதியில் விவசாயி ஒருவரால் கட்டாக்காலிகள் உட்புகாதவாறு போடப்பட்டிருந்த தூண்கள் கடந்த வாரம் விசமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணி வேலித் தூண்கள் அனைத்தும் விசமிகளால் அடித்து நொருக்கி சேதப் படுத்தப்பட்டுள்ளன. இரவு வேளை மக்கள் நட்மாட்டம் இல்லாத நேரங்களில் இப்படிப்பட்ட நாச வேலைகள் நடைபெற்று வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (150)

# தேர்த்திருவிழா இசைக்கச்சேரி

(யாழ்பாணம்)

நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் தெய்வீகப் பேருரையினைத் தொடர்ந்து தேர்த்திரு விழா அன்று மாலை 7.30 மணிக்கு காலஞ்சென்ற சங்கீத வித்துவான பிரமஸ்ரீ க.இராமநாதனின் புத்திரியும் மாணவியுமான யதுநந்தினியின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. (06)

# தமிழ்நாட்டை இலங்கையின் கொடிய எதிரியாக அல்லாமல் ஒரு நண்பனாக மாற்றவேண்டும்



பாக்கு நீரிணைக்கு அப்பால் வசிக்கும் 65 மில்லியன் தமிழர்களும் இலங்கையில் நடைபெற்ற மோதலில் மிகப் பெரிய ஒரு பங்கினை வகித்தார்கள். உலகளாவிய ரீதியிலும், அடுத்துள்ள பிராந்திய ரீதியிலும் இலங்கையின் பெரும்பான்மை சிங்களவர்களை எண்ணிக்கையில் சிறுபான்மையினர்களாக ஆக்குவதுடன், அவர்களில் அநேகமானவர்கள் அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் என்று கருதாமல் சிங்களவர்களுடையது என்று எண்ணுவதால், இலங்கை அரசாங்கத்தின் தீவிர விரோதிகளாக மாறியுள்ளனர். இலங்கையின்பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அவர்கள் பொதுவாக ஒரு அச்சுறுத்தலாகவே கருதப்படுகிறார்கள்.

உண்மையில் குறைந்தது அவர்களில் சிலராவது இலங்கைப் போராளிகளுக்கு தீவிரமாக ஆதரவளித்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை. ஒரு காலத்தில் தமிழ்நாடு எல்.ரீ.ரீ.ஈயினருக்கு பாதுகாப்பான ஒரு புகலிடமாக இருந்தது. யுத்தம் காரணமான பல விடயங்களில் குறிப்பாக ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அங்கு ஈழக் கோரிக்கைக்கான கடும் போக்குடைய கூக்குரல்கள் இருந்துகொண்டே வந்தன. கடைசிக் குண்டு வெடித்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டாலும், பெரும்பான்மையான இந்திய தமிழ் அரசியல்வாதிகள் கொழும்பின் மீது சகல வழிகளிலும் தாக்குதல் தொடுப்பதற்கான தயாரெடுப்பில் தாங்கள் இருப்பதாக தொடர்ந்து பேசி வருகிறார்கள்.


அதனால் புத்துயிர் பெற்றுள்ள தமிழ் ஈழ ஆதரவாளர்களின் அமைப்பு (டெசோ), பல வருடங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு குறிப்பிடத்தக்க கவலையை ஏற்படுத்தியுள்ள அதன் முதலாவது மாநாட்டை சென்னையில் நடத்துவதில் பெரிதாக ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. எனினும் வெறுமனே கவலைப்படுவதனால் எதுவும் ஆகப் போவதில்லை. எப்போதையும் போல கருணாநிதியின் இந்த முயற்சிகள் செயல் நோக்கம் கொண்டவையாகும், இலங்கைத் தமிழர்கள் மீதுள்ள அதீத கடப்பாடுகள் காரணமாக அவர் இதைச் செய்யவில்லை. தமிழ்நாட்டில் தனது சொந்த நிலையை உயர்த்தும் ஆவலினால் அவர் இதில் ஈடுபட்டுள்ளார். 1980 இலிருந்து திமுக மற்றும் அஇஅதிமுக ஆகிய இரு கட்சிகளும் மாநிலத்தில் மாறிமாறி ஆட்சிசெய்து வந்தன. மற்றும் தற்சமயம் முதலமைச்சர் பதவியில் அமரும் முறை ஜெயலலிதாவினுடையதாக உள்ளது. 2011 சட்டமன்ற தேர்தல்களில் தி.மு.க. குறிப்பாகநசுக்கப்பட்ட தோல்வியினால் பாதிக்கப்பட்டு,விஜயகாந்தின் தே.தி.மு.க.வுக்கும் பின்னால் மூன்றாவதாக வந்துள்ளது, மற்றும் அதுதன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொள் ளும் ஒரு தருணத்துக்காக இன்னமும் நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இதேவேளை தமிழ்நாட்டு மக்கள் மாநிலம் மற்றும் மத்தியிலும் ஊழல் புரிந்ததுக்காக திமுகவை துரத்திக் கொண்டிருக்கிறார்கள் - இந்தியாவின் மிகப் பெரிய ஊழலில் பங்கு ப்ற்றியதற்காக வழக்கு தொடரப்பட்டுள்ள திமுக அரசியல்வாதிகளில் கருணாநிதியின் மகளும் ஒருவர். 2014ல் நடைபெற உள்ள லோக சபைத் தேர்தல்களில் அவருக்குள்ள வெற்றி வாய்ப்பு மிகவும் இருண்டதாகவே காணப்படுகின்றது. திம்பு பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைதொடர்ந்து அன்ரன் பாலசிங்கத்தை நாடுகடத்த ராஜீவ் காந்தி மேற்கொண்ட தீர்மானத்தை மாற்றியமைப்பதற்காக அவருக்கு நெருக்கடி கொடுப்பதற்காக கருணாநிதி வெகுஜனங்களை அணி திரட்டியது போன்ற தமிழ் ஈழ ஆதரவாளர்களின் அமைப்பின் பெருமை மிக்க நாட்களை மீண்டும் நினைவு படுத்துவது அவருக்கு உதவி செய்யலாம்.

தனி நாடொன்றை நிறுவுவது சம்பந்தமாக கலந்துரையாடல்களோ அல்லது தீர்மானங்களோ இடம்பெறாது என அவர் முதலில் அறிவித்தார். ஒன்றில் அவர் இலங்கையிலுள்ள நிலைமைகள் அவ்வளவு மோசமானவைகளாக இல்லை என்பதை அவர் நியாயமாக நம்பியிருக்கவேண்டும் அல்லது மத்திய அரசாங்கம் அந்த கோரிக்கையை கைவிடும்படி அல்லது அதற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டாம் என்று அவரை சமாதானப் படுத்தியிருக்க வேண்டும்.

இது ஒரு நல்ல செய்தி. இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினைக்கு ஈழம் ஒரு தீர்வல்ல - அதை அடைவதற்கு மற்றும் அதைத் தொடர்ந்து தாங்கிப்பிடிப்பதற்கு ஏராளமான இரத்தத்தை விலையாக செலுத்தவேண்டியிருக்கும். மேலும் ஏற்கனவே தேவைக்கும் அதிகமான இரத்தத்தை சிந்தியாகிவிட்டது. தனிநாடு பற்றிய பேச்சை அந்த மாநாட்டில் கருணாநிதி கைவிடுவாரானால் இலங்கையிலுள்ள சகல இனத்தவருக்கும் கருணாநிதி ஒரு நன்மையை செய்தவராவார், அவர் இன்னும் முன்னோக்கிச் சென்று அதை முற்றாக கைவிட வேண்டும்.

ஈழத்துக்கான கோரிக்கையும் தமிழ்நாட்டில் பலமிழந்து வருவதும் இயற்கையே. இந்தியத் தமிழர்கள் எல்.ரீ.ரீ.ஈக்கு அதிகளவு ஆதரவாக எதையும் செய்வதற்கு ஒருபோதும் தயாராக இருந்ததில்லை, ஆனால் அவர்கள் செய்ததெல்லாம் இலங்கைக் காடுகளில் சுற்றித்திரிந்த போராளிகள் ஒரு அடக்குமுறை அரசின் முரண்பாடுகளை தூக்கி எறிவதற்காக நடத்திய வீரசாகசப் போராட்டங்களின் உணர்வுகளால் தூண்டப்பட்டு அதை நேசித்தது மட்டும்தான். அதே ஆர்வத்தை வெறும் அரசியல்வாதிகளான ரி.என்.ஏ மீது அவர்கள் காட்டப்போவதில்லை.



**இலங்கையிலுள்ள தமிழர்களின் பிரச்சினைக்கு ஈழம் ஒரு தீர்வல்ல - அதை அடைவதற்கு மற்றும் அதை தொடர்ந்து தாங்கிப் பிடிப்பதற்கு ஏராளமான இரத்தத்தை விலையாக செலுத்த வேண்டியிருக்கும் மேலும் ஏற்கனவே தேவைக்கும் அதிகமான இரத்தத்தை சிந்தியாகிவிட்டது.**

**- காத்நோபிள்**

இலங்கை அரசாங்கம் திறமையானதாக இருந்தால், தனி நாட்டு கொள்கைக்கு ஏற்பட்டுள்ள சரிவை தனது மூலதனமாக்குவதற்காக தான் தமிழர்களை அரவணைத்துச் செல்வதற்கு ஆர்வமுள்ளதாக இருப்பதை காண்பிப்பதற்காக சில எளிய விடயங்களை செய்து காண்பிக்க வேண்டும். உதாரணமாக வடக்கு மாகாணசபையின் தேர்தல்களை இன்னும் ஒரு வருடம் தாமதமாக நடத்துவதற்கு காரணம் வாக்காளர் பட்டியல்களை புதுப்பிக்க வேண்டும் எனக்கூறும் பொய்யான விளக்கங்களை கைவிட வேண்டும், ஏனெனில் போர் முடிவுற்ற உடனேயே ஜனாதிபதி, பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. மிகவும் முக்கியமான கவலை இந்திய மீனவர்களைப் பற்றியது.



பாக்கு நீரிணையின் இருபக்கத்திலும் உள்ளவர்களால் இந்தப் பிரச்சினை மிகவும் வித்தியாசமாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையில் நம்பப்படுவது என்னவென்றால் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் சட்ட விரோதமாக நுழைகிறார்கள், ஏனெனில் அவர்கள் பக்கமுள்ள சர்வதேச கடல் எல்லைக்குள் முறையற்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மீன்பிடிப்பதால் அவர்களது மீன்வளம் தீர்ந்துபோய்விட்டது.

மறுபக்கத்தில் இந்தியர்கள் நினைப்பது, இலங்கையர்களுக்கு இந்திய கடற்பரப்பில் உள்ள சூரை மீன்கள் தேவையாக உள்ளன அதேபோல இந்தியர்களுக்கு இலங்கை கடற்பரப்பிலுள்ள இறால்கள் தேவையாக உள்ளன, கடற்படையினரை பொறுத்தமட்டில் அவர்களை அடித்து துன்புறுத்தி, துப்பாக்கிச் சூடு நடத்தி அவர்கள் பிடித்த மீன்களை கைப்பற்றி மற்றும் அவர்களின் படகுகளை நீருக்குள் அமிழ்த்தி அட்டகாசம் புரிவதற்கான உண்மையான காரணம் இதுதான் என்று.

சந்தேகமின்றி இரு தரப்பினரதும் கருத்துக்களிலும் உண்மை உள்ளது. இந்த மீனவர்கள் அநேகமாக தாங்கள் எப்போதும் சர்வதேச கடல் எல்லையின் தவறான பக்கம் சென்றுள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

சமீபத்தைய மாதங்களில் இந்த விடயத்துக்கு தீர்வு காண்பதற்கு இரண்டு நாடுகளும் சில முயற்சிகளை மேற்கொள்வதை காணக்கூடியதாக உள்ளது. எனினும் அதற்காக இன்னும் நீண்டதூரம் செல்லவேண்டி உள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

கண்ணோட்ட விடயங்களை எடுத்துக் கொண்டால், 23 இந்தியத் தமிழ் மீனவர்கள் கடற்படையினரால் ஜூலை 21ல் கைது செய்யப்பட்டார்கள். ஜூலை 22ல் இராமேஸ்வரத்திலுள்ள முழு மீனவ சமூகமும் அவர்களது விடுதலையை வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் ஜூலை 28ல் எந்தவித தண்டனையையும் எதிர்கொள்ளாமல் தங்கள் சொந்த நாட்டுக்கு திரும்பிச் சென்றார்கள். அரசாங்கத்தின்மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது.

எனினும் இலங்கை மீனவர்களைப் பொறுத்தமட்டில் இதேவகையான உபசரணை பின்பற்றப்படும் நிலை இருக்கவில்லை. இந்த சம்பவம் நடைபெற்று சில நாட்களில், இந்தியாவில் கைது செய்யப்பட்டிருந்த 11 இலங்கை மீனவர்களையும் விடுவிப்பதற்காக 925,000 ரூபாவை செலவிட்டுள்ளதாக மீன்பிடி அமைச்சு அறிவித்துள்ளது. இவர்கள் இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநில சிறைகளில் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரை கழித்த பின்னர் இலங்கை திரும்பினர். சர்வதேச கடல் எல்லையை தாண்டியதற்கான அதே குற்றம் இவர்கள் மீதும் சுமத்தப்பட்டிருந்தது. இதில் உள்ள வித்தியாசம், இவர்களுக்காக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை.

தமிழ்நாடு இலங்கையின் பரம வைரியாக இருக்கவேண்டிய தேவையில்லை. இரண்டு அரசாங்கங்களும் அநேகமானவற்றை பொதுவாக் கொண்டுள்ளன. உண்மையில் சில கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள தமிழ்நாடு ஒரு நண்பனாக இருப்பது, அல்லது ஆகக் குறைந்தது அரசாங்கம் வேலை செய்வதற்கு ஏற்ற ஒரு அயல் மாநிலமாக இருப்பதுதான் நல்லது. வேறு எதுவானாலும் அது ஆபத்தானது.

1.2 பில்லியன் கிட்டிய வலுவான அயலவர்களுடனான இலங்கையின் உறவு அதன் எதிர்காலத்துக்கான பிரதானத்துவத்தை நிர்ணயிப்பதில் முக்கியமானதாகும், அது சமாதானமானதாகவும் செழிப்பானதாகவும் இருக்கும் என்று நாம் அனைவரும் நம்புவோம்.

# குறுகிய நோக்கங்களுடன் ஊடகங்கள் பிரசாரம் செய்யக்கூடாது

(கொழும்பு)

பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும், சிறுபான்மை இனங்களுக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தக் கூடிய வகையில் சில ஊடக நிறுவனங்களும் நபர்களும் செயற்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

குறுகிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வவுணதீவு, உன்னிச்சை இருநேருவில் பிரதேசத்தில் நான்கு தற்காலிக வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இரண்டு கோஷ்டிகளுக்கு இடையிலான முறுகல் காரணமாக இந்த வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், இந்த சம்பவம் சிங்கள மற்றும் சிறுபான்மை இனத்தவருக்கு இடையிலான இன முறுகல் நிலைமையாக சித்திரிக்க சில இணைய ஊடகங்களும் இலத்திரனியல் ஊடகங்களும் முயன்று வருகின்றன.

30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் சிங்கள- தமிழ் முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், குறுகிய நோக்கத்துடன் இவ்வாறு பிரசாரம் செய்வது வருத்த



மளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த சம்பவம் எந்தவொரு அரசியல் காரணத்தின் அடிப்படையிலும் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# படையினரை பலப்படுத்த அதிகளவு நிதி ஒதுக்கவேண்டும்

(கொழும்பு)

நாட்டில் பயங்கரவாதிகள் மீண்டும் தமது தலைகளை நிமிர்த்திக் கொள்வதற்கான அறிகுறிகள் காணப்படுவதால், பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் பிரதமரும் மூத்த அமைச்சருமான ரட்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் ஆயுத படைகளை பலப்படுத்திக் கொள்ள நவீன ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும். உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அமைதியை சீர்குலைக்க பல சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன.



ஒரு அரசியல் கட்சி நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று தீர்மானம் மேற்கொண்டுள்ளது. இவ் விடயங்களை நாம் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே நாட்டின் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புகையிலை பொருட்களின் விலையை உயர்த்தக் கோரிக்கை

(கொழும்பு)

புகையிலை பொருட்களின் விலையை 35 ரூபா வரையில் உயர்த்துமாறு புற்றுநோய் அபய சங்கம் கோரியுள்ளது அதன வைத்தியர் சபாரி ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இதற்கு புகையிலைப் பொருட்களும் ஒரு முக்கிய காரணம்.

இந்த நிலையில் இதனை தேசிய அவசியமாக கருத்தில் கொண்டு, அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் புகையிலைப் பொருட்களின் விலையை 35 ரூபா வரையில் அதிகரிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# போலிக் கடவுச் சீட்டுக்களை கண்டறிய இன்டர்போல் உதவி

(கொழும்பு)

போலிக்கடவுச் சீட்டுகளுடன் இலங்கைக்கு வருபவர்களையும் இலங்கையிலிருந்து வெளியேறுபவர்களையும் கண்டறிவதற்காக இன்டர்போல் தரவு தளத்தை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

பிரான்ஸின் பாரிஸ் நகரிலுள்ள இன்டர்போல் தலைமையகத்துடன் கொழும்பிலுள்ள தரவுதளமொன்று நேரடியாக இணைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம், போலி கடவுச்சீட்டுகள், மற்றும் பிறரின் கடவுச்சீட்டுகளை பயன்படுத்தி நாட்டிற்குள் வருவதற்கு அல்லது நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு எவராவது முயற்சித்தால், கடவுச் சீட்டை ஸ்கேன் பரிசோதனைக்குட்படுத்தும்போது எச்சரிக்கை சமிக்கை எழுப்பப்படும்.

2004 ஆம் ஆண்டு இந்த முறைமை செயற்பட ஆரம்பித்தது. 2011 நவம்பர் வரை 32 மில்லியன் கோப்புகள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. 190 நாடுகள் இத்திட்டத்தில் இணைந்துள்ளன.

# நில நடுக்கத்தில் பாதிக்கப்பட்டோருக்கு ஜனாதிபதி மகிந்த இரங்கல்

(கொழும்பு)



ஈரானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

ஈரானில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 220 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், 1500 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.


நில நடுக்கம் தொடர்பான செய்தி தம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியதாக ஜனாதிபதி இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி முஹமூட் அஹ்மதிநிஜாதனுக்கு, ஜனாதிபதி இந்த இரங்கல் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நாட்டு மக்களின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க இலங்கை தயார் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையர் ஐவர் டுபாயில் கைது



(கொழும்பு)

டுபாயில் மூன்று மடிகணினிகளைத் திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட ஐந்து இலங்கையர்கள், டுபாய் குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

டுபாயின், ஜீமெய்ரா விலுள்ள மருந்து கடையொன்றில் களவாக நுழைந்து மடிகனனிகளைத் திருடியுள்ளனர். மேற்படி மருந்து கடையில் பணிபுரிந்து வந்தவர்களே இத்திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இவர்கள் மீது இரண்டு பாதுகாப்பு பெட்டகங்களை பழுதாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதில் ஒருவர் மடிகணினிகளை விற்க முயன்றபோது பிடிபட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வேறு கடைகளில் பல களவுகளை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ் வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# தீக்கிரையாக்கப்பட்ட பள்ளிவாசலை ஹக்கீம், ஹிஸ்புல்லாஹ் பார்வை



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் உன்னிச்சை, பாவற்கொடிச்சேனை கிராமத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தீக்கிரையாக்கப்பட்ட முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசலை நீதி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உள்ளிட்ட பலர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்தப் பள்ளிவாசல் மீளவும் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட நிலையில், இராணுவத்தினரும் பொலிஸாரும் வழமை நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர்.

# மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக சந்திரிக்கா செயற்பட்டார்



(கொழும்பு)

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக செயற்பட்டதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிக்கா பண்டாரநாயக்க, ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவாகவே செயற்பட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஓர் துண்டுப் பிரசுரத்தைகூட அனுப்பி வைக்க சந்திரிகா நடவடிக்கை எடுக்கவில்லை.

சந்திரிக்காவின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாது அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாகச் செயற்பட்டார் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் பொலனறுவை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது காமினி திசாநாயக்க பற்றிய உளவுத் தகவல்களை ரணில் விக்ரமசிங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு வழங்கியதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தக் குற்றச் சாட்டுக்களை ரணில் விக்ரமசிங்கவும், சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் மூழ்கி 14 வயதுச் சிறுவன் பலி

(கொழும்பு)

மீட்டியாகொட - சீனிகம கடற்பரப்பில் நீராடச் சென்ற இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். கடல் அலையால் இவ்விருவரும் இழுத்துச் செல்லப்படுவதை அவதானித்த பொது மக்கள் இருவரையும் காப்பாற்றியுள்ளார்.

இதில் 14 வயதுடைய சிறுவன் கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். மற்றைய நபர் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

## நுரைச்சோலை மின் நிலையம் மீளமைப்புப் பூர்த்தி


(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையம் மீளமைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் விமலதர்ம அபேவிக்கிரம அறிவித்துள்ளார்.

அனல் மின்நிலையத்தில் ஏற்பட்டிருந்த தொழினுட்ப பிரச்சினை முறையாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்றிரவு நுரைச்சோலை மின் நிலையத்திலிருந்து மின்சார விநியோகம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என்றார்.

## ரமழான் சிந்தனை



லைலதுல் கத்ர் இரவை ரமழான் மாதத்தின் கடைசி பத்து நாட்களின் ஒற்றைப்படையான இரவுகளில் தேடிக் கொள்ளுங்கள்.

பிறை 21, 23, 25, 27, 29 ஆகிய ஐந்து இரவுகளில் இஃதிகாப் இருந்து 'லைலதுல் கத்ரின் பேரருளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நூல் - புஹாரி.

(105)

# முழுமையாக புனரமைக்கப்படாத நெல்லியடி - பருத்தித்துறை வீதி

(பருத்தித்துறை)

நெல்லியடியிலிருந்து பருத்தித்துறை முதலாம் கட்டை வரையான வீதியின் அபிவிருத்திப் பணிகள் சீரான முறையில் நடைபெறாததால் இவ்வீதியூடான போக்குவரத்தை சீர் செய்ய முடியாதுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி கடந்த வருடம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது எனினும் இவ்வீதி முழுமையாக புனரமைக்கப்படாமையை அடுத்து தார் ஊற்றி செப்பனிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத்தகைய நிலையில் இவ்வீதிக்கு கற்கள் பரப்பப்பட்டு தார் போடும் வேலைகள் நடைபெறாமையினால் இவ்வீதியூடாகப் பயணம் செய்வோர் பல வேறு சிரமங் களுக்குள்ளாவதாக விசனம் தெரிவிப்பதுடன் சிலர் மாற்றுப்பாதையை பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே போக்குவரத்துத் தேவையை கருத்தில் கொண்டு இவ்வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)

## உப தபாலகத்துக்கு விமோசனம் எப்போது?

(புதுக்குடியிருப்பு)

உடையார்கட்டு உபதபாலகமானது நிரந்தரக் கட்டடமின்றி பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றது.

கடந்த காலப் போர் அனர்த்தம் காரணமாக ஓடுகளற்ற நிலையில் காணப்படும் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தின் ஒரு அறையில் தபால் அதிபர் மற்றும் இரு ஊழியர்களுடன் தற்காலிகமாக இயங்கிவரும் இந்தத் தபாலகத்திற்கு காணி ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும், அது உறுதி செய்யப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

தற்போது உடையார் கட்டுக் கிராமத்தில் மக்கள் அனைவரும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், மக்களினதும் மற்றும் தபால் அதிபர், ஊழியர்களினது சௌகரியத்தை முன்னிட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு செயற்பட முன்வரவேண்டுமென உடையார்கட்டு வாழ மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (138)

## தப்பி ஓடிய திருட்டுக்கோஷ்டி

(வடவரணி)

வடக்கு வரணி சிமிழ் அம்மன் ஆலய குறண்டிப்பிட்டிக்கிராமத்தில் கடந்த வாரம் இரவு 11 மணியளவில் வீடு ஒன்றில் உள்நுழைந்த திருடர்கள் வீட்டுக் கதவை உடைத்துள்ளனர். அப்போது வீட்டு உரிமையாளர் விழித்தெழுந்து சத்தமிட அயலவர்கள் ஒன்றுகூடி திருடர்களை பிடிக்க முற்பட்ட வேளை திருட்டு கோஷ்டி தப்பி ஓடியுள்ளனர். (150)

## பதிவாளர்கள் இடை நிறுத்தம்

(முல்லைத்தீவு)

தவறான தகவல்களைக் கொண்ட பிறப்பு பதிவுகளை மேற்கொண்ட பிறப்பு, இறப்பு விவாகப்பதிவாளர்கள் இருவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு உடந்தையாக செயற்பட்ட முல்லைத்தீவு மாவட்டப் பதிவகத்தில் கடமையாற்றிய பணியாளர் ஒருவரும் பணி இடைநிறுத்தம செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (120)

## வடிகால் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சோனகதெரு தெற்கு பிரிவைச் சேர்ந்த காதி அபூபக்கர் வீதியிலுள்ள வடிகால் அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 12 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் எம்.எம்.மிஸ்னூன் தெரிவித்தார். (105)

## பாடசாலை சுவரில் ஏறிய மாணவன் தடுக்கி வீழ்ந்து கை முறிவு

(வரணி)

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியசாலையில் கல்வி பயிலும் மாணவன் சக மாணவர்களுடன் சேர்ந்து கூடி விளையாடிய போது பாடசாலை சுவரின் மேல் ஏறி குதித்து விளையாடியபோது ஒரு கையை முறிந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தரம் இரண்டில் கல்வி பயிலும் ச.தனுசன் (வயது - 07) என்ற மாணவனே தனது கை முறிந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (150)

## தென்னை மரம் வெட்டியவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தர் மடம் பகுதியில் தென்னை மரத்தைத் துண்டாடும் வேலையில் ஈடுபட்டிருந்தவர் தென்னை மரத்துடன் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் நல்லூர் கந்தர்மடம் பகுதியிலுள்ள வீடு ஒன்றின் வளவில் இருந்த தென்னை மரத்தை துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தும் பணியில் குறித்த நபர் ஈடுபட்டிருந்த சமயம் தென்னை மரம் அடியுடன் பெயர்ந்து கீழே வீழ்ந்துள்ளது. அதனுடன் சேர்ந்து வீழ்ந்த சின்னத்தம்பி செல்வரத்தினம் (வயது 62) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இவர் உடனடியாக அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (பா)

## முரசின் இன்றைய பலன்

(14.08.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 30 ஆம் திகதி. துவாதசி முன்னிரவு 9.09 வரை. நட்சத்திரம் திருவாதிரை. மரணயோகம் மாலை 5.45 வரை. இராகுகாலம் 3.05 - 4.35 வரை. சுபநேரம் 10.35 - 12.05 வரை. எமகண்டம் 9.05 - 10.35 வரை. குளிகன் காலம் 12.05 - 1.35 வரை. ஐந்தாவது ஆடிச் செவ்வாய்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிற்பகல் நன்று, இடையூறுகள் ஏற்படும், கடனகள் வந்து சேரும், அரச சலுகைகள். |
| ரிஷபம் | காரியனுகூலம், தொழிலில் ஆதாயம், நண்பர் உதவி, உடல் ஆரோக்கியம். |
| மிதுனம் | குடும்ப சிறப்புக்கள், சொத்தில் பிரச்சினை, பயணம் தவிர்க்கவும், அதிகாரிகள் உதவுவார். |
| கடகம் | புதிய நன்மை, விரும்பிய இடமாற்றம், மாமன் மாமியார் அனுசரணை, புதிய வியாபாரம். |
| சிம்மம் | செல்வ விருத்தி, படிப்பில் கவனம், சுப காரியங்கள், விருந்துபசாரங்கள். |
| கன்னி | காரிய சித்தி, எதனையும் சமாளிப்பீர், பொன் பொருள் சேரும், வெளிவட்டாரப் பழக்கம். |
| துலாம் | காரிய நன்மை, சமூக உறவுகள், கல்வியில் கவனம் செலுத்தவும், பெரியோர் ஆசி. |
| விருச்சிகம் | தொழில் உயர்வு, உடல் நலனில் கவனம், சகோதரர் உதவி, தாய் வழியில் செலவு. |
| தனுசு | வாழ்க்கையில் வெற்றி, தலையீடுகளைத் தவிர்க்கவும், அயலவர் உதவுவார், சுப காரயம். |
| மகரம் | பகைவரால் தொல்லை, அந்நியர் உதவி, விட்டுக்கொடுத்து நடக்கவும், வேலைவாய்ப்பு. |
| கும்பம் | நண்பர் உதவுவார், கல்வியில் கவனம், பயண அலைச்சல், தனவந்தர் நட்பு. |
| மீனம் | தன இலாபம், பிரர்த்தனை பலிக்கும், சாரதிகள் எச்சரிக்கை, போக்குவரத்தில் கவனம். |

## கண்ட இடங்களில் முச்சக்கர வண்டிகள் பயணிகள் போக்குவரத்தில் சிரமம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகரில் கண்ட கண்ட இடங்களில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதனால் பயணிகள் போக்குவத்தில் பெரும் சிரமங்களும், நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளது.

நகரின் மத்திய பேருந்து நிலைய வீதியோரத்தில் ஒழுங்கற்ற முறையில் தரித்து விடப்பட்டிருக்கும் முச்சக்கர வண்டிகளுக்கு உரிய இடம் ஒதுக்கப்படவில்லை.


தற்போது முச்சக்கர வண்டிகள் தரித்து நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையமும், நகரசபையும் காணப்படுகிறது.


அத்துடன் நகரின் மையப்பகுதியில் பாதசாரிகள் கடவையும் இல்லாமையினால் நகரின் மூன்று பக்கத்திலும் ஒரு கிலோ மீற்றருக்குட்பட்ட தூரத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் நகருக்கு வரும் பயணிகள் என பல பாதசாரிகளும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே முச்சக்கர வண்டிகள் நிறுத்துவதற்கு பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையிலான இடத்தை ஒதுக்கிக் கொடுக்குமாறும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தை உருவாக்கிக் கொடுத்து சட்ட வரையறைக்கு உட்படுத்துமாறும் அத்துடன் பாதசாரிகள் கடவை கோட்டினை இட்டுத்தருமாறும் பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களை வேண்டிக் கொள்கின்றனர். (116)




புனித ரமழான் மாத நோன்பின் இப்தார் நிகழ்வு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி பெரிய முஹிதின் ஜும்மா பள்ளியில் இடம்பெற்ற போது... (105)





ஒலிம்பிக் நிறைவு விழாவின்போது...








# சீனா சார்பில் திபெத் வீராங்கனை பதக்கம்



(லண்டன்)

ஒலிம்பிக்கில் சீனா சார்பில் பங்கேற்று பதக்கம் வென்றார் திபெத் வீராங்கனை குயியாங் ஷின்ஜி.

மகளிர் 20 கிலோ மீற்றர் நடைப் போட்டியில் பங்கேற்ற அவர் வெண்கலம் வென்றார். இந்த ஒலிம்பிக்கில் திபெத்தைச் சேர்ந்த ஒருவர் இப்போது தான் முதல்முறையாக பதக்கம் வென்றுள்ளார்.

ஷின்ஜி சீனா சார்பில் பங்கேற்றாலும் திபெத்தைச் சேர்ந்த பலர் அவருக்கு ஆதரவு தெரிவித்து கோஷம் எழுப்பினர். சீனாவில் தடை செய்யப்பட்ட திபெத் தேசிய கொடியை கையில் எந்தி வந்த திபெத்தியர்கள் ஷின்ஜியை உற்சாகப் படுத்தி கோஷம் எழுப்பினர். அதே நேரத்தில் சீனாவின் செங்கொடியுடன் சீன நாட்டு இரசிகர்களும் ஷின்ஜிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

திபெத்தை சீனா தனது ஆக்கிரமிப்பில் வைத்துள்ளது. சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து திபெத்தியர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்கொரிய வீரர் மீது ஒலிம்பிக் சங்கம் நடவடிக்கை

(லண்டன்)

பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியைப் புறக்கணித்த தென் கொரிய கால்பந்து வீரர் பார்க் ஜோங்வூ மீது நடவடிக்கை எடுக்க சர்வதேச ஒலிம்பிக் சங்கமும், சர்வதேச கால்பந்து சம்மேளனமும் முடிவு செய்துள்ளது.

ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் தென் கொரியா - ஜப்பான் அணிகள் மோதின. இதில் 2-1 என்ற கோல் கணக்கில் தென் கொரியா வென்றது.

ஆட்டம் முடிந்த உடன் தென்கொரிய வீரர் பார்க் ஜோங்வூ, ஓர் வாசக அட்டையுடன் மைதானத்தில் வலம் வந்தார். தென்கொரியா - ஜப்பான் கடல் பகுதியில் உள்ள சில தீவுகள் யாருக்கு சொந்தம் என்பதில் பிரச்னை உள்ளது. அதில் தென் கொரியாவுக்கு ஆதரவான வாசகங்களை எழுதிய அட்டையை பார்க் மைதானத்தில் காண்பித்தார். இது பரபரப்பை ஏற்படுத்தியது.

தொடர்ந்து நடைபெற்ற பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கவில்லை. இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதையடுத்து அவர் மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆண்கள் மரதன் உக ண்டா வீரர் தங்கம்




(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் ஆண்கள் மரதன் பந்தயம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் உகாண்டா வீரர் ஸ்டீபன் கிப்ரோடிச் 2 மணி 8 நிமிடம் 1 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கம் வென்றார். கென்யா வீரர்கள் அபெல் கிரு (2:08:27 வினாடி) வெள்ளிப்பதக்கமும், வில்சன் கிப்சாங் (2:09:37 வினாடி) வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

# ஊழல் விசாரணை

(கொழும்பு)

இரகசியமாக ஒலிநாடாவில் பதியப்பட்ட ஓர் உரையாடல் தொடர்பில்நடந்ததாகக் கூறப்படும் ஊழல் ஒன்றை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) விசாரணை செய்துவருவதாக இலங்கை கிரிக்கெட் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உரையாடலின் ஒலிநாடாப் பிரதிகள் இலங்கை ஊடகம் ஒன்றுக்கும் இலங்கை கிரிக்கெட்டுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இலங்கை கிரிக்கெட் இந்த ஒலிநாடாவை ஐ.சி.சி.யின் ஊழல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவிடம் ஒப்படைத்தது. ஐ.சி.சி.யின் ஒத்துழைப்புடன் விசாரணைகள் நடைபெறுவதாக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை பிரிமியர் லீக் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக ஐ.சி.சி.யின் ஊழல் எதிர் மற்றும் பாதுகாப்பு பிரிவு தற்போது இலங்கையில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பீற்றர்சன் நீக்கம்

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இருந்து முன்னணி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ளார்.

இதனால் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் பங்கேற்கமாட்டார்.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை தக்கவைத்துக் கொள்ளவும், இத் தொடரை சமநிலை செய்யவும் இந்த டெஸ்ட் போட்டியில் கண்டிப்பாக வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இங்கிலாந்து உள்ளது. இந்நிலையில் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது தென்னாபிரிக்க வீரர்கள் சிலருக்கு பீற்றர்சன் எஸ்எம்எஸ் அனுப்பினர் என்றும், அதில் இங்கிலாந்து கப்டன் ஆண்ட்ரூ ஸ்ரோஸ், பயிற்சியாளர் ஆண்டி பிளவர் ஆகியோர் குறித்து தரக்குறைவாக கூறியிருந்ததாகவும் தெரிகிறது.

இதன் அடிப்படையிலேயே பீற்றர்சன் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

பீற்றர்சனின் நீக்கம் இங்கிலாந்து அணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும், அவர் தென்னாபிரிக்கா போன்ற அணிக்கு எதிராக சிறப்பாக விளையாடக் கூடியவர். இதனை இங்கிலாந்து கிரிக்கெட் சபை உணர்ந்து கொள்ளவில்லை என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த விருதுகளுக்கான நீண்ட பட்டியலில் இலங்கையைச் சேர்ந்த 6 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். குமார் சங்கக்கார, அஜந்த மெண்டிஸ், லசித் மலிங்க, திலகரட்ண டில்ஷான், லஹிரு திரிமன்ன, டினேஷ் சந்திமால் ஆகியோரே இடம்பெற்றுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள நீண்ட பட்டியல்:**

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இந்தாண்டுக்கான வீரர்:
குமார் சங்கக்கார (இல)
சயீட் அஜ்மல் (பாக்)
விராத் கோலி (இந்)
ஹசிம் அம்லா (தென்)
ஸ்ருவேர்ட் ப்ரோட் (இங்)
மைக்கல் கிளார்க் (அவுஸ்)
அலஸ்ரெயர் குக் (இங்)
வேர்ணன் பிலாந்தர் (தென்)
பானிரெய்லர்(மே.இபெண்கள்அணி)

இந்தாண்டுக்கான டெஸ்ட் வீரர்:
குமார் சங்கக்கார (இல)
சயீட் அஜ்மல் (பாக்)
ஹசிம் அம்லா (தென்)
ஸ்ருவேர்ட் ப்ரோட் (இங்)
ஷிவ்நரின் சந்தர்போல் (மே.இ)
மைக்கல் கிளார்க் (அவுஸ்)
அலஸ்ரெயர் குக் (இங்)
ஜக்ஸ் கலிஸ் (தென்)
வேர்ணன் பிலாந்தர் (தென்)
மற் பிரயர் (இங்)
மார்லன் சாமுவேல்ஸ் (மே.இ)
டேல் ஸ்ரெய்ன் (தென்)
ஏபி.டி.வில்லியர்ஸ் (தென்)

ஆண்கள் ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான வீரர்:
குமார் சங்கக்கார (இல)
லசித் மலிங்க (இல)
ஷகிட் அப்ரிடி (பாக்)
சயீட் அஜ்மல் (பாக்)
கௌதம் கம்பீர் (இந்)
மகேந்திரசிங் டோணி (இந்)
விராத் கோலி (இந்)
மைக்கல் கிளார்க் (அவுஸ்)
அலஸ்ரெயர் குக் (இங்)
ஸ்டீவன் ஃபின் (இங்)
ஷகிப் அல் ஹசன் (பங்)
பிரெண்டன் மக்கலம் (நியூசி)
மோர்னி மோர்க்கல் (தென்)
சுனில் நரைன் (மே.இ)
பிரெண்டன் ரெய்லர் (சிம்)
ஷேன் வொற்சன் (அவுஸ்)

சிறந்த அறிமுக வீரர்:
லஹிரு திரிமன்ன (இல)
டினேஷ் சந்திமால் (இல)
ட்ரென்ட் போல்ட் (நியூசி)
டக் பிரேஸ்வெல் (நியூ)
பற் கமின்ஸ் (அவுஸ்)
நசீர் ஹொஸைசன் (பங்)
ஜூனைட் கான் (பாக்)
நேதன் லையன் (அவுஸ்)
ரீனா மவோயோ (சிம்)
சுனில் நரைன் (மே.இ)
ஜேம்ஸ் பற்றின்சன் (அவுஸ்)
மத்தியூ வேட் (அவுஸ்)

சிறந்த ருவென்ரி –20 திறமை வெளிப்பாடு விருது:
திலகரட்ண டில்ஷான் (இல) - 104 (ஆ.இ)(57)
அஜந்த மெண்டிஸ் - 4 - 0 - 12 - 4
மொஹமட் ஹபீஸ் (பாக்) - 2.2 - 0 - 10 - 4
ரவி போப்பாரா (இங்) - 3.4 - 0 - 10 - 4
கிறிஸ் கெய்ல் (மே.இ) - 85 (ஆ.இ) (52)
மார்ட்டின் கப்ரில் - 91 (ஆ.இ) (54)
அலெக்ஸ் ஹேல்ஸ் (இங்) - 99 (68)
ரிச்சாட் லெவி (தென்) - 117 (ஆ.இ) (51)
பிரெண்டன் மக்கலம் (நியூசி) - 81 (ஆ.இ) (46)
சுனில் நரைன் (மே.இ) - 4 - 0 - 12 - 4
எலியஸ் சனி - 4 - 1 - 12 - 5

விளையாட்டு உணர்வுகளுடன் விளையாடியமைக்கான விருது:
மொஹமட் ஹபீஸ் (பாக்)
ஜக்ஸ் கலிஸ் (தென்)
கெரான் பொலார்ட் (மே.இ)
டானியல் விட்டோரி (நியூ)
ஏபி.டி.வில்லியர்ஸ் (தென்)

# தேசிய கால்பந்து இறுதியில் வடமாகாணம் போராடித் தோல்வி



(கொழும்பு)

தேசிய மட்டக் கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் வடக்கு மாகாண அணி போராடித் தோல்வியடைந்தது.

38ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கால்பந்துப் போட்டி கடந்த 11,12ஆம் திகதிகளில் கொழும்பு ஆர்.சி.சி. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

காலிறுதிப் போட்டியில் ஊவாமாகாண அணியை எதிர்கொண்ட வடக்கு மாகாண அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மேல் மாகாண அணியும் வடக்கு மாகாண அணியும் மோதின. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வடக்கு மாகாண அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற இறுதிப் போட்டியில் வடக்கு மாகாண அணியும் தென்மாகாண அணியும் மோதின. இரு அணிகளும் சமபலம் கொண்ட அணி என்பதால் இப்போட்டி மிகுந்த பரபரப்பு நிறைந்தாக இடம்பெற்றது.

இரு அணிகளுமே கோல் போடும் முனைப்பில் தீவிரமாக ஈடுபட்டபோதும், பிற்கள வீரர்களின் பலமான காப்பறைத் தாண்டி உள்நுழைய இரு அணிகளாலும் முடியவில்லை. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது வியூகங்களை மாற்றி அமைத்து ஆடியபோதும் கோல் போடும் முயற்சிகள் பல தடுக்கப்பட்டது. இறுதியில் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இரு அணிகளாலும் கோல் எதனையும் போட்டுக் கொள்ளமுடிவில்லை. இதன் காரணமாக மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதிலும் இரு அணிகளாலும் கோல்போடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இறுதியில் அது முடியாமல் போனது. இதனைத் தொடர்ந்து தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தென்மாகாண அணி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. வடமாகாண அணி வீரர்களின் ஆட்டம் மிகவும் சிறப்பான முறையில் இருந்ததாக போட்டியைக் காண வந்த விருந்தினர்கள், மற்றும் இரசிகர்களால் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## லலித் திசாநாயக்கா மென்பந்து தலைவர்

(கொழும்பு)

இலங்கை மென்பந்து கிரிக்கெட் சம்மேளனத்தின் புதிய தலைவராக பிரதி சுகாதார அமைச்சர் சட்டத்தரணி லலித் திசாநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்மேளனத்தின் தலைவராக அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை இது நான்காவது முறையாகும்.

மென்பந்து கிரிக்கெட் துறையில் புதிய மாற்றங்களை உருவாக்கி இத் துறையை முன்னேற்ற தாம் பாடுபடுவதாக அவர் தெரிவித்துள்ளார். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த விளையாட்டை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பிரதி அமைச்சர் கூறியுள்ளார்.

இச் சம்மேளனம் 1981 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இன்று இச் சம்மேளனத்துக்கு 31 வருடங்களாகிறது.

இக் காலப் பிரிவில் உலகில் முதன் முறையாக சர்வதேச கிரிக்கெட் போட்டி 1995 இல் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இந்தியாவில் நடைபெற்றது.

இதேவேளை, லலித் திசாநாயக்காவுக்கு கிரிக்கெட் பிரபலங்கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

## யாழ். செயலகம், சண்டிலிப்பாய் இறுதிப் போட்டிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டித் தொடரின் வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதியில் சங்கானைப் பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடியிருந்தன. இருப்பினும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 10-07 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதியில் யாழ். மாவட்டச் செயலக அணியும், உடுவில் பிரதேச செயலக அணியும் மோதின. இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் தமது ஆட்டத் திறனை வெளிப்படுத்தினர். இருப்பினும் யாழ். மாவட்டச் செயலகம் 07-04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டி பின்னர் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

## யுவராஜ் உள்ளடக்கம் ஆச்சரியம்

இந்தியாவின் ருவென்ரி -20 அணியில் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் உள்ளடக்கப்பட்டுள்ளமை ஆச்சரியமளிப்பதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

அறிவிக்கப்பட்ட நியூசிலாந்திற்கெதிரான ருவென்ரி -20 அணி மற்றும் செப்டெம்பரில் உலக ருவென்ரி -20 தொடருக்கான அணியிலும் யுவராஜ் சிங் அறிவிக்கப்பட்டிருந்தார்.

புற்றுநோயிலிருந்து அவர் மீண்டுள்ளதை அடுத்தே அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

யுவராஜ் சிங் புற்றுநோயிலிருந்து மீண்ட பின்னர் விரைவாக அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாக உணர்வதாகத் தெரிவித்த கங்குலி, எதிர்காலத்தில் யுவ்ராஜ் சிங் சிறப்பாகச் செயற்படுவார் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய அணியில் யுவராஜ் சிங் இடம்பெற்றுள்ளதை மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்த கங்குலி, அவர் தனது உடற்தகுதியைச் சிறப்பாகப் பேணி சிறப்பாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் இந்தியாவின் டெஸ்ட் குழாம் தொடர்பாக தனது அதிருப்தியை வெளிப்படுத்திய சௌரவ் கங்குலி, அவுஸ்ரேலியாவில் வைத்து மோசமாகத் தோல்வியடைந்த அதே டெஸ்ட் அணியே தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது முற்றிலும் ஏமாற்றம் அளிக்கின்றது. இளம் வீரர்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கான சந்தர்ப்பத்தை இந்திய கிரிக்கெட் சபை வழங்க முன்வர வேண்டும். இல்லையேல் அடுத்து வரும் அணியை உருவாக்குவது கடினமாகிவிடும். இதனை தற்போதிருந்த மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய மட்ட கூடைப்பந்து வடமாகாணம் 4ஆம் இடம்



(கொழும்பு)

38ஆவது தேசிய விளையாட்டு விழாவின் பெண்கள் கூடைப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாண அணி நான்காமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

38ஆவது தேசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம் கடந்த 11,12ஆம் திகதிகளில் கொழும்பு விமானப்படை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் காலிறுதி ஆட்டத்தில் மத்திய மாகாண அணியும், வடக்கு மாகாண அணியும் மோதின. சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய வடக்கு மாகாண வீராங்கனைகள் 36-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டியில் வடக்கு மாகாண அணியும், வடமேல் மாகாண அணியும் மோதின. இதில் வடமேல் மாகாண அணி 59-32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தோல்வியடைந்த வட மாகாண அணி மூன்றாமிடத்திற்கான போட்டியில் மோதும் தகுதியைப் பெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் வடக்கு மாகாண அணியும் தென்மாகாண அணியும் மோதின. இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆட்டத்தில் ஈடுபட்டனர். மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 46-47 என்ற புள்ளிகள் அடிப்படையில் வடக்கு மாகாண அணி தோல்வியுற்று நான்காமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி இரசிகர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆண்கள் பிரிவில் காலிறுதி ஆட்டத்துடன் வடக்கு மாகாண அணி வெளியேறியது. இதில் முதல் போட்டியில் ஊவா மாகாண அணியுடன் மோதிய வடக்குமாகாண அணி 66-59 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கிழக்கு மாகாண அணியுடன் மோதிய வடமாகாண அணி 46-56 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியுற்று வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# மாப்பஸான்

தற்போதெல்லாம் மக்கள் அவ்வளவாக சிறுகதைகள் படிப்பதில்லை. அதற்கு அவர்களுக்கு நேரமும் இல்லை. ஆனால் இன்றைக்கு 15 வருடங்கள் முன்பு எமது பொழுதுபோக்காக புத்தகங்கள்



மட்டுமே இருந்தன. பல பெண் வாசகர்கள் ஏன் ஆண் வாசகர்களும் கூட ரமணிச்சந்திரன், லக்ஷ்மி, சிவசங்கரி போன்றோரின் நாவல்களில் மூழ்கிக் கிடந்தவர்கள். இதை தவிர வும் தமிழ் நாட்டின் வெகுஜனப் பத்திரிகைகளான ஆனந்த விகடன், குமுதம், கல்கி, குங்குமம், கணையாழி என்பனவும் ஈழ வாசகர்களுக்கு தீனி போட்டன.

இதை தவிர கொஞ்சம் முற்போக் கானவர்கள் சுஜாதா, எண்டமூரி வீரேந்திரநாத் என்று படித்தனர். ஈழ எழுத்தாளர்களும் எழுதினர். செங்கை ஆழியான், தாட்சாயணி, டொமினிக் ஜீவா, தெணியான் போன்றோரின் ஆக்கங்களும் வெளிவந்தன.

ஆனால் தற்போது வாசகர்களின் வீதம் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. பத்திரிகை படிப்பதற்கே பலருக்கு நேரம் இல்லை. இந்த நிலையில் சிறுகதைகளைப் பற்றி கதைக்கவே தேவையில்லை. செல்போனும், தொலைக்காட்சியும், கிரிக்கெட்டும், எமது வாசினை நேரங்களை சுவீகரித்துக் கொண்டன.

இதனாலேயே தமிழ்நாட்டு வெகுஜனப் பத்திரிகைகளும் தமது சிறுகதைகளை ஒரேயொரு பக்கத்தில் சுருக்கிக் கொண்டன. உடனடி உணவுகளைப் போல (Fast Food) மக்களும் வாசிப்பதில் சின்ன சின்ன விஷயங்களையே விரும்பினர்.

ஆனால் சிறுகதை என்பது தொன்று தொட்ட வடிவம். மனித வாழ்க்கையை பல விதங்களில் படம் பிடித்துக்காட்ட சிறுகதைகள் பயன்பட்டன. பல நாடுக- ளில் பல்லாயிரக்கணக்கான சிறுகதை கள் சில ஆயிரக்கணக்கானவர்களால் எழுதப்பட்டாலும் மக்கள் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களும் காலத்தால் அழியாத படைப்புக்களை தந்தவர்களும் சிலரே. இவை சர்வதேச ரீதியான அங்கீகாரத்தையும் பெற்றன. பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன.

அந்த வகையில் பிரெஞ்ச் எழுத்தாளர் மாப்பஸான் (Maupassant) முக்கியமானவர். பிரமிக்கத்தக்க சிறுகதைகளை உலகுக்கு தந்தவர். யதார்த்தமான சிறுகதைகள் இவரது பலம்.

மனித உள்ளங்களின் நுட்பமான உணர்வுகள், மனிதரின் விந்தைச் செயற்பாடுகள், பலவீனங்கள், குரூரங்கள், கோரத்தன்மைகள், வக்கிரப்போக்குகள், பயங்கர நடவடிக்கைகள் போன்றவற்றை ஒரு தேர்ந்த ஆய்வாளன் போல் உணர்ந்து அவற்றை தனது சிறுகதைகள் மூலம் வெளிப்படுத்தினார்.

ஆண், பெண் உறவுகளில் நிலவுகின்ற பொய்மைகள் போலித்தனங்கள், ஆடம்பர வர்க்கத்தின் இரட்டை வாழ்க்கை முறைகள் ஆகியவை முக்கியமான கருப்பொருட்களாக இவரது சிறுகதைகளில் இடம் பெற்றது.

மிகச் சிறந்த கதை சொல்லியான இவர் மனித மனங்களின் ஆழமான உணர்வுகளை புரிந்து கொண்டதனாலோ என்னவோ மனநிலை பாதிக்கப்பட்டு 1892இல் தற்கொலைக்கு முயற்சி செய்து 1893இல் மரணமானார்.

ஐரோப்பிய இலக்கியத்தில் ஏன் உலக இலக்கியத்தில் கூட அழியாத ஒரு முத்திரை பதித்துச் சென்ற மாப்பஸான் 1850இல் பிறந்தார். 1871இல் பாரிசில் சிறிய அரச வேலையில் சேர்ந்ததன் மூலம் அதிகார வர்க்கத்திற்கும் இலக்கிய வட்டத்திற்கும் அறிமுகமானார்.

இதன் மூலம் மேல்தட்டு வர்க்கத்தினரின் வாழ்க்கை முறைகள் அவற்றின் போலிகள் என்பவற்றை அவரால் அறிந்து கொள்ள முடிந்தது.


சிறுகதைகளின் பிரதான இலக்கே அதன் முடிவில் இருக்கும் 'நச்..' என்ற ஒரு திருப்புமுனை தான். இவரது சிறுகதைகளில் அளவிறந்த ஆச்சரியத்துடன் அந்த திருப்பு முனையை அனுபவிக்க முடியும்.

சிறப்பான அம்சம் என்னவெனில் 1800களின் பிற்பகுதியில் எழுதிய சிறு கதைகள் ஆயினும் தற்காலத்திற்கும் வெகுவாகப் பொருந்தக் கூடிய வகையில் அவரது சிறுகதைகள் அமைந்துள்ளன.

300க்கு மேற்பட்ட சிறுகதைகளை யும், 06 நாவல்களையும், 03 பயணக் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். ஆயினும் அவரின் சிறுகதைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு முன்னோடியாய் அமைந்தவை.

தினமுரசு வாசகர்களுக்காக மாதிரிக்கு அவரின் சிறுகதையொன்றை அடுத்த வாரம் இந்தப் பகுதியில் தருகிறேன்.

- ஏ.கே -




# மொழியில் கலந்த மொழி!



கத்தரிக்காய்க்குள் சீன மொழி இருக்கிறது. கதே என்பது சீனச் சொல். அதை, தமிழில் கத்தரிக்காய் என்று புழக்கத்தில் கொண்டு வந்து விட்டோம்.

அதேமாதிரி தான் "கஷ்டம்" என்கிற சொல்லும். அது சமஸ்கிருதச் சொல். ஆயினும், பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழில் ஏற்றுக் கொண்டு விட்டோம்.

"ரொய்லெட்" என்பதை, பிரெஞ்ச் மொழி யில், "துவாலே" என்று உச்சரிக்க வேண்டும். நாம் குளிப்பதற்கு உபயோகப்படுத்துகிற, "துவாலைத் துண்டு" என்கிற தமிழ் சொல் இந்த பிரெஞ்ச் சொல்லிலிருந்து தான் நம்முடைய பழக்கத்திற்கு வந்திருக்கிறது.

மயில் தோகையில் உள்ள, "தோகை" என்கிற சொல்லையே ரோமில், "தோகா" என்று குறிப்பிடுகின்றனர். "தோகை" என்ற சொல் தமிழிலிருந்து ரோமுக்குப் போயிருக்கிறது.

துருக்கி மொழியில், "கூலி" என்கிற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். துருக்கியில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்திருந்த தூதுக்குழுவினர், "கூலி" என்கிற வார்த்தையை கேட்டுவிட்டு, "இந்த சொல்லை எப்படி நீங்கள் பயன்படுத்துகிறீர்கள்?" என்று கேட்டார்களாம்.

அப்போது ரா.பி.சேதுப்பிள்ளை, "எவ்வளவு ஆண்டு காலமாக துருக்கி இலக்கியத்தில் இந்த சொல் பயன்படுகிறது?" என்று கேட்டார். "துருக்கி இலக்கியம் பிறந்தே ஆயிரம் ஆண்டுகளுக்குள் தான்!" என்று பதில் வந்தது. "மெய் வருத்தக் கூலி தரும்!" என்று திருவள்ளுவர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்... என்று சேதுப்பிள்ளை விளக்கம் தந்தபோது, "கூலி" என்கிற சொல் தமிழ்ச் சொல்தான் என்று அவர்கள் அறிந்து கொண்டனர்.

ஆகவே, தாராளமான மனப்பான்மையுடன் கொடுக்கல் - வாங்கல் செய்துகொள்வதில் தவறில்லை.

# படமாகிறது ஷோபா டே வாழ்க்கை



மனம் திறந்து உள்ளதை உள்ள படியும், கிளுகிளுப் பாகவும் எழுதுப வர், பிரபல பத்திரி கையாளர் மற்றும் நாவலாசிரியரான ஷோபா டே. அவரது வாழ்க்கை வரலாறு இப்போது படமாகி றது. ஹிந்தி நடிகை ரவீணா டாண்டன், ஷோபா டேயின் பாத்திரத்தில் நடிக்கிறார். "எழுத்தாளராக இருக்கும் பெண் என்ற அளவில், ஷோபா டே, எனக்கு இன்ஸ்பிரேஷனாக இருக்கிறார். மற்றபடி அந்தப் பாத்திரம், கற்பனையில் உருவானதே..." என்கிறார் படத்தின் இயக்குனர் சுதிப்தோ சட்டோபாத்யாயா. படத்தின் பெயர், "ஷோபா 7 நைட்ஸ்!"

# ஜேம்ஸ் பொண்ட் பட நாயகி

படத்தில் இருப்பவர், பிரபல பிரெஞ்ச் மொடல் மற்றும் நடிகை பெர்னிஸ் மார்லோ. இவரைப் பற்றி இப்போது யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனால், இந்த ஆண்டு இறுதிக்குள், பெர்னிஸ் மார்லோ, உலகம் முழுவதும் நன்கு அறியப்படுவார். ஏனெனில், இந்த ஆண்டு இறுதியில் வெளிவரவிருக்கும் லேட்டஸ்ட் ஜேம்ஸ் பொண்ட் படமான, "ஸ்கைபோல்" படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். இது, 23ஆவது, "ஜேம்ஸ் பொண்ட்" படம். ஹீரோ டானியல் கிரேய்க்கு, காதலியாக நடிக்கிறார் பெர்னிஸ் மார்லோ.




பிரெஞ்ச் படங்களில் மட்டும் நடித்து வந்தவருக்கு, இந்த ஜேம்ஸ் பொண்ட் படம், முதல் சர்வதேச படமாக இருக்கும். உலகில் பல்வேறு மொழிகளில், "டப்" செய்யப்படும், "ஸ்கைபோல்" படத்தை ஒஸ்கார் விருது பெற்ற இயக்குனர் சாம் மெண்டிஸ் இயக்குகிறார்.

# தயாராகிறது விண்வெளி டாக்சி!

விண்வெளிக்கு வீரர்களை கொண்டு செல்லும் "ஸ்பேஸ் டாக்சி" தயாரிக்க தனியார் நிறுவனங்களுக்கு நாசா ஆய்வு நிறுவனம் 15,000 கோடி ரூபா வழங்கியிருக்கிறது.


அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "நாசா" 35 ஆண்டுகளாக விண்வெளிக்கு விண்கலங்களை அனுப்பி வருகிறது. என்டர்பிரைஸ், கொலம்பியா, சலஞ்சர், டிஸ்கவரி, அட்லான்டிஸ், எண்டேவர் ஆகிய விண்கலங்கள் இதுவரை அனுப்பப்பட்டுள்ளன. இவை விண்வெளிக்கு செல்லும்போது றொக்கெற் போல இயக்கப்படும். விமானம் போல தரையிறங்கும். பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வருவதால் இவற்றுக்கு ஓய்வு கொடுக்கப்போவதாக நாசா சில ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தது. 2010ஆம் ஆண்டு முதல் இந்த ரக விண்கலங்கள் இனி அனுப்பப்படாது எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த முடிவு சிறிது காலம் ஒத்திவைக்கப்பட்டு, அட்லான்டிஸ் விண்கலம் கடந்த ஆண்டு ஜூலை 8ஆம் திகதி தரையிறங்கியது. இதுதான் விண்கலத்தின் கடைசிப் பயணம் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.



இந்நிலையில், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு (ஐ.எஸ்.எஸ்) வீரர்களை அழைத்து செல்லும் வகையில் புதுவித வாகனம் (விண்வெளி டாக்சி) தயாரிக்க நாசா 15,000 கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. போயிங், ஸ்பேஸ் எக்ஸ், சியரா நெவாடா ஆகிய நிறுவனங்களுக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. போயிங், ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் விண்வெளி ஓடங்கள், கேப்சூல்கள் தயாரித்து வருகின்றன. றொக்கெற் போல செங்குத்தாக பறந்து சென்று, விமானம் போல கிடையாகத் தரையிறங்கும் வகையைச் சேர்ந்த "ட்ரீம் சேஸர்" ஸ்பேஸ் பிளேன் வாகனத்தை சியரா நெவாடா உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# யார் இந்த அபாய அழகி?

இந்தப் புகைப்படத்தைப் பார்த்தால், ஏதோ ஒரு கடற்கரையில், ஹொலிவுட் படப்பிடிப்பில் எடுக்கப்பட்டது போல் தோன்றும். யாரோ ஒரு நடிகை, நீச்சல் உடையில், முதுகில் துப்பாக்கியை அலட்சியமாக தொங்க விட்டபடி, தோன்றுவதாக நினைப்பீர்கள். ஆனால், இந்தப் பெண், நடிகை அல்ல. இஸ்ரேல் இராணுவத்தைச் சேர்ந்தவர். இராணுவ முகாமிலிருந்து, ஜாலியாக பொழுதை கழிப்பதற்காக, கடற்கரைக்கு, அந்தப் பெண் சென்றபோது, இந்த புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இணையதளத்தில் வெளியான இந்தப் புகைப்படம், உலகம் முழுவதும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.



"பணியில் இல்லாதபோது, அதுவும், கடற்கரையில் ஜாலியாக பொழுதைக் கழிக்கும் நேரத்தில், துப்பாக்கியை, அந்தப் பெண், கொண்டு சென்றது ஏன். முகாமிலேயே, துப்பாக்கியை வைத்துச் சென்றிருக்கலாமே..." என, இந்தப் புகைப்படத்தைப் பார்த்த பலரும், சமூக வலைத் தளங்களில் தங்களது அதிருப்தியை பதிவு செய்துள்ளனர். இஸ்ரேல் இராணுவமோ, இதுபற்றி சற்றும் அலட்டிக் கொள்ளவே இல்லை. "டேக் இட் ஈஸி" என்கின்றனர், இராணுவ அதிகாரிகள்.

போனஸ் தகவல். இஸ்ரேலை பொறுத்த வரை, அந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், கட்டாயம் இராணுவ சேவையாற்ற வேண்டும். ஆண், பெண், பாகுபாடு இல்லை. பெண்கள், 18 வயதை அடைந்தவுடன், கட்டாயமாக, இரண்டு ஆண்டுகள் இராணுவத்தில் பணியாற்ற வேண்டும். இஸ்ரேல் இராணுவத்தில் மொத்தம் உள்ள வீரர்களில், 33 சதவீதம் பேர் பெண்கள். இராணுவத்தில் அதிகாரிகள் மட்டத்தில் பணிபுரிவோரில், 51 சதவீதம் பெண்கள். இஸ்ரேல் இராணுவத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் பெண்கள் உள்ளனர்.

# சிறந்த அறிவுரைகள்



**வில்லியம் ட்யூரண்ட் ஒரு சிறந்த அமெரிக்க சிந்தனையாளர். அவர் தன் பேரப் பிள்ளைகளுக்கு எழுதிய பத்து அறிவுரைகள் இவை. எல்லாக் குழந்தைகளுக்கும் ஏற்ற அறிவுரைகளாக இவை இருப்பதுதான் சிறப்பு.**

♦ உடலையும் உள்ளத்தையும் துப்புரவாக்கிக் கொண்டபின் உன் யோசனையைத் தொடங்கு. உன் குளியலறையை நீயே சுத்தம் செய்து நன்றாக வைத்துக் கொள்.

♦ காலையில் எழுந்ததும் உன் அறையைவிட்டு வெளியே வரும்போது உன்னுடைய அழுக்கு உடைகளைத் துவைப்பதற்காகத் தனிக் கூடையில் போட மறக்காதே.

♦ நன்றாக ஆடை உடுத்திக் கொள். புது நபர்கள் நம்மை நெருங்கிப் பழகி அறிந்து கொள்வதற்கு முன்பு நம் உடையைப் பார்த்துத்தான் நம் தரத்தை எடை போடுகிறார்கள். மதிப்புள்ள பிரமுகர்களின் கருத்து நம் உயர்வுக்கும் நல்வாழ்வுக்கும் வகை செய்கிறது.

♦ தினமும் குடும்பத்திலோ வெளியிலோ மற்றவர்களுடன் பழகத் தொடங்கும்போது புன்சிரிப்போடு இரு, அப்படியே பழகு. உன் குறைகளைக் குறைவாகவும் உன் நிறைகளை அதிகமாகவும் எண்ணி மகிழ்ச்சி கொள்.

♦ மற்றவர் பேசும்போது நீ குறுக்கே பேசாதே, உனக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கும்போது பேசு, பணிவாகவே பேசு. வம்பு வளர்க்கும் வாக்குவாதத்தில் இறங்காதே. உண்மையை ஏற்றுக் கொள்.

♦ எல்லோரிடமும் பண்போடு கண்ணியமாகப் பழகு. விட்டுக் கொடுக்கவும் உதவவும் தயாராக இரு. முக்கியமாக உன் விரோதிகளிடத்தில் இவற்றைத் தவறாது மேற்கொள்.

♦ பண்படாத பயனில்லாத தீங்கு தரும் சொல், செயல், காட்சிகளை மிக மிகக் குறைவாகவே அணுகு. உன் மூளைக்கு ஏற்றபடிதான் உன் புத்தி அமையும். உன் மூளையைக் குப்பைத்தொட்டியாக்கிக் கொள்ளாதே.

♦ தினமும் ஏதாவது நல்ல விஷயத்தைப் படித்துக் கொண்டு வா. இப்படியே படித்துப் படித்து முடிந்தவரையில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டே இரு.

♦ வெளிக்குப் பணிவுள்ளவனாகவும் உள்ளுக்குள் தன்மானம் நிரம்பியவனாகவும் இரு. பணிவினால் அக்கம்பக்கத்தாரிடமும் புதியவர்களிடமும் நல்ல பெயர் எடுப்பது எளிது.

♦ கடுமையான வழியும் வேண்டாம். எளிமையான வழியும் வேண்டாம். நடுத்தர வழியில் முன்னேறு. வெற்றிக்கு எளிய வழி இதுதான்.

# வயதுப்பொருத்தம்



உலக அழகி ஐஸ்வர்யா ராய் தன்னைவிட இரண்டு வயது குறைந்த அபிஷேக் பச்சனையும், சச்சின் டெண்டுல்கர் தன்னைவிட ஐந்து வயது கூடிய அஞ்சலியைத் திருமணம் செய்துகொண்டதையும் அந்த நேரங்களில் பரபரப்புச் செய்திகளாகப் படித்தறிந்தோம். இதெல்லாம் ஜுஜுபி என்று சொல்லக்கூடிய வயது வித்தியாசத்துடன் கல்யாணம் செய்துகொண்ட பிரபலங்கள் இவர்கள்:

- ஷேக்ஸ்பியரின் காதலி அவரைவிட 16 வயது மூத்தவர்.
- டால்ஸ்டாயின் காதலி அவரைவிட 18 வயது இளையவர்.
- சாமுவேல் ஜான்சனின் காதலி அவரைவிட இரண்டு மடங்கு வயது அதிகமானவர்.

# பருத்தித்துறையும் கள்ளத்தீனும்



- கிருத்திகன் குமாரசாமி -

எனக்குத் தெரிஞ்ச மட்டில ஒரு காலத்தில, அதாவது 1996இற்கு முன் பருத்தித்துறை கூட எங்களுக்கு ஒரு வெளியூர் மாதிரி இருந்தது. அப்பா சைக்கிளில அல்லது ஏதேனும் அவசரம் எண்டால் மோட்டார் சைக்கிளில் பருத்தித்துறைக்குப் போவார். யாழ்ப்பாணம் போறது வெளிநாடு போறமாதிரி (எல்லாம் வெடிவால் முளைக்கும் வரைதான்). நான் அப்போ ஒருமுறைக்குமேல் போன அதிகதூரம், மந்திகை ஆஸ்பத்திரி. தம்பி பிறந்த போது ஒருக்கால், அக்காவுக்கு மகன் பிறந்த போது ஒருக்கால், மச்சாளுக்கு மகள்கள் பிறந்த போது இரண்டுதரம் என்று பத்து வயதுக்குள்ளாகவே நான்கு தரம் போய்வந்த இடம் மந்திகை ஆஸ்பத்திரிதான். அப்பா பருத்தித்துறையில இருக்கிற காணிக்கந்தோருக்குப் போய் வரும் நாட்களிலெல்லாம் அப்பாவின் வரவை மனம் எதிர்பார்த்துக் காத்திருக்கும். ஏனெண்டால், அவர் வாங்கி வரும் கள்ளத்தீனுக்காக.

கள்ளத்தீன் எண்டால், கடையில வாங்கிச் சாப்பிடுற வடை, போண்டா, வாய்ப்பன் முதலான வீட்டில் செய்யப்படாத பொருட்கள். எங்கள் ஊரில் கடையில் வாங்கிச் சாப்பிடுகிற இடியப்பம், பிட்டு எல்லாமே கள்ளத்தீன் தான். இதனால அப்பா பருத்தித்துறையிலிருந்து என்ன வாங்கிவந்தாலும் அது கள்ளத்தீன் என்றே அழைக்கப்பட்டது. அப்பா பருத்தித்துறையிலிருந்து வாங்கிவரக்கூடிய கள்ளத்தீன்களில் சிறப்பானவை தோசை, வெள்ளையப்பம், தட்டைவடை ஆகிய மூன்றும். உழுந்துவடை, பருப்புவடை, போளி போன்றன யாழ்ப்பாணம் போய்வரும்போது வாங்கிவருவார். வல்வெட்டித்துறைப் பக்கம் போனால் எள்ளுப்பா. இந்த உணவுகளைப் பற்றி கொஞ்சம் கதைப்போமே.

பருத்தித்துறை தோசையின் புகழுக்குக் காரணம், அதன் அளவு. சின்னவயதில் எனக்கெல்லாம் ஒரு தோசை சாப்பிட்டால் இரண்டு நாளைக்கு நிற்கும். அநேகமாக இரண்டு வகை சம்பல் தருவார்கள். பச்சை மிளகாயில் அரைத்த பச்சைச் சம்பல் அல்லது வெள்ளைச் சம்பல் என்று அழைக்கப்படும் சம்பல் ஒன்று, மற்றது செத்தல் மிளகாயில் அரைக்கப்பட்ட உருது சம்பல் அல்லது சிவத்த சம்பல். இதோ, எழுதும் போதே எச்சில் ஊறுகிறது. அதே போல் பருத்தித்துறை வெள்ளையப்பமும் ஒரு சிறப்பான விஷயம். எங்கள் அம்மா எத்தனை முறை முயன்றும் அந்த மென்மையும், சுவையும் வரவில்லை. வெள்ளையப்பத்துக்கான ஸ்பெஷலான சம்பலோடு ஒரு பதினைந்து வெள்ளையப்பம் உள்ளே இறங்கினாலும் வயிறு நிரம்பாது. அப்படி பூ போல இருக்கும் வெள்ளையப்பம்.

தட்டைவடையும் அப்படியே. அந்த ருசியை எங்கள் வீட்டுப் பெண்களால் ஏனோ கொண்டுவர முடிவதில்லை. 2002இற்குப் பின்னான சமாதான காலத்தில் ஊருக்குவந்த பெரிசுகள் எல்லாரும் கேட்டு வாங்கி வெளிநாட்டுக்குக் கொண்டு போனது பருத்தித்துறைத் தட்டைவடையைத் தான். இதுவும் கணக்கில்லாமல் சாப்பிடத் தூண்டும் ஒரு போதை வஸ்து என்றே சொல்லலாம். மற்றவர்களுக்கு எப்படியோ தெரியாது, எனக்கு இரவில் சாப்பாட்டுக்குப் பின் இரண்டு பருத்தித்துறைத் தட்டைவடையைக் கொறித்து விட்டுப் படுத்தால் காலையில் வயிறு அற்புதமாகச் சுத்தமாகும். நம்வீட்டுப் பெண்கள் சுடும் தட்டைவடையைச் சாப்பிட்டால்...ம்ஹூம் அதை எல்லாம் இங்க சொல்லமுடியாது.

இந்த உணவு வகைகள் பருத்தித்துறையில் பரவியிருந்த பல உணவகங்களில் கிடைத்தன. ஆனால் வெள்ளையப்பமும், தோசையும் உணவகங்களில் வாங்கிச் சுவைப்பதை விட, பருத்தித்துறையின் குறுக்குத் தெருக்களிலுள்ள வீடுகளின் மதில்களில் சின்னதாக ஓட்டை போட்டு, சின்னச் சின்ன கதவுகள் போட்டு பெரும்பாலும் காலை அல்லது மாலையில் கடைவிரிக்கும் அந்த ஊர்ப் பெண்களின் கையால் கிடைக்கும் தோசை அல்லது அப்பம்தான் சிறப்பானது. என்ன இவர்களின் சில கடைகளின் முன்னால் சாக்கடை ஓடும். அப்படியான கடைகளைத் தவிர்க்க வேண்டும்.

அப்போ அதிகாலையில் ரியூசனுக்குப் போகிறபடியால் வீட்டில் தரும் காசில் பருத்தித்துறையில் வாங்கி உண்ண ஆரம்பித்தோம் (பள்ளியும், ரியூசனும் பருத்தித்துறையில்தான் அமைந்திருந்தன). நாங்கள் காலையிலேயே வெள்ளையப்பம். தோசை எல்லாம் இறுக்கிவிட்டுப் போவது வழக்கம். அப்படியான நாட்களில் வகுப்பில் தூங்காமல் இருப்பதற்குப் படும் பாடுதான் அதிகம். நூலகத்தில் தூங்கி ரகுவரன் ஆசிரியரிடம் திட்டு வாங்கியதும் அதிகம். கொஞ்சக் காலம் போனதும் புரிந்தது, அந்தத் தூக்கம் பருத்தித்துறை தோசை அல்லது வெள்ளையப்ப மகிமை என்று. என்னதான் வாத்திமாரிடம் அடிவாங்கும் அபாயம் இருந்தாலும், தோசை, வெள்ளையப்பம் சாப்பிடும் அந்த அபாரமான அனுபவத்தை விட்டுக்கொடுக்க முடியவில்லை. நான் இன்னொருமுறை ஊர் மீளும்போது அந்த அபார அனுபவம் கிடைக்குமா என்பது சந்தேகம். யாராவது சமீபத்தில் பருத்தித்துறைப் பக்கம் போயிருந்தால் சொல்லுங்களேன்... தோசையும், வெள்ளையப்பமும், தட்டைவடையும் இன்றைக்கும் விற்கிறார்களா??

# சைக்கிள் கலாசாரம்...

பொருளாதாரத்தில் நலிவுற்றிருப்பவர்களுக்கும் ஒரு நகரத்தில் வாழ்வதை அதிக சுமையற்றதாக சாத்தியப்படுத்தும் அம்சங்களில் ஒன்று சைக்கிள். அதன் பெல் ஒலித்தால் மாடு கூட ஒதுங்கிக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். பிரேக் இல்லாமல் கூட சைக்கிள் ஓட்டி விடலாம். பெல் இல்லாமல் சைக்கிள் ஓட்ட முடியாது.

எனக்குப் பரிச்சயமான முதல் சைக்கிள் மணி என் அப்பாவுடையதுதான். வீட்டு வாசலில் வந்து இறங்கும் போது அவருடைய சைக்கிள் மணியை இரு முறை ஒலிப்பார். அதைக் கேட்ட மறு விநாடியே குழந்தைகள் (!) நாங்கள் எல்லாரும் அவர் அறையில் நாங்கள் எடுத்தது கலைத்தது எல்லாவற்றையும் அவசர அவசரமாக சரி செய்து விட்டு ஓடுவோம்.

மோட்டார் சைக்கிள், கார் வைத்திருப்பவர்களை விட சைக்கிள் வைத்திருப்பவர்கள்தான் தங்கள் வண்டிப் பராமரிப்பில் மிகப் பெரும் கவனம் செலுத்துபவர்கள் என்பது என் முடிவு. என் அப்பாவும் என் அண்ணன் இராமசாமியும் சைக்கிளைத் துடைத்துப் பராமரிப்பதைப் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கும்.

எண்பதுகள் வரையில் சைக்கிள் வைத்திருந்தவர்களுக்கு இருந்த முக்கியமான ஒரு தலைவலி சைக்கிள் லைற்தான். சைக்கிளில் லைற் இல்லையென்றால் நிச்சயம் பொலிஸிடம் மாட்டுவார்கள். டபிள்ஸ் போனாலும் பொலீஸ் பிடித்துக் கொள்ளும்.

லைற் இல்லாமல் வந்து பொலிஸிடம் மாட்டியவர் பற்றி அறுபதுகளில் வெளியான ஒரு ஆனந்த விகடன் ஜோக் இன்னும் நினைவில் இருக்கிறது. "காவலர்: ஏனயா சைக்கிள்ல லைற் இல்லே? சைக்கிள்காரர்: அதான் ஊரெல்லாம் லைற் போட்டு வெச்சிருக்குதுங்களே.. காவலர்: அப்பிடியா. அதான் ஊரெல்லாம் காத்து இருக்குதே. உன் சைக்கிளுக்கு எதுக்கு தனியா காத்து" (என்றபடி டயரில் காற்றைப் பிடுங்கிவிடுகிறார்)

சைக்கிள் ஓட்டி பெடல் செய்ய ஆரம்பித்த பின்னர் கூடவே ஓடி டபிள்ஸ் ஏறுவதுதான் முறை. அப்படி ஏறும்போது ஓட்டுபவரின் பேலன்ஸ் குலையாமல் லாகவமாக ஏறவேண்டும்.

மோட்டார் சைக்கிளோ, கார்களோ நம் கலாசாரத்தின் ஒரு பகுதியாக இன்னும் மாறவே இல்லை. ஆனால் சைக்கிள் இரண்டறக் கலந்து விட்டது. மரண கூண்டில் சில நிமிடங்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டலாம். ஆனால் ஒரு வாரம் இடைவிடாமல், மோட்டார் சைக்கிள் ஓட்டுவதாக அறிவிக்கமுடியாது. அப்படி சைக்கிள்தான் ஓட்ட முடியும்.

மைதானத்தில் அப்படிப் பல வீரர்கள் சைக்கிள் ஓட்டுவதை மணிக்கணக்கில் நின்று வேடிக்கை பார்த்திருக்கிறேன். சாதாரண சைக்கிளே அந்த நிகழ்ச்சியில் சாகசமான விஷயமாக மாறி விடும். ஓடும் வீரர் அதில் இருந்தபடியே குளிப்பார், துடைப் பார், உடைமாற்றுவார், குடிப்பார், தரையில் இருக்கும் ரூபா நோட்டை கண்ணிமையால் கவ்வி எடுப்பார், ஒரு சைக்கிளிலிருந்து இன்னொன்றுக்கு தரையில் கால் படாமல் மாறுவார், நின்று ஓட்டுவார், படுத்து ஓட்டுவார் இன்னும் என்னென்னவோ செய்வார். அலுப்பு ஏற்படாமல் இருக்க 24 மணி நேரமும் சினிமாப் பாட்டுகள் ஒலி பரப்பாகும். இன்று எங்காவது அப்படி ஏதாவது சைக்கிள் சாகசம் நடக்கிறதா என்று தெரியவில்லை. நடக்கும் சாத்தியம் மிக அபூர்வம்.

மூன்று சைக்கிளோட்டிகளை நான் மறக்கவே மாட்டேன். ஒருவர் எழுத்தாளர் அசோகமித்திரன். சைக்கிளைப் பத்திரமாகப் பூட்டி வைக்கப் பாதுகாப்பில்லாத இடங்களைத் தவிர மீதி எல்லா இடங்களுக்கும் அசோகமித்திரன் சைக்கிளில்தான் சென்று வருவார். அசோகமித்திரனும் சைக்கிளும் மேட் ∴ பார் ஈச் அதர் போல ஒரே சைசில் பாந்தமாக இருப்பார்கள். சைக்கிள் லைற் பிரச்சினை பற்றி அசோகமித்திரன் எழுதிய கட்டுரை மறக்கமுடியாதது.

இன்னொருவர் ச.சீ.கண்ணன். இவர் அரசியல் பார்வையற்றோருக்கும் அசல் பார்வையற்றோருக்கும் செய்துவரும் தொண்டு மகத்தானது. கண்ணன் தன் வீட்டு மாடியில் வைத்திருக்கும் கார்ல் மார்க்ஸ் நூலகம் போல மார்க்சியம், சமூகம் தொடர்பான நூல்களை ஒரே இடத்தில் குவித்து வைத்திருக்கும் வேறு நூலகம் ஏதுமில்லை.

பார்வையற்ற மாணவர்களுக்கு படிப்பது, பாடம் சொல்லிக் கொடுப்பதும் ஆய்வுகள் செய்ய உதவுவது, பஸ் பாஸ், கல்விக்கட்டண சலுகை பெற்றுத் தருவது, அவர்களின் உரிமைகளுக்காகப் போராடும் பட்டதாரிகள் சங்கத்தை வழிநடத்துவது என்று

- ஞாநி

கண்ணன் செய்துவந்த பணிகள் கொஞ்சநஞ்சமல்ல. அவர் வீடே பார்வையற்ற பறவைகள் சரணாலயம் போல இருக்கும்.

ஒருமுறை கொளுத்தும் வெயிலில் சைக்கிளில் சென்று ஒரு பார்வையற்ற மாணவியின் படிப்புப் பிரச்சினையை தீர்க்க அவர் அலைந்தபோது, சாலையில் அவரைப் பார்த்தேன். நான் ஆட்டோவில் உட்கார்ந்திருப்பது எனக்கு அவமானமாக இருந்தது. தொண்ணூறு வயதைத் தாண்டிவிட்ட கண்ணன் எனக்குத் தெரிந்து 35 வருடமாவது சென்னை வீதிகளில் சைக்கிளில், இன்னொருத்தருக்காக அலைந்திருக்கிறார்.

என் மதிப்புக்குரிய இன்னொரு சைக்கிள் ஓட்டி எழுத்தாளரும் பதிப்பாளருமான மறைந்த பொன். விஜயன். விஜயனின் சைக்கிளின் கரியர் புத்தகக் கட்டுகளை வைக்க ஏற்றதாக அகன்று விரிந்து இருக்கும். அவர் இலக்கியம் மட்டுமன்றி சமூக அரசியல் பார்வையுடன் வெளியிட்ட புதிய நம்பிக்கை இதழையும் பல புத்தகங்களையும் அவரே அச்சுக் கோர்த்தார். தமிழில் சிறு பத்திரிகை நடத்தி இலக்கிய மேம்பாட்டுக்காக தன் சொந்த வாழ்க்கையை காவு கொடுத்தவர்கள் பட்டியலில் விஜயனுக்கு முக்கியமான இடம் உண்டு. இன்று இடைநிலை இதழ்கள் நடத்துவோருக்கு விஜயன் போன்றோர் பட்ட துயரங்கள் அசட்டுத்தனமாகக் கூடத் தோன்றலாம் என்பதுதான் காலத்தின் மாற்றம்.

எனக்குப் பழக்கமான நண்பர்களில் இன்னும் பலர் சைக்கிளில்தான் எழுபதுகளில் சென்னையை வலம் வந்தார்கள். நாடகக்காரர் ந.முத்துசாமி சைக்கிள் ஓட்டும்போது கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்திருப்பார். விமலாதித்த மாமல்லன் சைக்கிள் ஓட்டுவதில் ஒரு அநாயாசமான ஸ்டைல் தெரியும். ஓவியர் சுமன் சைக்கிள் ஓட்டும்போது சைக்கிளில் உட்கார்ந்தபடியே அதை அவர் துரத்திக் கொண்டு ஓடுவது போலத் தோன்றும்.

எத்தனை கை மாறினாலும் சைக்கிள்கள் நன்றாக பராமரித்தால் அருமையாக உழைப்பவை. சிலர் பேனாவைப் போல தங்கள் சைக்கிளையும் இரவல் தரமாட்டார்கள்.

அந்த காலத்தில் சைக்கிள் எத்தனை வருடமாக உழைக்கிறது என்பது முக்கியமான விஷயம். தாத தாவின் சைக்கிளைப் பேரன் பயன்படுத்துகிறான் என்று விளம்பரத்திலேயே சொல்லப்படும். எண்பதுகளில் இந்த விளம்பர உத்தி மாற ஆரம்பித்தது. இப்ப இந்த மொடல் சைக்கிள்தான் ∴பாஷன் என்று விளம்பரங்கள் சொல்லத் தொடங்கின. நீடித்த உழைப்பைப் பற்றி சொல்வதை விட்டுவிட்டார்கள். இது சைக்கிளுக்கு மட்டுமல்ல, இதர அன்றாட சாதனங்களுக்கும், நீடித்த உழைப்பு, தரம் முதலிய அம்சங்கள் கைவிடப்பட்டு ஸ்டைல், லுக், உபயோகிப்பதில் இருக்கும் வசதி போன்ற அம்சங்கள் முன் நிறுத்தப்பட்டன.

சைக்கிள் அபிமானிகள் தங்கள் சைக்கிள்களை விதவிதமாக அலங்காரம் செய்துபார்ப்பார்கள். ஹாண்டில் பாருக்கு குஞ்சம் தொங்கும். இதர பார்களுக்கு ரெக்சின் உடை போட்டிருக்கும். இரு பக்கம் சைட் மிரர் வைத்தவர்களும் உண்டு. பெல்லில் பல ரகங்கள் இருந்தன. பல முறை தட்டத் தேவையின்றி ஒரு தட்டிலேயே தொடர்ந்து ரீங்கரிக்கும் பெல்கள்.

சைக்கிள் என்ற வாகனம் ஒன்றைத்தான் குழந்தைப் பருவம் முதல் முதிர்ந்த வயது வரை வெவ்வேறு வயதுக்கேற்ற வடிவில் பெற்றுப் பழகலாம். மூன்று சக்கர சைக்கிளில் தொடங்கி மினி சைக்கிளுக்கு வந்து பின் பார் இல்லாத லேடீஸ் சைக்கிளில் பழகி அடுத்து பாருள்ள சைக்கிளில் குரங்கு பெடல் அடித்து பின் முழுமையான சைக்கிள் ஓட்டியாக பட்டம் பெறலாம்.

இன்றைய நகரக் குழந்தைகளில் பெரும்பாலோருக்கு மூன்று சக்கர சைக்கிளுக்குப் பிறகு சைக்கிள் வாழ்க்கை இல்லாமல் போய்விடுகிறது. சைக்கிள் பஞ்சர் ஒட்டுவது என்றால் என்ன என்று தெரியாத ஒரு டாக்டரை சந்தித்தேன். என் கண்ணில் ஏற்பட்ட ஒரு பிரச்சினைக்காக அதில் இருந்த ஒரு சிறு துளையை மூட இரவல் கார்னியா துண்டை வாங்கி அதன் மீது ஒட்டும் பேட்ச் கிரா∴ப்ட் பற்றி டாக்டர் எனக்கு விவரித்தார். ஓ, சைக்கிள் பஞ்சர் ஒட்டுற மாதிரியா என்று கேட்டேன். அது என்ன என்றார். டாக்டருக்கு சைக்கிள் டியூபில் எப்படி பஞ்சர் ஒட்டுவார்கள் என்று நான் விவரிக்க வேண்டியதாயிற்று. நான் சைக்கிள் ஓட்டியதும் இல்லை. பஞ்சர் ஒட்டுவதைப் பார்த்ததுமில்லை என்றார் டாக்டர்.


சைக்கிள் ஓட்டத் தெரியாமலே வளரும் தலைமுறை 40க்கு மேல் வீட்டிலேயே ஸ்டாண்ட் போட்ட சைக்கிளை ஓட்டி உடலைக் காப்பாற்றக் கஷ்டப்படுகிறது.

> **சைக்கிள் என்ற வாகனம் ஒன்றைத்தான் குழந்தைப் பருவம் முதல் முதிர்ந்த வயது வரை வெவ்வேறு வயதுக்கேற்ற வடிவில் பெற்றுப் பழகலாம். மூன்று சக்கர சைக்கிளில் தொடங்கி மினி சைக்கிளுக்கு வந்து பின் பார் இல்லாத லேடீஸ் சைக்கிளில் பழகி அடுத்து பாருள்ள சைக்கிளில் குரங்கு பெடல் அடித்து பின் முழுமையான சைக்கிள் ஓட்டியாக பட்டம் பெறலாம்.**

நமது நகரத்தின் வளர்ச்சியில் சைக்கிள்கள் காணாமல் போவது ஆபத்தானது. இன்று நகரத்தின் போக்குவரத்து பிரதானமாக கார்கள், அடுத்து பஸ்கள் நடமாட்டத்தை மட்டுமே மனதில் வைத்து வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதில் சைக்கிள் ஓட்டுவது மைதானத்தில் இடைவிடாமல் ஓட்டுவதை விட பெரிய சாகசமாகவே இருக்கும்.

சைக்கிள் ஓட்டுபவரையோ நடப்பவரையோ பற்றி நகர நிர்வாகங்கள் யோசிப்பதும் இல்லை. கவலைபடுவதும் இல்லை. சைக்கிள் என்பது ஏழையின் கார். அதற்கு நகரத்தில் போதுமான இட ஒதுக்கீடு இல்லையென்றால் நகரத்தின் சமூக நீதியில் சிக்கல் இருக்கிறது என்று அர்த்தம். பல நாட்கூலித் தொழிலாளர்கள், ஆலைத்தொழிலாளிகள், சிறு கடைகளில் சொற்ப சம்பளத்தில் பணியாற்றும் ஊழியர்கள் போன்ற பலருக்கு சைக்கிள், சம்சார சாகரத்தைக் கடக்க உதவும் படகாக இருந்திருக்கிறது. முப்பது நாள் பஸ் கட்டணம் மிச்சம் என்பது ஒரு ஏழைக் குடும்பத்துக்கு பெரும் சேமிப்பு.

மேற்கத்திய நாடுகளிலிருந்து குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து நாம் கற்கவேண்டியதில் முக்கியமானது சைக்கிள் கலாசாரம். நம்மிடம் இருந்து நாம் இழந்த கலாசாரம் அது.



# முன்பள்ளிக் கல்விக் கூடங்களில் பயமுறுத்தல் உத்தி இருக்கக் கூடாது

முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்கள் கல்வியில் முதன்முதலாக அடி எடுத்துவைக்கும் வேளை அவர்களை பயமுறுத்தும் வகையிலான உத்திகளை யாரேனும் கையாளக்கூடாது என கரவெட்டி கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கரவை சிந்தாமணி விதாயகர் முன்பள்ளியின்விளையாட்டுப் போட்டி கட்ந்த 5ஆம் திகதி பி.ப.2 மணிக்கு யாழ்.மாணிக்க வாசகர் வித்தியாலய மைதானத்தில் க.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பிள்ளைகளது உச்ச ஆற்றல் விருத்திக்கு பங்களிக்கும் அடிப்படையான இடமாக முன்பள்ளிகள் விளங்குகின்றன.

பிள்ளைகளை தொந்தரவு பயமுறுத்தல் என்பனவற்றுக்கு உற்படுத்தலாகாது

முன்பள்ளிகள் எப்போதும் அவதான நிலையமாக செயற்படல் வேண்டும். முன்பள்ளிகளில் கற்கும்சிறார்களை எப்போதும் முன்கல்வி வேற்றுமை, அச்சம், என்பனவற்றில் இருந்து மீட்டெடுக்கவேண்டும்.

மகிழ்ச்சியான சூழலிலே அவர்கள்கற்கவேண்டும

பிள்ளைகள்தவறுஇழைக்கும் போது விளக்கம் பெற்றுதிருத்துவதற்கான சந்தர்ப்பங்களைவழங்க வேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்படும். அறிவுறுத்தல்கள் எப்போதும் நேர்க்கணியமாக இருக்கவேண்டும்.

முன்பள்ளி மாணவர்களது கல்வி வளர உடலூள ஆரோக்கியத்தில் கூடிய அக்கறை செலுத்துதல்வேண்டும் அதனடிப் படையில் முன்பள்ளிவிளையாட்டுப் போட்டியினை வருடா வருடம் ஒழுங்கு செய்கின்றனர்.

பிள்ளைகளது விளையாட்டுகள் எப்போதுமே திறனாய்வுக்கான விளையாட்டுப்போட்டியாகவும் இருத்தல் வேண்டும் ஆகவே விளையாட்டுப் போட்டியின்போது சகல மாணவர்களுக்கும் பங்கு கொள்ளும் வகையிலானசமவாய்ப்புக்களை வழங்கவும் வேண்டும் என்றார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன், கௌரவ விருந்தினராக வித்தியாலய அதிபர் இ.இராகவன், மற்றும் கரவெட்டிமத்தி கிராம அலுவலர் பா.லலித் ஆகியோரும் கலந்துகொண்டனர். (116)

# இரத்தவாந்தி எடுத்தவர் மருத்துவமனையில் அனுமதி

(கிரு-சிகரம்)

நல்லூர் ஆலயத் திருவிழாவினை முன்னிட்டு ஆலய வளாகத்தில் அமைந்துள்ள எடிசலாட் நிறுவனத்தில் தொலைபேசி அட்டைகளை விநியோகம் செய்யும் ஒருவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மலையகத்தைச் சேர்ந்த விநோத்குமார் (வயது 20) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 15 நாட்களுக்கு மேலாக ஆலய வளாகத்தில் விற்பனைப் பிரதிநிதியாகச் செயற்பட்டு வரும் இந்த இளைஞன் நேற்றுக் காலை உணவு உட்கொண்ட சிறிது நேரத்தில் இரத்த வாந்தி எடுத்துள்ளார். நல்லூரிலுள்ள சுகாதாரப் பணிமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டதையடுத்து உடனடியாகவே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்க சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் மரதன் ஓட்டப் போட்டிகளில் பங்குபற்றிய காலத்தில் இவ்வாறு இரத்தவாந்தி எடுத்ததாகவும், வைத்திய ஆலோசனையின் பின்னர் சிறிது காலம் இல்லாமல் இருந்த இரத்த வாந்தி தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் விநோத்குமார் குறிப்பிட்டார்.

## மஞ்சள்கடவை இல்லை வீதியைக் கடப்பதில் சிரமம்

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு முன்பாக ஏ-9 வீதியில் மஞ்சள் கடவை போடப்படாததால் வீதியைகடப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏ.9வீதி வாகனங்கள் செல்வதற்கு வருவதற்கும் ஏதுவாக அகலிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பிட்ட இடங்களுக்கு மஞ்சள் கோட்டுக்கடவை போடப்படாததால் பாதசாரிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

வாகனங்கள்வருவதை பார்த்துவிட்டு சடுதியாக வீதி கடக்கும்போது விபத்துக்கள் ஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இதுதொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனம் செலுத்தவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# வாழ்வகத்தில் “ஓடியோ” நூல் நிலையம்



**சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்தில் இலண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ள யாழ் விசுஷன் அமைப்பினரால் நிர்மாணிக்கப்பட்ட ஓடியோ நூல்நிலையம் அண்மையில் யாழ்ப்பாணம் சின்மயா மிசுஷனைச் சேர்ந்த யாக்ரத சைதன்ய சுவாமிகளால் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ் விசுஷன் அமைப்பின் தலைவர் திரு. சுசீந்திரன், அவ்வமைப்பினைச்சேர்ந்த திருமதி. அருணா சுசீந்திரன் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், இலங்கை பிரான்ஸ் நட்புறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஜேறாட் ஆகியோருடன் வாழ்வக நிர்வாக அங்கத்தவர்கள், பிள்ளைகள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட முதலாவது ஓடியோ நூல்நிலையம் இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**



# பெற்றோருக்கான விழிப்புணர்வுக் குறிப்பு

ஜே.பி.ஏ.றஞ்யித்குமார்

சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் (வட-கிழக்கு)

LEADS

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யாழ் செயலகத்துடன் இணைந்து LEADS நிறுவனம் நடாத்தவிருக்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கண்காட்சி நல்லூர் ஆலய முன்றலில் இம்மாதம 15ம் 16ம் 17ம் திகதிகளில் நடைபெறவுள்ளதையொட்டி இக்கட்டுரைத்தொடர் இடம் பெறுகின்றது

**நீண்ட கால நடத்தையிலான பாதிப்புக்கள்**

*01. பாலியல் வழி பிறழ்தலும், விபச்சாரமும்*

பாலியல் ரீதியாக துஷ்பிரயோகிக்கப்பட்ட சிலர் திரும்பவும் மற்றய சக வயதுள்ளவர்களோடு அல்லது வயதில் குறைந்தவர்களோடு பாலியல் திருப்தியைப் பெற்றுக் கொள்வதறகாக பாலியல் செயல்களில் ஈடுபடுவார்கள். இவ்வாறான சிறுவர்கள் பிற்காலத்தில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோராக (homosexuals) வாழ இடமுண்டு.

நடந்த பாலியல் துஷ்பிரயோகம் காரணமாக சிலர் அதிலிருந்து பாலியல் திருப்தியைப் பெற்றுக் கொண்டதால், தங்கள் சரீரம் வர்த்தக ரீதியில் மதிப்புள்ளது எனறு கருதி, சில சிறுவர்கள் இலகுவில் பணத்தை உழைப்பதற்கு விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

*02. மனச் சோர்வும், தற்கொலையும்*

மேலே குறிப்பிட்ட இந்த பல பாதிப்புக்களின் காரணமாக அவன்/ அவள மனச் சோர்வுக்குள்ளாகலாம். இது சிறுவரின் சாதாரண நடத்தையில் மாற்றத்தை எற்படுத்தலாம். உதாரணமாக இரவில் நித்திரை கொள்வ தில்லை அல்லது அளவுக்கதிகமாக நித்திரை கொள்ளுதல், ஒதுங்குதல், துக்கம் அல்லது மனஎழுச்சி, பசியின்மை, போன்றன.

*03. அடிமையாகுதல*

தப்பிப்பிழைத்தோர் எதிர் மாறான உணர்வுகள் காரணமாகவும், குறைந்த தன் மதிப்புக் காரணமாகவும் அவர்கள் உண்மை நிலையிலிருந்து தப்புவதற்கு போதைவஸ்து, மதுபானம், சிகரட் போன்றவற்றிற்கு அடிமையாகின்றனர். தொலைக்காட்சி பாாத்தல், புத்தகங்கள் வாசித்தல், சங்கீதங்கள கேட்டல் போன்றவற்றுக்கும் சிறுபருவத்தில் அடிமையாகலாம். இது முதிர் வயதில் கூடியளவில் காணப்படும்.

*04. குறுகிய எதிர் காலம்*

துஷ்பிரயோகத்திலிருந்து மீணடவரின் சிறு பராயத்தில் ஏற்படும் நம்பிக்கையற்ற நிலை, நிராகரிக்கப்பட்ட உணர்வு, மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருத்தல் ஆகியன காரணமாக அவன்/ அவள் தங்கள் எதிர் காலம் இருண்டதாகவும், குறுகியதாகவும் காண்கின்றனர்.

*05. துஷ்பிரயோகியாக மாறுதல்*

துஷ்பிரயோகத்திலிருந்து மீண்ட ஒருவர்/ ஒருத்தி பாலியல் திருப்தியைப் பெற வேண்டுமெனின், சிறுவனை/ சிறுமியை பாலுறவில் ஈடுபடுத்த வேண்டுமென்பதை, தனது சொந்த அனுபவத்தினூடாக அறிந்து, தீர்மானிக்கின்றனர். ஆகையால துஷ்பிரயோகத்திலிருந்து மீண்டவர் துஷ்பிரயோகியாக மாறுவதற்கு சந்தாப்பமுண்டு.

**விஷேடமாக ஞாபகத்தி வைத்திருக்கல்வேண்டியவை**

01.பாலியல் சம்பவங்கள் தொர்பில் பீள்ளைகள் கட்டுகதை இயற்றமாட்டார்கள் (கட்டுகதைகளை இயற்றுமளவுக்கு பாலியல் தொர்பான அறிவற்றவர்கள்.)

02.பாலியல்துஷ்பிரயோகத்தில் ஆண் / பெண் பிள்ளைகளுக்கு உளரீதியான பாதிப்புக்கள் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

03.இச்சம்பவங்கள் நீண்ட காலத்துக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துவதால் இதனை இல்லாதொழிப்பது சாலச்சிறந்ததென்லாம்.

பிள்ளைகளின் நடத்தையில் பாலியல் தொடர்பான காரியங்கள் வெளிககாட்டுவார்களானால் அல்லது அவர்கள் நேரடியாக கூறுமிடத்து இதுதொர்பில் உடனடியாக செயற்பட வேன்டும்.

**செயற்படுவதற்கான சில ஆலோசனைகள் (பெற்றோருக்கு)**

➢ பிள்ளைக்கு பாலியல் துஷ்பிரயோகம் நடப்பதற்கான அபாயம் இருக்குமாயின் (சிறுவர் வாழ்கின்ற சூழல் வீடு பாடசாலை, மற்றும் வேறு காரணங்களினால்.) நீங்கள்

01. சிறுவர் தொடர்பில் கூடிய அவதானத்தோடு செயற்பட வேண்டும்
02. சிறுவரைத் தொடர்ந்து கண்காணித்தல்
03. சிறுவருக்கு பாலியல் துஷ்பிரயோகத்தில் இருந்து தன்னை பாதுகாப்பதற்கான அறிவை பெற்றுக்கொடுத்தல்
04. சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமானவர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்

➢ சிறுவர்க்கு துஷ்பிரயோகம் நடைபெற்றிருப்பதாக நீங்கள் சந்தேகிப்பின்-

01.அச் சிறுவர் தொடர்பாக கூடிய அவதானத்தை செலுத்த வேண்டும்.
02.சிறுவருடன் கதைத்தல் வேண்டும்.
03.சிறுவருக்கு தேவையான உளவளத்துணையை ஏற்படுத்தல்.

➢ சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இரையாக்கப்பட்டமை உறுதியாகத் தெரிந்திருப்பின்


01. சிறுவர் துஷ்பிரயோகத்தின் போது அணிந்திருந்த ஆடையை எடுத்துக்கொண்டு உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அல்லது காவல் நிலையத்துக்கு அழைத்து செல்லவும்.
02. அச்சிறுவருக்கான பாதுகாப்பை அதிகரிக்கவும்.
03. சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் பொருத்தமானவர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள் (24 மணிநேரமும் அழைக்கக் கூடிய சிறுவர் பாதுகாப்புக்கான அரச இலவசத்தொலைபேசி இலக்கம்1929)
04. பிரதேச செயலகங்களிலுள்ள சிறுவர் பாதுகாப்பு மேம்பாட்டு உத்தியோகத்தரை அல்ல துநன்னடத்தை உத்தியோகத்தரிடம் ஆலோசனை பெறுங்கள்
05. லீட்ஸ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பிற்கான 24 மணி நேர உதவிக்கு அழையுங்கள் 0750121212

(முற்றும்)

# 17 ஆவது ஆண்டு ஆதவன் முன்பள்ளி கலைவிழா







படங்கள் :- ஜெ.கலையகன்

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி மழலைகளின் 17 ஆவது ஆண்டு கலைவிழா கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை முன்பள்ளியின் நிர்வாகியும் பிரபல ஆசிரியருமான சி.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மழலைகளின் காவடியாட்டத்தினையும், ஆண் மழலைகள் பெண்களாக வேடம் தரித்து கலைநிகழ்வை அரங்கேற்றி பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தினை ஏற்பதையும், வருங்கால புத்திஜீவிகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் விருந்தினர்களுடன் காட்சியளிப்பதையும் காணலாம்.

## வதிரி தோற்பொருள் உற்பத்திக்கு

# முழுமையான பங்களிப்பு வழங்கப்படும்

(வதிரி)

வதிரி காலணி மற்றும் தோற்பொருள் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்காக முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதிமொழி வழங்கினர்.

வடமராட்சி வதிரிப் பகுதியில் அமைந்துள்ள காலணி மற்றும் தோற்பொருள் உற்பத்தி அபிவிருத்தி நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் நிர்வாக உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களது கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்த நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினூடாக 5 இலட்சம் ரூபாவையும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியினூடாக 5 இலட்சம் ரூபாவையும் வழங்கவுள்ளதாகவும் இத் தொழிற்துறை சார்ந்தவர்களுக்கு வங்கிகளினூடாக கடன் திட்டங்களை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் உறுதி மொழி வழங்கியதுடன் ஏனைய தேவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.


இதேவேளை வதிரிப் பகுதியில் புதிதாக உள்ளக விளையாட்டரங்கொன்றை அமைப்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர்



உள்ளூர் மற்றும் புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதியுதவியுடன் தொடக்க வேலைகளை ஆரம்பிக்குமாறும் மேலதிக உதவிகளுக்கான ஒத்துழைப்பையும், ஒத்தாசையையும் தமது கட்சி வழங்கும் எனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் வதிரியில் அமைந்துள்ள காலணி மற்றும் தோற்பொருள் உற்பத்தி அபிவிருத்தி நிலையம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் உடனிருந்தார்.




## பரவலாக்கினால் நன்மை

அன்பான தினமுரசு பிரதம ஆசிரியர் அவர்களுக்கு,

காலத்துக்கு காலம் தினமுரசு பத்திரிகை பல செய்திகளைத் தாங்கி வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சிறிய செய்திகளிலிருந்து பெரிய கட்டுரைகள், என ஏராளமான செய்திகளை தினமுரசு சுமந்து வருகிறது. குடா நாட்டின்மேல் இலங்கையையும், உலகையும் சுமந்து உலகமயமாக்கலுக்கு வழிவகுத்து வருகிறது.

இலங்கை மற்றும் உலக அரசியல் தகவல்கள், விஞ்ஞான மற்றும் நவீன இணையத்தளச் செய்திகள், மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள்களும் விடைகளும், பொது அறிவு மற்றும் நுண்ணறிவு வினாக்கள், ஆலய மற்றும் ஆன்மிகச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள், அரச மற்றும்நிறுவன பொதுத்தகவல்கள், தரமான சினிமா செய்திகள், வேலைவாய்ப்புச் செய்திகள், வாழ்க வளமுடன் எனும் இலவச பிறந்தநாள் வாழ்த்துக்கள் என்று நீள்கிறது இப்பத்திரிகையின் தகவல் களஞ்சியம்.

எனினும் பல நூலகங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், வெளிமாவட்டங்கள், போன்றவற்றில் இப்பத்திரிகை மிகக்குறைவாகவே கையாளப்படுகிறது. எனவே இதனை பரவலாக்கினால் பலர் நன்மையடைவர். ஆகவே தினமுரசு தமிழ் நெஞ்சங்களில் என்றும் ஒலிக்கவும் அது உலகெங்கும் பரவவும் எனது வாழ்த்துக்கள்

வாழ்த்தும்
செ.இன்பக்குமார் குருஸ்
ஆசிரியர்
யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

## மண்டைதீவு சந்திகளில் ஒளிவீசும் சூரியகல விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு எட்டு முக்கிய சந்திகளில் வேலணை பிரதேச சபையினால் சூரிய மின்கல வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வேலணைப்பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசாவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கடந்த சனிக்கிழமை இந்த வீதி விளக்குகள் தெரிவு செய்யப்பட்ட முக்கிய சந்திகளில் பொருத்தப் பட்டு செயற்பட்டு வருகின்றன.

வேலணைப் பிரதேச சபையினால் குறித்து வைக்கப்பட்டிருந்த மாகாண அபிவிருத்தி நிதியிலிருந்தே இந்த சூரிய மின்கல விளக்குகள் கிடைத்திருந்ததாகவும் அவற்றில் எட்டு மண்டைதீவுக்கும், ஒன்று அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள வேலணைப்பிரதேச சபையின் உப அலுவலகத்திற்கும் பொருத்தப்பட்டுள்ளதாகவும் சி.சிவராசா தெரிவித்துள்ளார்.

மண்டைதீவுப்பகுதிக்கு இதுவரை இலங்கை மின்சார சபையின் மின்சாரம் கிடைக்கவில்லை. அதனால் அப்பகுதி மக்களின் நிலையைக் கருத்தில் கொண்டு இரவு நேர விதிவிளக்குகள் பொருத்தப்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இருந்தும் இந்த வீதி விளக்குகளின் தேவை மேலும் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# நெற்கொழு வீதிப்புனரமைப்பு விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட கெருடாவில் வடக்கு நெற்கொழு வைரவர் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள வீதியானது புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் 13 இலட்சத்து 72 ஆயிரத்து ஐநூறு ரூபா செலவில் புதிதாக செப்பனிடப்பட்டு வருகிறது.

செப்பனிடப்படும் வீதியினை வல்வெட்டித்துறை பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும், நகரசபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய பொன்.தெய்வேந்திரம் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளும் கூட்டமைப்பின் உபதலைவர் எஸ்.சதீஸ், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரி.சதா ஆகியோர் சென்று குறை களை ஆராய்ந்து நிவர்த்தி செய்துள்ளனர். இதன் போது எமது செய்தியாளருக்குக் கருத்து தெரிவித்த பொன்.தெய்வேந்திரன்,

கெருடாவில் வடக்கு நெற்கொழு வைரவர் ஆலயத்திற்குச் செல்லும் வீதியானது பல ஆண்டு காலமாக புனரமைக்கப்படாமையினால் குன்றும் குழியுமாக இருந்தது.

அவ்வீதியால் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் உட்பட ஆலயத்தை சுற்றி விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகள் எனப்பலர் மழை காலத்தில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் வடமாகாண பிரதேசங்களுக்கிடையேயான கிராமிய சிறிய நகரதுரித அபிவிருத்தி முனைப்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்த புறநெகும வேலைத்திட்டத்தில் ஆரம்பித்து செப்பனிடப்பட்டு வருகிறது.

கெருடாவில் நெற்கொழு வைரவர் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள வீதி சுமார் 185 மீற்றர் தூரத்திற்கு 58 ஆயிரத்து 600 ரூபா வல்வெட்டித்துறை நகரசபையின் நிதிமூலமும் 63 ஆயிரத்து 600 ரூபா மக்களின் பங்களிப்புடனும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் புறநெகும திட்டத்தில் 12 இலட்சத்து 50 ஆயிரத்து 500 ரூபா தொகையிலும் செப்பனிடப்பட்டு வருகிறது.

எனவே இவ்வீதி புனரமைப்பு இக்கிராம மக்களுக்கும் விவசாயிகளுக்கும் இவ்வீதியால் பயணிப்பவர்களுக்கும் கிடைத்த வரப்பிரசாதம் என்றார். (116)

விஞ்ஞானம்

# க.பொ.த.(சாதாரணதர)
## மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
# கல்வி முரசு

34 T II

Grade - 10

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc)

1. நெற்தாவரம் orysa sativam எனும் தாவரவியல் பெயரால் அழைக்கப்படுகிறது. இங்கு orysa எனும் பதம் குறிப்பது?
   1) வகுப்பு   2) சாதி   3) வருணம்   4) இனம்

2. பின்வருவனவற்றில் உயர்ந்த முறிவுச்சுட்டி உடையது எது?
   1) கண்ணாடி   2) நீர்   3) பேர்பெக்ஸ்   4) வைரம்

3. பின்வருவனவற்றுள் துணைக்கலச்சோடி
   1) ஈயசேமிப்புக்கலம், உலர்கலம்
   2) நைவ்கலம், டானியல்கலம்
   3) நிக்கல் கட்மியக்கலம், இலக்கிளாஞ்சிக்கலம்
   4) ஈயசேமிப்புக்கலம், நைவ்கலம்


4. மனித உணவுக்கால்வாய் தொகுதியில் காணப்படுவது சமிபாட்டுடன் சம்பந்தப்பட்டாததுமான கூறு?
   1) ஈரல்   2) பித்தப்பை   3) சதையி   4) குருட்டுக்குடல்

5. எண்ணெய்யினால் ஏற்படும் தீயைக்கட்டுப்படுத்துவற்கு மிகவும் பொருத்தமான தீயணைக்கருவி யாது?
   1) சோடா அமில தீயணைப்பான்   2) நுரை தீயணைப்பான்
   3) நீர் தீயணைப்பான்   4) ஹலோன் தீயணைப்பான்


6. 4 m ஆழமான நீரைக்கொண்ட கிணறு ஒன்றின் அடியில் கிடந்த நாயணம் எவ்வாழத்தில் இருப்பது போல் தோற்றமளிக்கும்.
   1) 4 .   2) 3 .   3) 2 m   4) 1.5,

7. குருதியில் பின்வரும் கூறுகள் காணப்படுகின்றன
   a - செங்குருதிச் சிறுதுணிக்கைகள்
   b - வெண்குருதிச் சிறுதுணிக்கைகள்
   c - குருதி சிறுதட்டுக்கள்
   d - குருதி திரவவிழையம்
   பின்வருவனவற்றில் எது குருதியில் பைபிரின் வலையில் உருவாக்கத்துடன் தொடர்புபட்டது.
   1) a,c   2) b,c   3) c,d   4) a,b

8. படத்தில் காட்டிய உபகரணங்கள் முறையே
   1. முகவை, தட்டையடிக்குடுவை, முள்ளிப்புனல்
   2. முள்ளிப்புனல், தட்டையடிக்குடுவை, முகவை
   3. முள்ளிப்புனல், முகவை, தட்டையடிக்குடுவை
   4. தட்டையடிக்குடுவை, முகவை, முள்ளிப்புனல்



9. உருவில் இருவித்திலைத் தாவர இலை ஒன்றின் குறுக்கு வெட்டு காட்டப்பட்டுள்ளது. இதில் வேலி காற் புடைக்கலவிழையத்தை காட்டும் எழுத்து?
   1) A   2) B
   3) C   4) D




10. கைவில்லை எளிய நுணுக்குக்காட்டியாக செயற்படும்போது பொருள் வைக்கப்படவேண்டிய இடம்.
   1) 2F இற்கு அப்பால்   2) 2 F இற்கும் F இற்கும் இடையில்
   3) F இல்   4) F இற்குள்

11. பின்வரும் தாக்கங்களில் ஒன்றை இடப்பெயர்ச்சி தாக்கமாக அமைவது
   1) $4K + O_2 \rightarrow 2K_2O$
   2) $CaCO_3 \rightarrow CaO + CO_2$
   3) $Mg + H_2SO_4 \rightarrow MgSO_4 \quad H_2$
   4) $CuSO_4 + BaCl_2 \quad BaSO_4 + CuCl_2$

12.
கூற்று A - காழ்கலன் மூலமாக நீரானது கீழிருந்து மேல்நோக்கி கொண்டு செல்லப்படும்.
கூற்று B - உரியத்தினூடாக உணவானது இரு திசைகளிலும் கடத்தப்படுகிறது.
மேலுள்ள கூற்றுக்களில்
   1) A மட்டும் சரி   2) B மட்டும் சரி
   3) A,B இரண்டும் சரி   4) A, B இரண்டும் பிழை

13. இரு ஆடிகள் 450 கோண இடைவெளியில் வைக்கப்பட்டுள்ளதாயின் எத்தனை விம்பங்கள் தோன்றும்.
   1) 11   2) 7   3) 5   4) 4


14. விறகடுப்பு சுவாலை மஞ்சள் நிறமாகவும் வாயு அடுப்பு சுவாலை நீல நிறமாகவும் எரிவதற்கான காரணமாக அமைவது
   1) விறகடுப்பில் குறைதகனம் வாயு அடுப்பில் பூரண தகனம்
   2) விறகடுப்பில் காபன் துணிக்கைகள் வெளியேறும் வாயு அடுப்பில் அவ்வாறில்லை.
   3) விறகடுப்பை விட வாயு அடுப்பிற்கு ஒட்சிசன் கிடைக்கும் அளவு கூடுதலாகும்.
   4) இரண்டு சுவாலைகளும் பூரண தகனம் ஆகும்.

15. வானொலிப் பெட்டியில் ஒலியின் உரப்பைக்கட்டுப்படுத்த பயன்படும் உபகரணம்
   1) மாறும் கொள்ளளவி   2) மாறும் தடையி
   3) முற்றுணிந்த கொள்ளளவி   4) ஒளி உணரித்தடை

16. உட்சுவாச வளி செல்லும் பாதையை கீழுள்ள தரவு காட்டுகின்றது.
வாதனாளி → சுவாசப்பைக்குழாய் → புன்வாதனாளி
இங்கு X குறிப்பது
   1) நுரையீரல்   2) சிற்றறை
   3) மயிர்த்துளைக்குழாய்   4) சுவாசப்பை நாளம்


17. பின்வருவனவற்றுள் தொலமைற்றின் இரசாயனச் சூத்திரம் யாது?
   1) $CuSO_3$   2) $CaCO_3MgCO_3$
   3) $CuO.MgO$   4) $CaMgO(SO_4)_2$

18. தரப்பட்ட அலைவட்டத்தில் அலைநீளமும், வீச்சமும் முறையே
   1) 1m 1.5   2) 1.5m, 1m
   3) 2m, 4.5m   4) 4.5m, 2m




19. தாவர இலை வாய்களின் ஊடாக நிகழும் முக்கிய செயற்பாடுகள் எவை?
   1) ஆவியாதல், ஆவியுயிர்ப்பு
   2) வாயுப்பரிமாற்றம், ஒளித்தொகுப்பு
   3) வாயுப்பரிமாற்றம், ஆவியுயிர்ப்பு
   4) வாயுப்பரிமாற்றம், ஆவியாதல்

20. தரப்பட்ட குழிவாடியில் BA படுகதிராகும்.
அது ஆடியில் பட்டு தெறிப்படையுமாயின் தெறிகதிரைக் காட்டுவது
(C - வளைவுமையம்)
   1) AC   2) AD
   3) AE   4) AF




21. சில விலங்குகளில் பின்வரும் பொது இயல்புகள் காணப்படுகின்றன.
   1) உடல் துண்டுபட்டுக் காணப்படவில்லை
   2) பெரும்பாலும் ஓட்டினைக் கொண்டது.
   3). உடல் பாதம் உடலகத்திணிவு மென்மூடி ஆகிய பகுதிகளைக் கொண்டது.
   4) தோலில் சீதச்சுரப்பிகள் காணப்படும்.
மேற்கூறிய இயல்புகளைக் கொண்ட விலங்குக் கூட்டம் எந்தக் கணத்தைச் சேர்ந்தது.
   1) சிலந்தரேற்றா   2) மொலஸ்கா
   3) அனலிடா   4) ஆத்திரப்போடா

22. படத்தில் உள்ள தசை வகை
   1) வன்கூட்டுத் தசை
   2) மழமழப்பான தசை
   3) இச்சையுள் தசை
   4) இதயத்தசை





23. இரும்பு பிரித்தெடுப்பில் தாழ்த்துங் கருவியாகப் பயன்படுவது
   1) mg   2) CO   3) Zn   4) Cu

24. எமது உடலில் இருந்து வெளியேறும் வியர்வை எந்த வித மணத்தையும் கொண்டிருப்பதில்லை. எனினும் சில சந்தர்ப்பங்களில் வியர்வை மணமுடையதாக காணப்படுவதற்கு காரணம்
   1) வியர்வையின் மீது பற்றீரியா தொழிற்படுதல்.
   2) யூரியா அதிகமாக வெளியேறுதல்.
   3) சிறுநீரக நோய் காணப்படுதல்
   4) அதிகமாக எண்ணை காணப்படுதல்

25. ஆவியுயிர்ப்பை குறைப்பதற்கு இழைகளின் மீது மயிர்களைக் கொண்டுள்ள தாவரச் சோடிகள்
   1) அலரி, இராவணன் மீசை   2) சூரிய காந்தி, இராவணன் மீசை
   3) பூசணை, அலரி   4) பூசணி, சூரியகாந்தி

26. 36 g காபனில் அடங்கியுள்ள அணுமூல் எவ்வளவு (C=12)
   1. 1/3   2) 3   3) 1/6   4) 1.5

27. மேற்படி அமைப்பில் மின் முலாமிடுதல் செயற்பாட்டில் அனோட்டாக Cu கோலும் கதோட்டாக இரும்பு அணியும் காணப்படுகின்றது. இச் செயற்பாட்டில் காணக்கூடிய அவதானங்கள் பின்வருமாறு
   a.- இரும்பாணியின் கபில நிறப்படிவு ஏற்பட்டது
   b - கரைசலின் நிறம் மாறுகின்றது
   c - செம்புக்கோல் அரிப்புக்குள்ளாகும்
   மேற்கூறியவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள்
   1) a,b மட்டும்   2) b,c மட்டும்
   3) a,c மட்டும்   4) a,b,c மூன்றும்




28. $2Na + H_2 SO4 \rightarrow X+Y$
X,Y என்பன முறையே
   1) $Na_2 SO_4, H_2$   2) $Na_2O, H_2S$
   3) $Na_2S, H_2O$   4) $NaHSO_4, O_2$


29. ஆவர்த்தன அட்டவணையில் அதிகூடிய அயனாக்க சக்தியைக் கொண்ட மூலகம் எது?
   1) H   2) He   3) Na   4) Ar

30. ஒரு ஐதரசன் அணுவின் திணிவு
   1) 1 g   2) $\frac{1}{6.02x10^{23}}$   3) $6.02 X10^{23}g$   4) 2g

31. பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று
1) ஓர் அணுவின் கருவிலிருந்து வெளிநோக்கிச் செல்லும் போது சக்தி மட்டங்களின் சக்தி அதிகரிக்கின்றது.
2) கருவிலுள்ள புரோத்தன்களும் இலத்திரன்களும் சேர்ந்து நியூக்கிளியோன்கள் என அழைக்கப்படும்.
3) அணுவின் 1 ஆவது, 2 ஆவது, 3 ஆவது சக்தி மட்டங்களில் முறையே ஆகக்கூடியது 2, 8, 8 இலத்திரன்களே நிரம்பக்கூடியன.
4) புரோத்தன்களின் எண்ணிக்கை வேறுபடுவதாலயே சமதானிகள் உருவாகின்றன.

32. காபனின் அணுவின் திணிவு $1.99 \times 10^{23}$ g காபன் அணுவைப்போல் 4 மடங்கு பாரமுடைய A எனும் மூலகத்தின் சாரணுத்திணிவாக அமையக்கூடுவது.
1) $1.99 \times 10^{23} \times 4$ 2) $1.99 \times 10^{23} \times 6.02 \times 10^{23} \times 4$
3) $\frac{1.99 \times 10^{-23} \times 4}{1/2 \times 1.99 \times 10^{-23}}$ 4) $\frac{1.99 \times 10^{-23}}{1/2 \times 1.99 \times 10^{-23}}$


33. P,Q,R,S,T எனும் மூலகங்களில் அணு எண்ணுடன் கொதிநிலை நிலை மாறலை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது. இது தொடர்பாக சில மாணவர்களின் முடிவுகள் பின்வருமாறு:




| | P | Q | R | S | T |
|---|---|---|---|---|---|
| a | கூட்டம் I | கூட்டம் II | கூட்டம் III | கூட்டம் IV | கூட்டம் V |
| b | கூட்டம் II | கூட்டம் III | கூட்டம் IV | கூட்டம் V | கூட்டம் VI |
| c | கூட்டம் VII | சடத்துவவாயு | கூட்டம் I | கூட்டம் II | கூட்டம் III |
| d | கூட்டம் V | கூட்டம் VI | கூட்டம் VII | சடத்துவவாயு | கூட்டம் III |

இவற்றுள் சரியான விடையாக அமையக்கூடியது.
1) a,b 2) a மட்டும் 3) c,d 4) a,d

34. 1000 N நிறையுடைய குற்றி ஒன்று சாய்தளத்தில் படத்தில் காட்டியவாறு வைக்கப்பட்டுள்ளது. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
A. சாய்தள மீது குற்றியில் ஏற்படுத்தப்படும் அமுக்கம் $\frac{1000}{16}$ $Nm^{-2}$
B. சாய்தளத்தில் அடியில் குற்றியினால் ஏற்படுத்தப்படும் அமுக்கம் $\frac{1000}{16}$ $Nm^{-2}$





C. அமுக்கம் ஓர் காவிக்கணியமாகும் இவற்றுள் சரியானது / சரியானவை?
1) A மட்டும் 2) B மட்டும்
3) Aயும் B யும் 4) B யும் C யும்

35. பந்து ஒன்று நிலைக்குத்தாக மேல் நோக்கி எறியப்படுகிறது. அதி உச்ச உயரத்தில்
A. பந்தின் வேகம் பூச்சியம்
B. பந்தின் ஆர்முடுகல் பூச்சியம்
C. பந்தில் தொழிற்படும் விசை பூச்சியம்
இவற்றுள் சரியானது / சரியானவை

1) A மாத்திரம் 2) B மாத்திரம்
3) A யும் C யும் 4) A,B,C எல்லாம்

36.






சமதடைகள் இணைக்கப்பட்ட முறை மேலே காட்டப்பட்டுள்ளது. இவற்றுள்
A) சுற்று a உயர் தடையைக் கொண்டுள்ளது.
B) சுற்று c இழிவுத் தடையைக் கொண்டுள்ளது
C) சுற்று b ன் தடை 3/2 R இவற்றுள் சரியானவை

1) A மாத்திரம் 2) B மாத்திரம்
3) A யும் C யும் 4) A,B,C எல்லாம்

37. படத்தில் உள்ளவாறு இரு வெவ்வேறு திணிவுடைய இரு கோளங்களுக்கு (வேறுபட்ட பருமன்) ஒத்த ஏற்றம் வழங்கப்பட்டபோது அவை ஒன்றிலிருந்து ஒன்று விலகி நின்றன. மேலுள்ள சந்தர்ப்பத்தில் எக்கணியம் இரண்டு கோளங்களிலும் சமனாக காணப்பட்டது.

நிறை
2. ஆரம்ப அமைவிலிருந்து விலகிய தூரம்
3. இழைகளின் இழுவை
4. கோளங்களின் மீது தாக்கும் தள்ளுகை





38. சர்வ சமனாக 3 கலங்கள் இணைக்கப்பட்டுள்ளன நிலையினைக் படம் காட்டுகின்றது.
a) சுற்று 1 இல் ab ற்கு இடையில் அழுத்த வித்தியாசம் உயர்வாக இருக்கும்
b) சுற்று 2 இல் cd ற்கு இடையில் அழுத்த வித்தியாசம் உயர்வாக இருக்கும்.
c) சுற்று 2 இல் cd ற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடு ஒவ்வொரு கலங்களுக்கும் குறுக்கேயான அழுத்த வேறுபாடும் சமனான இருக்கும். இவற்றுள் சரியானது / சரியானவை

1) A மட்டும் 2) B மட்டும்
3) A யும் C யும் 4) B யும் C யும்

39. கம்பிச் சுருள் ab, cd படத்தில் காட்டிய நிலையில் வைக்கப்பட்டு மின் செலுத்தப்படுகிறது.
A) ab இல் வெளிநோக்கிய திசையிலும் cd இல் உள்நோக்கிய திசையிலும் விசை தொழிற்படும்.
B) ab இல் உள்நோக்கிய திசையிலும் cd இல் வெளிநோக்கிய திசையிலும் விசை தொழிற்படும்.





C) bc படத்தில் காட்டிய நிலையில் இருக்கும போது அதில் தொழிற்படும் விசை பூச்சியம் இவற்றுள்.
1) A மட்டும் 2) B மட்டும்
3) A யும் C யும் 4) B யும் C யும்

40. கண்ணாடி இரச வெப்பமானி ஒன்றின் உணர் திறனைக் காட்டுவதற்கு
1) குமிழின் கனவளவைக் குறைக்க வேண்டும்
2) தண்டின் நீளத்தைக் கூட்ட வேண்டும்
3) தண்டின் குறுக்கு வெட்டுப்பரப்பைக் குறைக்க வேண்டும்
4) குமிழ் கோளவடிவமாக இருக்க வேண்டும்.

## பகுதி II

1) அங்கிகளை அவற்றின் அவதானிக்கக்கூடிய இயல்புகளின் அடிப்படையில் கூட்டங்களாக வகைப்படுத்தப்படும் முறை பாகுபாடு எனப்படும்.




சூழலில் உள்ள விலங்குகளை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்க முடியும். அவற்றுள் ஒரு பிரிவில் அடங்கும் அங்கிகள் மேலே தரப்பட்டுள்ளது.

1) இவ் விலங்கு பிரிவு யாது? ..............................

2) இப்பிரிவில் அடங்கும் விலங்குகள் கொண்டுள்ள சிறப்பியல்புகள் இரண்டு தருக?

3) மேலே காட்டப்பட்டுள்ள அங்கிகள் பொதுவாக எக்கூட்டத்தில் அடங்கும் என்பதை தருக?

A :ஆத்திரப்போடா..............................
B :..............................
C :..............................
D :..............................
E :..............................
F :..............................

4) மேலே உள்ள அங்கிகளில் ஆரைச் சமச்சீர் கொண்ட அங்கி எவ்வெழுத்தால் காட்டப்பட்டுள்ளது.
:..............................

5) கடல் நீரில் மாத்திரம் வாழும் அங்கிகள் எவ்வெழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது?
:..............................

6) மேலுள்ள அங்கிகள் ஒவ்வொன்றினதும் தனியான சிறப்பியல்புகள் ஒவ்வொன்று தருக?
:..............................

(தொடரும்...)

# இலங்கையில் சமத்துவம் நிலவ பணி செய்யும் பொறுப்பு இந்தியாவிற்கு



இலங்கையில் அமைதியும், சமத்துவமும் நிலவுவதற்கான பணிகளை செய்யும் பொறுப்பு இந்தியாவிற்கு உண்டு என சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் கருணாநிதி பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் பல்வேறு தேசிய இனங்கள், மதங்கள், மொழிகளை உள்ளடக்கி ஜனநாயக மரபுகளை பாதுகாத்து வரும் இந்திய அரசு, அண்டை நாடான இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளை கண்டும் காணாமல் இருப்பது ஏனென்ற கேள்வி தமிழர்கள் மனதில் எழுந்துள்ளது என்பதை இம்மாநாடு இந்திய அரசுக்கு சுட்டிக்காட்டுகிறது. ஈழத்தமிழ் மக்கள் அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு உரிமைகளை பெற்றெடுத்து சமத்துவம், அமைதியும் நிறைந்த வாழ்வை மேற்கொள்ள இந்திய அரசு முழுமூச்சோடு செயல்பட வேண்டும்.


மேலும் இலங்கையில் உள்ள தமிழர்கள், தாங்கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங்களே முடிவு செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு முழு உரிமை வழங்க இந்திய அரசு, ஐ.நா. மன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது. இதைவிட இந்திய அரசுக்கு வேறு என்ன அழுத்தத்தை கொடுக்க முடியும்? என்று கேள்வி எழு ப்பி உள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சனைக்கு ஈழ நாடு தான் தீர்வு என்பதற்கு முன்னதாக, காயம்பட்ட தமிழருக்கு முதலுதவி போட வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

# முதல்வராக இருந்தபோது டெசோ மாநாட்டை நடத்தாதது ஏன்

கருணாநிதி முதல்வராக இருந்தபோது டெசோ மாநாட்டை நட்த்தாதது ஏன்? என்று தமிழக அமைச்சர் செல்லூர் ராஜு கேள்வி எழுப்பியுள்ளார். உலக தமிழர்களின் ஒட்டுமொத்த எதிரியான கருணாநிதி, தற்போது டெசோ மாநாடு எனக்கூறி நாடகம் ஆடுகிறார். அவர் முதல்வராக இருந்தபோது இதுபோன்ற டெ-சோ மாநாட்டை நடத்தாதது ஏன்? இலங்கை தமிழர்களுக்காக போராட்டங்கள் நடத்த முன்வராதது ஏன்? ஆட்சி அதிகாரத்தை அன்றைக்கு தக்கவைத்து கொள்ள சோனியாவிடம் பணிந்து போனவர்தான் இந்த கருணாநிதி.

கருணாநிதி நடத்தும் மாநாட்டால் இலங்கை தமிழர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்க போவதில்லை. அ.தி.மு.க. மட்டுமே இலங்கை தமிழர்களுக்காக போராடி வருகிறது. தற்போது சட்டசபையிலும் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கொலை குற்றவாளியான ராஜபக்சே இந்தியாவுக்குள் நுழையக்கூடாது என முதல்வர் அம்மா உரிமை குரல் கொடுத்து வருகிறார். அவர் உலக தமிழர்களின் தாயாக விளங்கி வருகிறார். இத்தனை சிறப்புடைய முதல்-அமைச்சர் அம்மாவுக்கு வருகிற பாராளுமன்ற தேர்தலில் பொதுமக்கள் உற்ற துணையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.




# இலங்கைத் தமிழர் விடயத்தில் நிலையான முடிவை எடுக்க வேண்டும்



இலங்கை தமிழர்களின் உரிமையை பாதுகாப்பதில் மத்திய அரசு நிலையான முடிவை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் பிருந்தா கரத் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் 6வது மாநில மாநாடு தர்மபுரியில் 11ஆம் திகதி ஆரம்பித்தது. இதில் கலந்து கொண்ட பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தாவது, இலங்கை தமிழர் பிரச்னையில் அரசியல் தீர்வு காண்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. இலங்கை தமிழர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எத்தகைய பிரச்னை ஏற்படுகிறது என விரிவாக ஆய்வு நடத்தி, அடக்குமுறையில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை தமிழர்களின் உரிமையை பாதுகாப்பதில் மத்திய அரசு நிலையான முடிவை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# நாக்கை கடித்து பேசியது எதற்காக?



எதிர்கட்சித்தலைவர் விஜயகாந்த், சட்டப் பேரவையில் நாக்கை கடித்து பேசியது குறித்து விளக்கமளித்துள்ளார். கடந்த சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. - தே.மு.தி.க கூட்டணி வைத்தது தமிழக அரசியலில் புதிய மாற்றம் வருமென பொதுமக்கள் நினைத்திருந்தனர். இந்த கூட்டணி சில மாதங்களுக்கு முன்பு, வெடித்துச் சிதறியது. சட்டப்பேரவை விவாதத்தின் போது அ.தி.மு.க உறுப்பனர் ஒருவரை விஜயகாந்த் நாக்கை கடித்து ஒரு மாதிரியாக பேச முதல்வர் ஜெயலலிதா இனி தே.மு.தி.க.விற்கு இறங்குமுகம்தான் என கடுமையாக சாடினார்.

இந்த கோபத்திற்கு என்ன காரணமென எதிர்கட்சி தலைவர் விஜயகாந்த் பதிலளித்துள்ளார். தஞ்சாவூரில் நடந்த விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கும் விழாவில் பேசிய விஜயகாந்த், தனது கட்சியைப் பற்றி தவறாக. பேசிய காரணத் தினாலேயே கோபப்பட்டேன் என தெரிவித்திருக் கிறார். மேலும் விவசாயிகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கவேண்டுமெனவும் தமிழ்நாட்டில் நிலவும் தண்ணீர் பிரச்சினைக்கு முதல்வர் ஜெயலலிதாவே காரணம் என்றும் குற்றம்சாட்டியுள்ளார். தமிழகத்தில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த விஜயகாந்த், அதற்கான முறையான நடவடிக்கைகளை எடுக்க தி.மு.க. அமைச்சர் மு.க. அழகிரி பயப்படுகிறார் எனவும் விஜயகாந்த் பேசினார்.

# கிரானைட் முறைகேடு பொலிஸார் அதிரடி சோதனை

(மதுரை)

பல ஆயிரம் கோடியை விழுங்கி நிற்கும் கிரானைட் (பளிங்குக்கற்கள்) முறைகேடு புகார் தொடர்பாக மதுரையில் கிரானைட் உரிமையாளர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில் மதுரை மாவட்ட பொலிஸார் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.



மதுரை மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள கல் அகழும் இடங்களில் ஒப்புதல் வழங்கப்பட்ட அளவைவிட அதிகம் கிராடைன் வெட்டி எடுத்து கள்ளக்கணக்கு காட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தனர். இது தொடர்பாக எழுந்த புகாரின் படி தமிழகம் முழுவதும் உள்ள கல் அகழும் இடங்களில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக மாவட்ட ஆட்சியர் தலைமயில் சோதனை நடந்தது.

மேலூர் பி.ஆர்.பி. கிரானைட்ஸ் அலுவலகம் சீல் வைக்கப்பட்டது. இந்நிலையில் மேலூர் மற்றும் மதுரை நகர் பகுதிகளில் உள்ள கிரானைட் உரிமையாளர்கள் வீட்டில் அதிரடி சோதனை நடந்து வருகிறது. 40 குழுக்களாக பிரிந்து பொலிஸார் உரிமையாளர்கள், உறவினர்கள், முக்கிய பொறுப்பில் உள்ள வேலையாட்கள் வீடுகள் இந்த சோதனைக்குள்ளாகின. ஒலிம்பஸ் கிரானைட் மத்திய அமைச்சர் அழகிரி மகன் துரைதயாநிதிக்கு சொந்தமானது. இவரது பார்ட்டனர் நாகராஜன் வீட்டிலும் இன்று சோதனை நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியப் பிரஜையைளுக்கு வங்கிக்கணக்கு கட்டாயம்

(புதுடில்லி)

மத்திய திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மானியம், பயனாளிகளை நேரடியாகச் சென்றடைவதை உறுதி செய்ய, ஒரு குடும்பத்திற்கு, ஒரு வங்கிக் கணக்கு இருப்பதை, பொதுத்துறை வங்கிகள் உறுதி செய்ய வேண்டும் என, மத்திய நிதி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய நிதி அமைச்சகத்தின், நிதி சேவைகள் துறை, பொதுத்துறை வங்கிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளதாவது, ஒவ்வொரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், ஏதாவது ஒரு வங்கியில், சேமிப்புக் கணக்கு இருக்க வேண்டும். அந்த வங்கிக் கணக்குக்கு, இணைய தள வசதியுடன் கூடிய, பணப்பரிமாற்ற வசதியும் இருக்க வேண்டும். எந்தெந்த வீட்டில் வசிப்பவர்களுக்கு வங்கிக் கணக்கு இல்லையோ, அவர்களை வங்கிக் கணக்கு ஆரம்பிக்க செய்ய வேண்டும் அதற்குச் சமீபத்திய, வாக்காளர் பட்டியலை, வங்கிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எத்தனை வீட்டில் உள்ளவர்கள், வங்கிக் கணக்கு ஆரமபித்துள்ளனர். சேமிப்பு கணக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு என்ற விவரத்தை, மாநில அளவில் எடுத்து, ஒவ்வொரு மாதமும் 5ம் திகதி, மத்திய நிதி அமைச்சகத்திடம், வங்கிகள் சமர்ப்பிக்க வேண்டும். கடந்த, 2011ஆம் ஆண்டு, மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, நாட்டில் மொத்தம் உள்ள வீடுகளில், 58.7 சதவீத வீடுகளில் வசிப்பவர்கள், வங்கிக் கணக்குகளை கொண்டிருந்தனர். அதாவது, 24.69 கோடி வீடுகளில், 14.48 வீடுகளைச் சேர்ந்தவர்கள், வங்கி சேவை வசதிகளைப் பெற்றிருந்தனர். இன்னும், 10 கோடி வீடுகளில் வசிப்போர், வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவில்லை என, தெரியவந்துள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# செல்போன் பேசினால் சுட்டுக் கொல்வோம்



(ஸ்ரீநகர்)

பொது இடங்களில் செல்போன் பேசினால் சுட்டுக் கொல்வோம் என்று காஷ்மீர் பெண்களை தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர். காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் தீவிரவாதிகள் ஆதிக்கம் உள்ள சோபியான் மாவட்டத்தில் பல இடங்களில் திடீரென காணப்படும் போஸ்டர்கள் மக்களிடம் பீதியை ஏற்படுத்தி உள்ளன. கையால் எழுதப்பட்டுள்ள அந்த போஸ்டர்களில் பொது இடங்களில் பெண்கள் செல்போனில் பேசக் கூடாது என்றும் அவ்வாறு பேசினால் அவர்களை சுட்டுக் கொல்வோம் என்றும். வாசகங்கள் உள்ளன.

மேலும், பெண்கள் முகத்தை மறைக்கும்படி பர்தா அணியாமல் வெளியில் வரக்கூடாது தெற்கு காஷ்மீரில் உள்ள பஞ்சாயத்து தலைவர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் ஒட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 82 இற்கும் 40 இற்கும் அமெரிக்காவில் கலியாணம்



82 வயதாகும் அமெரிக்க கோடீஸ்வரர் ஜார்ஜ் சோரோஸ் (வயது 82), தாமிகோ போல்டான்(வயது 40) இவருக்கும், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பழக்கம் ஏற்பட்டு காதலாக மலர்ந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் நியூயோர்க் நகருக்கு அருகேயுள்ள பங்களாவில் பிறந்த நாள் கொண்டாடிய ஜார்ஜ் சோரோஸ், தனது காதலி தாமிகோ போல்டனுடன் திருமணம் நிச்சயம் செய்து கொண்டார். உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் இருவரும் மோதிரம் மாற்றி கொண்டனர்.

இது கோடீஸ்வரருக்கு 3-வது திருமணம் ஆகும். ஏற்கனவே அவருக்கு 5 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர் ரூ.11/4 இலட்சம் கோடி சொத்துகளுக்கு அதிபதியாவார். அதுபோலவே தாமிகோவுக்கு 2-வது திருமணம் ஆகும். தற்போது இவர் இணையத்தளம் மூலம் யோகா பயிற்சி நடத்தும் தொழில் செய்து வருகிறார்.




பிலிப்பீன்ஸின், அப்பலிட் நகரில் எடுக்கப்பட்ட போட்டோ இது. கடும் மழையால் ஊரெங்கும் வெள்ளம். வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை. இவ் வளவுக்கும் மத்தியில், இடம் பெயர வேண்டிய குழந்தைகள். ட்ரக்கில் ஏற்றப்பட்ட குழந்தைகளின் முகங்களை பார்த்தால், தாம் விளையாடிய இடங்களை ஏக்கத்துடன் பார்ப்பது போல இல்லையா?

# இராணுவத்திற்கு பல்லுப்பிடுங்கும் எகிப்தின் புதிய ஜனாதிபதி



இரு மாதங்களுக்கு முன் பதவிக்கு வந்த எகிப்து ஜனாதிபதி, தமது அதிரடி நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார். நாட்டின் இராணுவத் தளபதி பதவியில் இருந்து அகற்றப்படுவதாக நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறார். சில தினங்களுக்கு முன், நாட்டின் உளவுத்துறையின் தலைவரும் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இதுவரை இராணுவத்தின் கை ஓங்கியிருந்த எகிப்தில், இராணுவத்தின் அதிகாரங்களை குறைக்கும் மற்றொரு உத்தரவையும் பிறப்பித்துள்ளார் ஜனாதிபதி மொஹமெட் மோர்ஸி. ஆயுதப் படைகளின் உயர் கவுன்சிலுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை நீக்கும் உத்தரவும், ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மொஹமெட் மோர்ஸி பதவிக்கு வருமுன், எகிப்தின் அரசியல் அமைப்பு சட்டம் மாற்றப்பட்டு, ஆயுதப் படைகளின் உயர் கவுன்சிலுக்கு (Supreme Council of the Armed Forces), பல விடயங்களில் ஜனாதிபதியை விட அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த சட்டத்தை இப்போது இரத்து செய்துள்ளார் ஜனாதிபதி.

இராணுவத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை, அவர்கள் அனைத்து விடயங்களிலும், தன்னிச்சையாக செயற்பட அதிகாரத்தை கொடுத்திருந்தது. அதை எப்படி மாற்றலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த ஜனாதிபதிக்கு வசதியான சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தது, பொலிஸ் நிலையம் ஒன்றின்மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்று.

கடந்த திங்கட்கிழமை (6-ம் திகதி) சினாய் நகரின் வடபகுதியில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் ஒன்று 'அடையாளம் தெரியாதவர்களால்' தாக்கப்பட்டது. அதில் 16 பொலிஸார் கொல்லப்பட்டனர். அதையடுத்து, பாதுகாப்பு படையினருக்கும், போராளிகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இந்த விவகாரம் தொடர்பான தகவல்களை உளவுத்துறை முன்கூட்டியே தமக்கு தெரிவிக்கவில்லை என்று குற்றம் சுமத்தி, உளவுத்துறையின் தலைவரை திடீரென பதவி நீக்கம் செய்தார் ஜனாதிபதி. இப்போது, அடுத்த கட்டமாக, நாட்டின் பிரதான இராணுவத் தளபதி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# சவுதியில் பெண்களுக்கு தனிநகரம்



சவுதி அரேபியாவில் பெண்களுக்கான தனி நகரம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இஸ்லாமியர்கள் புனித யாத்திரை செல்லும் மெக்கா நகரம், சவுதி அரேபியாவில் தான் உள்ளது. எனவே, இந்த நாடு முஸ்லிம்களின் நடைமுறைகளை தவறாமல் கடை பிடிக்கிறது.

குறிப்பாக, பெண்கள் விஷயத்தில் ஷரியத் சட்டம் கடுமையாக பின்பற்றப் படுகிறது. இதன் காரணமாக, இந்த நாட்டில், பெண்கள் கார் ஓட்டவோ, தேர்தலில் ஓட்டு போடவோ அனுமதியில்லை. ஆண்களுடன் இணைந்து பெண்கள் பணியாற்ற வாய்ப்பில்லாத காரணத்தால், படித்த பெண்கள் கூட வீட்டில் முடங்கிக் கிடக்கின்றனர். எனவே, இளம் பெண்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள சவுதி அரசு, தற்போது பெண்களுக்கான தனி நகரை உருவாக்க முடிவு செய்துள்ளது.

இந்த நகரை உருவாக்கும் பணிகள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப் படவுள்ளது. இந்த புதிய நகரில் பெண்களால் நடத்தப்படும் நிறுவனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். சவுதியில், தற்போது வெளிநாட்டுப் பெண்கள் தான் அதிக அளவில் வேலை செய்கின்றனர். புதிய நகரம் உருவாகும் பட்சத்தில், உள்ளூர் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் அதிக பங்களிப்பு கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# மியான்மர் முஸ்லிம்களுக்கு சவுதி அரேபியா உதவி

மியான்மர் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு, 250 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உதவிகளை வழங்க சவுதி அரேபியா முன்வந்துள்ளது.

மியான்மர் நாட்டில் வங்கதேச எல்லையையொட்டி அமைந்துள்ள ரகின் மாகாணத்தில், கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது. ரகின் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் வங்கதேசத்திலிருந்து குடி பெயர்ந்த, எட்டு லட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.


இவர்கள் மியான்மரில் குடியுரிமை கேட்டு போராடி வருகின்றனர். சட்ட விரோதமாகக் குடிபெயர்ந்தவர்களுக்கு, குடியுரிமை அளிக்க மியான்மர் அரசு மறுத்து விட்டது. இதற்கிடையே கடந்த ஜூன் மாதம் முஸ்லிம்களின் குடிசைகளை தீ வைத்து கொளுத்தி விட்டதாகக் கூறி, பெரிய அளவில் கலவரம் மூண்டது. இதுவரை 50 பேர் பலியாகினர். இதையடுத்து மவுங்தா பகுதியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பு கருதி ஏராளமான முஸ்லிம்கள் தங்கள் தாயகமான வங்கதேசத்துக்குள் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

மியான்மரில் உள்ள முஸ்லிம்கள் அந்நாட்டு இராணுவத்தால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதை இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகள் கண்டித்துள்ளன. இதற்கிடையே இந்த மாநாட்டின் உறுப்பினரான சவுதி அரேபியா கலவரத்தால் பாதிக்கப்பட்ட மியான்மர் முஸ்லிம்களுக்கு, 250 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உதவிகளை அறிவித்துள்ளது. இந்த நிவாரணப் பொருட்களை உடனடியாக மியான்மருக்கு அனுப்ப, சவுதி மன்னர் அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

# ஸ்பெயினில் காட்டுத் தீயால் பாரம்பரிய பிரதேசங்கள் எரிந்து நாசம்

ஸ்பெயின் நாட்டின் கெனாரி தீவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயால் 4,000 பேர் வெளியேற்றப்பட்டு உள்ளனர். ஸ்பெயின் நாட்டில் இந்த ஆண்டு தொடக்கம் முதலே பல இடங்களில் காட்டுத் தீ பரவி 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்த தாவரங்கள் நாசமாயின. இதற்கிடையே கெனாரி தீவில் உள்ள லா கொமெரா பகுதியில் கடந்த 4ஆம் திகதியிலிருந்து காட்டுத் தீ எரிந்து கொண்டிருக்கிறது. இதனால் அப்பகுதிக்குச் செல்லும் சாலைகள் மூடப்பட்டுவிட்டன. காட்டுப்பகுதியில் குடியிருந்த 4,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். யுனெஸ்கோ அமைப்பால் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம் இந்த காட்டுத் தீயில் நாசமாயின. இதுவரை 3,000 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த காடுகள் தீயில் எரிந்து விட்டன. இதன் காரணமாக இப்பகுதியில் 104 டிகிரி பாரன்ஹீட் அளவுக்கு வெப்பம் அதிகரித்துள்ளது.

# இறந்தவர்களின் உடலை மலையில் தொங்கவிடும் சீனர்கள்




இறந்தவர்களின் உடலை பெட்டியில் வைத்து மலை உச்சியில் தொங்கவிடும் வித்தியாசமான வழக்கம் சீனா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளில் பின்பற்றப்படுகிறது. மலைஉச்சியில் உடலை வைப்பதால் அவர்கள் இறைவனை நெருங்குகின்றனர். அவர்களது ஆத்மா சாந்தியடைகிறது என்று அப்பகுதியினர் நம்புகிறார்கள்.

இறந்தவர்களை புதைக்கும் அல்லது எரிக்கும் வழக்கமே உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது. ஆனால் சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் சில பகுதிகளில் இறந்தவர்களின் உடலை ஒரு பெட்டியில் வைத்து மலை உச்சியில் தொங்கவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். வித்தியாசமான இந்த பழக்கம் ஒரு சில பிரிவினரால் மட்டுமே பின்பற்றப்படுகிறது. இந்தோனேசியா, பிலிப்பைன்ஸில் சில இடங்களில் இந்த நடைமுறை காணப்பட்டாலும் சீனாவிலேயே இந்த வழக்கம் அதிகம் உள்ளது. தென்மேற்கு சீனாவின் மடங்கப்பா என்ற பகுதியில் 3ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வசித்த போ பிரிவை சேர்ந்த பழங்குடியினர் முதன்முதலில் சவப்பெட்டிகளை மலைப் பகுதிகளில் தொங்கவிடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். நீண்ட காலமாக நோயால் பாதிக்கப்பட்டு மரணத்தைநெருங்கிக் கொண்டிருப்பவர்கள், மரண தருவாயில் இருப்பவர்களை சவப்பெட்டியில் வைத்து மலைஉச்சிக்கு எடுத்துச்சென்று தொங்கவிடுவார்கள் என்று புராதன குறிப்புகளில் உள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது புனிதமான செயல். மற்ற மக்களிடம் இருந்து விலக்கி எடுத்து சென்று, மலை உச்சியில் வைப்பதால் அவர்கள் இறைவனை எளிதில் நெருங்குகின்றனர். இறந்த பிறகு, அவர்களது ஆத்மா சாந்தியடைகிறது என்று அவர்கள் நம்புவதாகவும் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சீனாவின் கிழக்கு பகுதியில் வசிக்கும் ஒரு சிலர் தற்போதும் இந்த முறையைப் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக தீவிர ஆராய்ச்சிகளும் நடந்து வருகிறது.

# வெளிநாடுகளில் பொய்ப் பரப்புரை சம்பந்தன் மீது குற்றச்சாட்டு

இலங்கை அரசுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வெளிநாடுகளில் பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குற்றம்சாட்டியுள்ளார். கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாளைக்குக் கூட நாம் பேச்சுக்களைத் தொடங்கத் தயாராக உள்ளோம். ஆனால் அது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பது பற்றியதாகவே இருக்க வேண்டும். இரா.சம்பந்தன் வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிரான பொய்யான பரப்புரைகளை மேற்கொள்கிறார். எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ முஸ்லிம் நாடுகள், ஆபிரிக்க நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளின் ஆதரவை வென்றெடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் உள்ள இரண்டு புலம்பெயர் குழுக்கள் இலங்கைக்குப் பொருளாதார அழிவை ஏற்படுத்த முனைகின்றன. ஒரு குழு, பொய்யான வதந்திகளையும், நாட்டின் மீது இனவாதக் குற்றச்சாட்டுகளையும் சுமத்தி அனைத்துலக முதலீடுகளைத் தடுக்கப் பார்க்கிறது. இன்னொரு குழு, அதிநவீன தொடர்பாடல் கருவிகளின் மூலம், அனைத்துலக அளவில் இலங்கையின் நற்பெயரைக் கெடுத்து, இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைத் தடுக்க முனைகிறது. என்னதான் செய்தாலும், புலிகள் ஆதரவு சக்திகளால் அதிகாரத்தைப் பெறமுடியாது. இதை புலம்பெயர் தமிழர்கள் நன்றாக அறிவார்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கால்நடைகள் பதிவு வேலணையில் ஏற்பாடு

வேலணைப் பிரதேச செயலக பிரிவினைச் சேர்ந்த வீடுகளில் வளர்க்கப்படுகின்ற மாடுகள் அனைத்தையும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் வேலணையில் அமைந்துள்ள கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவுகளைச் செய்து மாடுகளுக்கான காதுப் பட்டிகளைப் பெறறுக்கொள்ளுமாறு வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் அறிவித்துள்ளார்.

காதுப் பட்டிகள் இல்லாத மாடுகள் அனைத்தும் கட்டாக்காலி மாடுகளாகக் கருதப்பட்டு பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பொது ஏலத்தில் விடப்பட்டு விற்பனை செய்யப்படுமென அறிவிததுள்ளனர். (05,85)

# புதிய மதுபான நிலையங்களுக்கு யாழில் அனுமதி இல்லை

யாழ்ப்பாணத்தில் புதிய மதுபான விற்டனை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் யாழ். அலுவலக உதவி அத்தியட்சகர் என். சோதிநாதன் தெரிவித்துள்ளார். மகிந்த சிந்தனையில் "போதை ஒழிப்போம்" என்னும் தொனிப் பொருளின் கீழ், 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மதுபான விற்பனை நிலையங்களுக்கு புதிய அனுமதிகள் வழங்குவதற்கு மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அத்துடன் அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் மதுபான விற்பனை நிலையங்கள் தவிர்ந்த ஏனைய மதுபான விற்பனை நிலையங்களை மூட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# கைதடியில் விபத்து முதியவர் ஸ்தலத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்திப் பகுதியில் நேற்று நண்பகல் நடைபெற்ற வீதி விபத்தொன்றில் முதியவர் ஒருவர் பலியானார். கைதடி தெற்கைச் சேர்ந்த கணபதி நீதன் (வயது-75) என்பவரே விபத்தில் பலியானவராவார்.

இவரது சடலம் நேற்றுப் பிற்பகல் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் சாவகச்சேரி பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனச் சாரதி சாவகச்சேரிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (பா)

## உயர்தர...

இடம்பெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களில் நான்கு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, வினாத்தாள் ஒன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம் உரிய நேரத்தில் பரீட்சை நிலையத்திற்கு கிடைக்காத காரணத்தால் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் விவசாய பாடத்திற்கு தோற்றிய மாணவர்கள் கடந்த சனிக்கிழமையன்றும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விவசாயப் பாடத்திற்கான இரண்டாம் பாக வினாத்தாளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம் தாமதமாகவே பரீட்சை நிலையத்திற்கு கிடைத்ததாக சங்கத்தின் பிரதம செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்

இவேவேளை 2012 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு நீதி கிடைக்கச் செய்வேன் எனக் கூறியுள்ள பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.ஜே.புஷ்பகுமார, பல வினாத்தாள்களில் காணப்படும் தவறுகள் காரணமாக எவரும் பாதிப்புக்கு உள்ளாகமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

முன்னைய வருடங்களிலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களில் தவறுகள் காணப்பட்டன. ஆனால் அப்போது ஊடகங்கள் இதை பெரிதுபடுத்தாதபடியால் இது பெரிய பிரச்சினையாக்கப் படவில்லை. வினாத்தாள்களில் தவறுகள் காணப்பட்ட வேளைகளில் பரீட்சார்த்திகளுக்கு நீதி கிடைப்பதை பரீட்சைகள் திணைக்களம் உறுதி செய்துவந்துள்ளது என அவர் கூறினார்.

## தமிழகத்தில்...

கருதுகின்றனர். அவர்களுக்கு உண்மை நிலையை விளக்கவேண்டும்.

ஈழத் தமிழர்களின் பிரச்சினையை வட மாநிலத்தவர்கள் அறிந்து கொள்ளவே இல்லை. ஈழத்தமிழர்கள் என்றால் விடுதலைப் புலிகள், பயங்கரவாதிகள் என்றே அவர்கள் கருதி வருகின்றனர். எனவே, ஈழத்தமிழர்களின் உண்மை நிலையை விளக்க, வட மாநிலங்கள் முழுவதும் டெசோ அமைப்பு கூட்டங்களை, நடத்த வேண்டும். இலங்கையில் தமிழர்கள் சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்பே வசித்து வருகின்றனர். அவர்கள் அந்த நாட்டின் உண்மையான குடிமக்கள். அவர்களை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது கண்டிக்கத்தக்கது. ஈழத் தமிழர்களின் பிரச்சினை என்பது தமிழ்நாட்டு பிரச்சினை மட்டுமல்ல. காஷ்மீர் பிரச்சினை வேறு, ஈழத்தமிழர்கள் பிரச்சினை வேறு. ஈழப் பிரச்னைக்குத் தீர்வு காண மத்திய அரசை வலியுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மனிதாபிமான...

உதவ முன்வருவதில்லை என பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். கடந்த மே, 2009 இல் யுத்தம் முடிந்த பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள கணிசமான முன்னேற்றங்களை மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள மனிதாபிமான உதவிகளுக்கான செயற்பாடுகளின் பணிப்பாளர் ஜோன் ஜிங் பாராட்டியுள்ளார்.

கடந்த 3 வருடங்களில் இலங்கை அடைந்துள்ள விரைவான மீள் குடியேற்றம், மேல்கட்டுமான அபிவிருத்தி என்பன குறிப்பிட்டு பேசும் வகையில் உள்ளதெனவும் தெளிவாக காணக்கூடியதாக உள்ளதெனவும் ஜிங் தெரிவித்துள்ளார்.

## தமிழரின்...

மக்கள் கேட்கிறார்கள். அதற்கு என்ன பதில் கூறுவது என்று அமைச்சரைக் கேட்டேன். அதனை அவர் தவறாக எடுத்துக்கொண்டு என்னை மீள அழைத்துவிட்டார் போலும் என்று கூறினார். இந்தக் கேள்வி குறித்து அமைச்சர் தன்னிடம் சத்தம் போட்டதாகவும், அதற்கான பதில் உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்று அவர் கூறியதாகவும் கொடஹே கூறினார்.

ஆனால், மக்களுக்கு நம்பகத்தன்மையில்லாத பதிலைக் கூறமுடியாது என்றும், நம்பகத்தன்மையுடனான பதிலைத்தான் தான் கூறமுடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். அதேவேளை, தனது கடந்தகால பணிகளை கருத்தில் எடுக்காது தான் மீள அழைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

## சிறுதொழில்...

இதன்போது வாழ்வெழுச்சிக் கண்காட்சியின் போது கைத்தொழில் அபிவிருத்தி சபை, பனை அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்ட 400 இற்கும் மேற்பட்ட சிறுதொழில் முயற்சிகளில் தமது பதிவுகளை மேற்கொண்டிருந்தோரில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மற்றும் கைத்தொழிலாளர்களின் தொழிற்துறைகளை மேம்படுத்தும் பொருட்டு, வங்கிகள் ஊடாக இலகுகடன்களை வழங்குவது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதில் இருபதிற்கும் மேற்பட்ட வங்கிகள் கலந்து கொண்டதுடன், 80 வீதமான சிபார்சுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பிணைகளை அடிப்படையாகக் கொண்டில்லாமல் கருத்திட்டங்களின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இக்கடன் உதவிகள் வங்கிகள் மூலமாக வழங்கப்படவுள்ளன.

இதன்பிரகாரம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் மாவட்டங்கள் தோறும் வாழ்வெழுச்சிக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டு வரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட வாழ்வெழுச்சிக் கண்காட்சியின் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக இலகு கடன்களைப் பெற்றுக் கொடுப்பதுடன், அதனூடாக துறைசார்ந்த தொழிற்துறைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்மூலம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் பல நூற்றுக்கணக்கான பயனாளிகள் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வாய்ப்புக் கிட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி வங்கிகள் ஊடா்ன இலகுகடன் திட்டம் தொடர்பான விளக்கவுரையாற் றியதைத் தொடர்ந்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில் சிறுதொழில் முயற்சியாளர் களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி அவர்களது உற்பத்திகளை நவீனப்படுத்தி அவற்றுக்கான சிறந்த சந்தைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு இலகுகடன்களை எமது அமைச்சின் மூலமாக ஏற்படுத்திக் கொடுப்பதே எமது முக்கிய நோக்கமெனவும், மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கில் இது முக்கிய செயற்திட்டமெனவும் சுட்டிக காட்டினார்.

இதனிடையே வங்கிகளினது பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் நேரில் சென்று ஆராய்ந்தறிந்து கொண்டார். இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க, வாழ்வெழுச்சித் திட்டப்பணிப்பாளர் கமகே, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோருடன் வங்கிகளின் துறைசார்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## நீதிமன்றில்...


தாங்கள் பதிவு செய்திருப்பதாகவும், தமது விசாரணைகளின் மூலம் அமைச்சருடைய சகோதரரே நீதவானுடன் தொலைபேசியில் பேசியதாகத் தெரியவந்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

சி.ஐ.டி.யினர் நீதிமன்றத்திற்கு கையளித்துள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கையில் எவரையும் பெயர் குறிப்பிட்டு சந்தேக நபராகக் குறிப்பிடாமல் இருந்ததை சுட்டிக்காட்டிய நீதவான் திசாநாயக்க ஒரு விசாரணை அறிக்கையில் சந் தேக நபர் எவரையும் பெயர் குறித்து குறிப்பிடாமல் எவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்க முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார். அச்சுறுத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட தொலைபேசியின் உரிமையாளர் யார் என்பது தெரிந்த பின்பும் ஏன் சந்தேக நபராக எவரையும் அறிக்கையில் சி.ஐ.டி.யினர் குறிப்பிடவில்லை என்றும் நீதவான் கேள்வி எழுப்பினார். பின்னர் வரும் 27 ஆம் திகதி அமைச்சர் றிசாத் பதியுதீனை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் நீதவான் ஜுட்சன் தரபபில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவி அனோமா குணதிலக கமகே, செயலாளர் சஞ்சே கமகே மற்றும் சிலர் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

மன்னார் நீதிமன்றத்தின் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்திய வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். ஆயினும் மன்னார் சட்டத்தரணிகளான நேரில் கண்ட சாட்சிகள் பெயர் குறிப்பிட்டு தெரிவித்திருந்த 27 பேரும் தலைமறைவாகியிருப்பதனால் அவர்களைத் தங்களால் கைதுசெய்ய முடியவில்லை எனக் கூறிய பொலிஸார், அவரகளைக் கைது செய்வதற்காக நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்டிருந்த உத்தரவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். இதனையடுத்து கைது செய்யப்பட்டுள்ள 13 பேரையும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் செய்யப்பட்ட வாய்மொழி மூலமான பிணை விண்ணப்பத்தையடுத்து, எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்யுமாறு கூறிய நீதவான் திசாநாயக்க இந்த வழக்கு தொடர்பில் தேடப்படுகின்ற 27 பேரையும் உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என பொலிசாருக்கு உத்தரவிட்டு வழக்கை வரும் 27 ஆம திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

# நல்லூர்க் கந்தனுக்கு மற்றுமொரு கோபுரம்



(திருநெல்வேலி)

நல்லூர் வடக்கு வீதியில் நல்லூர்க் கந்தனுக்கு நவதளக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட வுள்ளது.

இதற்கான நவதானியம் விதைக்கும் நிகழ்வு கடந்த கார்த்திகைத் திருவாயில் இடம்பெற்றது.

கடந்த வருட மஹோற்சவ காலத்தின் போது நல்லூரானின் தெற்கு வாசல் கோபுரத்துக்கான குடமுழுக்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. ஆறுமுகசுவாமி வாசலுக்கு மேலாக இக்கோபுரம் அமைக்கப்பட்டடது.

வடக்குத் திசையில் அமையவுள்ள இக்கோபுரம் அலங்காரக் கந்தனுக்கு மேலும் அழகூட்டுவதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (137)

# முஸ்லிம் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே மோதல்



(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளில் அமைச்சர் ஹக்கீம் மற்றும் அமைச்சர் அதாவுல்லா ஆகியோர்களின் ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு 7.00 மணியளவில் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இம்மோதல் ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் அதாவுல்லா சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் எம்.எஸ். உதுமா லெப்பையின் தேர்தல் காரியாலங்கள் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அக்கரைப் பற்று வெல்ல பாதுகாப்பு வீதி யில் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு நடைபெறவிருந்த இடத்தின் மீது அமைச்சர் அதாவுல்லாவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

அதன் பின்னர் பதற்றம் நில வியதாகவும் அமைச்சர் ஹக்கீம் அக்கரைப்பற்று சென்று கொண் டிருந்தபோது பாதுகாப்பு பிரச் சினையால் இப்தார் நிகழ்வில் அவர் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து ஏற்பட்ட பதற்ற நிலையை தணிக்க அங்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# விழாக்கால வீதி ஒழுங்கு மாநகர சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேர்த்திருவிழா நாட்களில் நேர்த்திக் கடன் செய்யும் பக்தர்களுக்கான சில ஒழுங்கு விதிகள் குறித்து யாழ்.மாநகர சபையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திருவிழா நாட்களிலும் வீதிவலம் வரும் சுவாமி காலை 9.00 மணிக்கு ஆலயத்தினுள் சென்றதன் பின்பே நேர்த்திக்கடன் செய்ய வரும் அடியவர்கள் வீதித்தடையில் இருந்து உள்ளேவர அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே இத்தினங்களில் நேர்த்திக்கடன் செலுத்த வரும் அடியார்கள் காலை 9.00 மணிக்கு வீதித்தடையை வந்தடையுமாறு யாழ்.மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா அனுப்பி வைத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (பா)

# கோரிக்கை நிறைவேறும் வரை வேலை நிறுத்தம் தொடரும்

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடரப் போவதாக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபையிலுள்ள சிலர் தமக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் சிலரை பதவி விலக்கப் போவதாகவும் மிரட்டியுள்ளனர். ஆனால் நாம் எமக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் கிடைக்கும் வரை வேலை நிறுத்தத்தினை முன்னெடுப்போம் என அவர்கள் குறிப்பிட்டனர்.

38.7 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தாலும் அது நிறைவேற்று அதிகார மட்டத்தில் உள்ளவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது என ஐக்கிய தொழிற் சங்க முன்னணி தெரிவித்தது.

இதேவேளை, மின்சார சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்து இந்த வேலை நிறுத்தத்தை தடுக்கும் படி மின்சாரம் நுகர்வோரின் தேசிய இயக்கம் மின் சக்தி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# சிறுவர் உரிமை மீறல் நல்லூரில் தாராளம்

## சட்டத்தின் பிடியில் வர்த்தகர்கள்

(திருநெல்வேலி)

நல்லூர் உற்சவ கால வர்த்தக நிலையங்களில் வயது குறைந்த சிறுவர்களை வேலைக் கமத்தியிருந்த வர்த்தகர்கள் பலர் நேற்று சிறுவர் பாதுகாப்புப் பிரிவினரால் பிடிக்கப்பட்டனர்.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு வைத்திருக்கக்கூடாது என்பது விதிமுறையாகும். இதனை மீறித் தமது கடைகளில் இச்சிறுவர்களை பல கடை முதலாளிகள் வேலைக்கு அமர்த்தியிருந்தனர்.

இதனையறிந்த சிறுவர் பாதுகாப்புப் பிரிவினர் நேற்று நல்லூர் பகுதியில் திடீர்ச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது இச்சிறுவர்கள் கண்டுபிடிக் கப்பட்டனர். 16 வயதுக்குட்பட்ட இச்சிறுவர்களில் சிலர் பாடசாலை செல்பவர்களாகவும் மற்றும் சிலர் வீட்டில் பெற்றோருடன் வாழும் சிறுவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

சுமார் பத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் இப்படிக் கடைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது. கற்பூரம், தும்புமிட்டாய், பலூன் போன்ற பொருட்களை இடத்துக்கிடம் கொண்டு சென்று விற்பனை செய்வதிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (137)

# தொழிற்சங்கவாதியின் வீட்டு வாசலில் மலர் வளையம்



இலங்கை மின்சார சபையின் ஒருங்கிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் உறுப்பினரும், அதன் பிரதான ஊடகப் பேச்சாளருமான ரஞ்சன் ஜெயலாலின், அத்துருகிரியவில் உள்ள வீட்டுக்கு எதிரில் இனந்தெரியாதவர்கள் மலர் வளையம் ஒன்றை வைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

கொலை அச்சுறுத்தல் விடுத்து, மலர் வளையங்களை வைத்து ஆட்சியாளர்கள் தொழிற்சங்க உரிமைகளை நசுக்க முயற்சித்தா லும் உயிரை துச்சமென கருதி, ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுத்து கொடுப்பதில் பின் நிற்கப்போவதில்லை என ஜெயலால் தெரிவித்துள்ளார்.

மலர் வளையத்தை யார் வைத்தனர். எவரது தேவைக்காக வைக்கப்பட்டது என்பதை தான் அறியவில்லை எனவும் அடக்குமுறையின் தன்மை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் ஒருங்கிணைந்த தொழிற் சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பு அண்மையில் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார சபைக்கு 5000 பேர் நியமனம்

சேவை அவசியம் கருதி தற்காலிகமாக 5000 பேரை சேவையில் இணைத்துக் கொள்ள தீர்னித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் உப தலைவர் அநுர விஜேபால நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து மூன்று நபர்கள் அடங்கிய குழு அமைத்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சீன நிறுவனத்தின் செயற்பாடு அதிருப்தியடையும் மின்சாரசபை

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலைய உற்பத்தியில் மீண்டும் மீண்டும் கோளாறு ஏற்படுவதால் இதனை நிர்மாணித்த சீன நிறுவனத்திற்கு இலங்கை மின்சார சபை தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இதுவரை நிழ்ந்த அனைத்துக் கோளாறுகளையும் அவர்கள் சரிசெய்துகொடுத்ததாக இலங்கை மின்சார சபையின் உபதலைவர் அநுர விஜேபால தெரிவித்தார்.

தற்காலிகமான தீர்வாக குறைபாடான பாகங்களை அகற் றிவிட்டு தரமான பாகங்களைப் பொருத்தி அனல் மின் நிலை யத்தின் தரத்தை உயர்த்துமாறு சீன நிறுவனத்திற்கு ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளதாகவும் விஜேபால தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளின் போது மேலுமொரு விநியோக மார்க்கம் நிர்மாணித்து, மின் நிலையத்தின் உற்பத்திகள் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# வானொலியில் வர்ணனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆயலத்தில் நாளை இடம்பெறவுள்ள சப்பறத்திருவிழா, நாளை மறுதினம் இடம்பெறவுள்ள தேர்த்திருவிழா, 17ஆம் திகதி இடம்பெறவுள்ள தீர்த்தோற்சவ நிகழ்வுகளை இலங்கை வானொலி யாழ்.எவ்.எம் 92.2, 102 அலை வரிசைகளில் நேரடியாக அஞ்சல் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(60)

# அமைச்சர்களுக்கு வீடுகள்

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வீடுகளை வழங்குவதற்காக பம்பலப்பிட்டியில் உள்ள 20 மாடிகளைக் கொண்ட வீட்டுத்தொகுதியை கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

425 மில்லியன் ரூபாவுக்கு இந்தக் குடியிருப்பு வளாகத்தை கொள்வனவுசெய்ய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன், வீடுகளை மேலும் மேம்படுத்துவதற்காக 110 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கொழும்பில் வீடுகளைக் கொண்டிராத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு இந்த வீடுகள் வழங்கப்படவுள்ளன. வாடகை வீடுகளில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# இணையத்தளப் பதிவு விசா ஒரு கோடிக்கு மேல் வருமானம்

இந்த வருடத்தின் முதல் 7 மாத காலப்பகுதியினுள் இணையத்தள பதிவு மூலமான விசா அனுமதி ஊடாக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலாநந்த பெரேரா தெரிவித்தார். இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ள இந்தத் திட்டத்தின் மூலம் விசா விண்ணப்பத் தினை பெற விரும்புவோர் இலகுவாக தமது விசா அனுமதியினை பெற முடிந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுரைப் போட்டி

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையினரால் நடத்தப்படவிருக்கும் கலாசார விழாவையொட்டி கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கட்டுரைப் போட்டி திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் நடத்தப்படவுள்ளது.

போட்டிக்கான ஆக்கங்களை தலைவர், கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், பூநகரி என்ற முகவரிக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (149)

# இன்னிசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் சப்பறத் திருவிழாவை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகம் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீகப் பேருரையினைத் தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா குழுவினரின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

எதிர்வரும் தீர்த்தோற்சவத் தினத்தன்று இரவு 7.30 மணிக்கு திருகோணமலை சைவப்புலவர் திருமதி சறோஜினிதேவி சிவஞானத்தின் இசையரங்க நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (60)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.